# சுதந்திரப் போர்

## இரண்டாம் பாகம்

## அச்சுறுத்தும் அறிகுறிகள்

சத்யமூர்த்தி தம்பதிகளும், ரகுபதியும் கல்கத்தா புறப்படத் தயாரானார்கள். இன்னும் சில மணி நேரங்கள் தான் கணவன் இருப்பார் என்று ராஜேசுவரிக்கு உள்ளம் சற்று பளுவாகிவிட்டது.

"மாமா, மாமா, நானும் ஊருக்கு வரப் போகிறேன்!" என்று சத்யமூர்த்தியின் தோள் மேல் சாய்ந்து உறவாடும் தம்பியை ராஜேசுவரி, அதட்டாமல் மிரட்டாமல் பார்த்தாள்.

"கல்கத்தாவிற்குப் போனால் ஜோராகத்தானிருக்கும்! நான் கூடப் பார்த்ததேயில்லை! அவன் கல்கத்தா என்று தெரிந்து கொள்ளாமல் ஏதோ ஊர் என்று ஆசைப்படுகிறான்! கல்கத்தா எப்படியிருக்கும் என்று கேள்விப்பட்டால், இன்னும் நச்சரிப்பான்!" என்றாள் ராஜேசுவரி, கதவின் மறைவிலிருந்தவாறே. விசாலம் மகளை உறுத்துப் பார்த்தாள். அதே சமயம் ரகுபதியும், சத்யமும் ஒருவரையொருவர்ப் பார்த்துக் கொண்டனர். சத்யமூர்த்தி சடாரென எழுந்து வந்தார். ராஜேசுவரியும், விசாலமும், பவானியும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தார். பவானியை அவர் பார்த்த பார்வை, "கேட்டாயா உன் மன்னி சொன்னதை?" என்று கேட்டது.

ராஜேசுவரிக்கு 'ஏன் அப்படிச் சொன்னோம்' என்று கூசியது உடல். பவானியைசுப் பார்த்து சத்யம், "சரி, கிளப்பு உன் மன்னியையும்! உன் அண்ணா மறுபடியும் இந்த வழியாகத் தானே போகணும்! இறக்கிவிட்டுவிடுகிறார்!" என்றார்.

"நிஜம்மாவேவா? அச்சச்சோ, வெறுமனேதான் சொன்னேன் நான்!" என்று ராஜேசுவரி திகைத்தாலும், கல்கத்தா செல்லும் ஆசை அவளை மகிழ்வித்தது. ரகுபதியை வற்புறுத்திக் கேட்கும் அவசியமிருக்கவில்லை. அவன் நோக்கம், அவனுடைய நோக்கிலேயே மிளிர்ந்தது. விசாலம் தான் தயங்கினாள், பயந்தாள், ஆட்சேபணை செய்தாள். "பெரியவர்களைக் கேட்காமல் இப்படி ஒரு காரியம் செய்ய எனக்கு இஷ்டமில்லை!" என்றாள்.

பவானி, இத்தனை நேரமும் காட்டாத அக்கறையுடன், "பரவாயில்லை மாமி, எங்கள் அப்பா கேட்டார், 'மன்னியை ஒத்தாசைக்கு அழைத்துக் கொண்டு போயேன்!' என்று வேடிக்கையாகத்தான் கேட்டார் மாமி! அப்பா சொன்னது பலிக்கறது! நானும் பார்த்தாச்சு, எங்கள் அப்பா வாக்கு விசேஷ வாக்கு; எதையாவது சாதாரணமாகச் சொல்லிவைப்பார், நிஜமாகியே விடும்!" என்று சொன்னதைக் கேட்டு, ராஜேசுவரி, "அப்படியா?" என்று வியந்து மாமனார் பால் பக்தியைப் பெருக்கிக் கொண்டாள்.

"மாமி என்ன சொன்னார்?" என்று கேட்க விசாலத்திற்கு ஆவல். "மாமி ஒப்பியிருந்தால் முதலிலேயே சொல்லமாட்டார்களா? இந்த அவசரக் குடுக்கைப் பெண்ணின் வெகுளித்தனத்தினாலல்லவா இந்தத் திடீர் ஏற்பாடு?" என்று வேதனைப்பட்டாள். ஆனால் நாவை அடக்கினாள். தன் கணவர் உற்சாகமுடன் ராஜேசுவரிக்கு ஒரு பெட்டியைக் கொணர்ந்து தந்து, "தயார் செய்து கொள்!" என்று கூறிவிட்டார், ராஜேசுவரி முகமெல்லாம் முறுவலாக நின்றாள், என்றெல்லாம் யோசித்த பின் விசாலம் தன் கவலையை ஒடுக்கினாள். "நண்பர்கள் போல இளந்தம்பதிகள் பழகுவதை நான் வரவேற்கிறேன்!" என்று கணவர் கூறியதையும், சத்யமூர்த்தி சிரித்து, "நண்பர்கள் சண்டை பிடித்துக் கொண்டால் விலகிவிடுவார்கள்; ஆனால் புருஷன் மனைவி சண்டை பிடித்துக் கொண்டால் அதிகம் நெருங்கிவிடுவார்கள் சார்!" என்று கண்டனம் செய்ததையும் கவனித்திருந்தாளல்லவா விசாலம்?

அத்தனைபேரும் ஒரு ஏற்பாடு செய்யும்பொழுது அதைப் பெண் புத்தி காட்டித் தடுப்பது நன்றாயிராது என்று தோன்றவே, விசாலம், ரயிலுக்கு அனுப்பும் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, வீட்டிலிருந்து புறப்படும் மகளை பவானியிடம் ஒப்புவித்து, "குழந்தைத்தனம், ஒன்றும் தெரியவில்லை, புறப்பட்டுவிட்டாள். பார்த்துக் கொள்ளுங்கள். பெரியவர்களின் சம்மதமில்லாமல் அனுப்ப எனக்குக் கூசினாலும், உங்கள் எல்லோருடைய ஆசைகளைக் கெடுக்கவும் இஷ்டமில்லை. பார்த்துக் கொள்ளுங்கள். தெரியாததைச் சொல்லிக் கொடுங்கள்," என்று சொல்லி குரல் தழதழத்தாள்.

கண்ணனை இறுக அணைத்து முத்தமிட்டுவிட்டு, ராஜேசுவரி உற்சாகமாக வண்டியில் ஏறினாள். ரயிலடி வந்து சேர்ந்த பிறகு தான், "எப்படி திடுதிப்பென்று வந்துவிட்டேன்? நிஜமா இது? எப்படி மனந் துணிந்தேன், பெற்றோரைப் பதினைந்து நாள் பிரிவதற்கு?" என்று யோசித்தாள். "நான்தான் காரணம்!" என்று கூறுபவன் போல் ரகுபதி அவளைப் பார்த்து இளமுறுவல் செய்தபோது தான், ராஜேசுவரி, "நான் புக்ககம் போக இது ஒரு ஒத்திகை! நான் புக்ககத்தில் பழகுவதற்கு முன் பயிற்சி வேண்டுமல்லவா?" என்று சமாதானமடைந்தாள்.

"எல்லாம் நன்மைக்கே!" என்னும் மனோபாவம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. கலியாணத்தின்பொழுது நடந்த அமளியினால் அல்லவா, சுருதியுடன் பாடும் பழக்கம், பிடிவாதக் குறைவு, ஒரு பயபக்தி எல்லாம் ஏற்பட்டன என்று சந்தோஷப்பட்டாள் அவள்.

“சித்ராவை நன்றாக எடுத்துக் கொள்கிறாயே! இந்தா, வைத்துக் கொண்டிரு,” என்று பவானி பாராட்டி உதவி கேட்பதை எண்ணி ராஜேசுவரி, கண்ணனையும், ராதையையும் எடுத்துப் பழக்கம் ஏற்பட்டதைக் குறித்துப் பெருமிதமடைந்தாள். அது போலவே மற்ற பாரட்டுக்களைப் பெறவும், புக்ககத்திலும் புக்ககத்தூரிலும் பழகுவதற்கு முன்பு, பவானியின் அனுபவ அறிவினைப் பகிர்ந்து கொள்ளவும் ஆவலாக இருந்தாள்.

ரகுபதியின் கனிந்த பார்வைகளும், சத்யமூர்த்தியின் குஷிப் பேச்சும், பாவனியின் யோசனையான கேள்விகளும் ராஜேசுவரிக்கு இன்ப அனுபவமாகப் பட்டது.

"கேஸ் தட்டிகள் பிய்ந்துவிடவில்லையே?", "நிலைக்கண்ணாடியின் மீது திரை போட்டுவிட்டு வந்தீர்களா?" என்று திடீர் திடீர4242ெனா பவானி குடும்பக் கவலைப்பட்டதையும், அந்தத் தம்பதிகளின் முகங்கள் சித்ருவைப் பார்த்ததும் மலர்வதையும் கண்டிருந்த ராஜேசுவரி, தன் இன்ப வாழ்வின் ஒரு பகுதியை ஒத்திகை பார்ப்பதாகவும் கற்பனை செய்தாள்.

கலைந்திருந்த குடித்தனத்தை மீண்டும் செம்மையாக்கி இனிது துவங்கும் பொறுப்பு பவானியின் பொறுப்பாகியது. அவள் பரபரப்புடன் செய்த வேலைகளை பார்த்தும், உரிமையுடன் இட்ட வேலைகளைச் செய்தும், ராஜேசுவரி பல விஷயங்களையும் வேலை நுணுக்கங்களையும் அறிய முயன்றாள். சித்ராவை அலுக்காமல் சலிக்காமல் எடுத்துப் பராமரித்தாள். கணவனின் தங்கைக்கு உதவியளிப்பதை, கணவனுக்குச் செய்யும் சேவையாகப் பாவித்து அன்புடன் பணியாற்றினாள். இரண்டே இரண்டு அறைகள் கொண்ட இல்லம் ஆதலால், இரண்டே நாட்களில் நறுவிசு வேலையெல்லாம் முடிந்தது.

பவானி பாடும் சில தமிழ்க்கீர்த்தனைகளைக் கற்க ராஜேசுவரி ஆவல் கொண்டிருந்தாள். ஒரு பிற்பகல் தன் ஆசையை வெளியிட்டாள். "அக்கா, 'காணக் கண் கோடி' கற்றுத் தருகிறீர்களா? எனக்குத் தமிழ் பாட்டே ஒன்று கூட தெரியாதேக்கா!" என்று சொன்னாள்.

"கற்றுத் தருகிறேன்" என்று சொல்லி நெஞ்சம் குளிர வைத்த பவானி, அத்துடன் நிறுத்தாமலே மேலே பேசினாள். "ஆனால் நீ அதைச் சரியாகப் பாடாவிட்டால் எனக்குத் தான் . . . நீ, பல்லவி பாடிய பின்பும், அனுபல்லவி சரணம் பாடிய பிறகும், கடைசியில் முடிக்கும் பொழுதும் ஒரு தினுசாக முடிக்கிறாய்; அது நன்றாக இல்லை; ஆந்திர பாணிக்கும் நம்ம பாணிக்கும் வித்தியாசமிருக்கும்; நீ அப்படிப் பாடக் கூடாது, நான் கற்றுத் தந்தால்!" என்றாள் பவானி, மெல்லச் சிரிக்க முயன்றவாறே.

"எனக்குச் சொல்லித் தருகிறபடியே பாடுகிறேன், பாடுகிறேன், அக்கா," என்று குழறும் குரலில் பதில் அளித்தாள் ராஜேசுவரி.

ராஜேசுவரிக்குப் பாட்டின் பல்லவி எளிதில் பிடிபட்டுவிட்டது. அனு பல்லவியையும் கற்றுக் தந்துவிடச் சொன்னாள் ராஜேசுவரி.

"நீ பல்லவி கடைசியில் நிறுத்தும் அகாரம் சரியில்லை! எப்படிக் கற்றுத் தருவது?" என்று பவானி கேட்டபோது சத்யம், படித்துக் கொண்டிருந்த பத்திரிகையைத் தாழ்த்தி, "காம்போதிக்கு அப்படி நிறுத்தலாம்," என்றார்.

"அவள், எல்லாவற்றுக்குமே அப்படித்தான் நிறுத்துவாள்! நீங்கள் கவனித்ததில்லை போலிருக்கு!" என்று கூறி வீணையைப் பெட்டிக்குள் வைத்துவிட்டாள் பவானி.

நிலைமை ராஜேசுவரிக்குக் கஷ்டமாகியது. அவர்களுடைய சர்ச்சைக்கு ஏன் இலக்கானோம் என்று ஏங்கினாள்.

"இது கஷ்டமான பாட்டு அக்கா! வேறே பாட்டு கற்றுக் கொள்கிறேன்," என்றாள் மெல்ல.

"பல்லவி பிடிபட்டிருக்கிற வேகத்தைப் பார்த்தால், கீர்த்தனை நாலு நாளில் வந்துவிடும்!" என்று சத்யம் கூறிய போது, பவானியின் கண்கள் ரகுபதியைப் பார்த்தன. தொலைவில் நின்றவாறே ரகுபதி ராஜேசுவரியை பார்த்த கனிவுப் பார்வையை அவள் கண்டாள்.

"பெண்டாட்டியைப் பற்றி மைத்துனன் சொல்லிக் கொள்ள வேண்டியதையெல்லாம் நீங்களே சொல்லிவிடுங்கள்!" என்று பவானி ஒரு குண்டைப் போட்டாள், தன் கணவன் மீது!

"என் பெண்டாட்டியைப் பற்றியா?" என்று சிரித்து, மைத்துனன் ரகுபதியைப் பார்த்து சத்யமூர்த்தி கண் சிமிட்டினார்.

"அப்படி இருந்தால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்?"

"எப்படி? சிவப்பாய் ..... சற்றே பருமனாய்!"

"ஆமாம். ஒல்லொல்லியாய்க் கொடி மாதிரி நான் எப்படி இருப்பேன்? கல்யாணமாய் இரண்டே கால் வருஷமாச்சு! குழந்தை பிறந்து நாலு மாசமாச்சு!" லேசான சிரிப்பு எட்டிப் பார்த்தது பவானியின் இதழ்களிலே. பவானி அதிகம் சிரிக்க மாட்டாள். அழகிற்கு சிறு ஊறு செய்யும் ஒரே அம்சம் பல்வரிசையின் முன்புறம் சற்று தூக்கியிருக்கும் இரண்டே பற்கள் தாம். அதனால் உதடுகளைச் சற்றுக் கூட்டியே வைத்துக் கொள்வது அவள் வழக்கம்.

"ஐயோ, கொடிபோல் பச்சையாகவா இருந்தாய் நீ முன்பு? பாம்பு போலவா?"

"போதுமே!"

நல்லவேளை, பவானி பிணக்கு நீங்கி, முகமலர்ந்து சிரித்தாள். ஆறுதலடைந்தவள் ராஜேசுவரிதான். தம்பதிகளின் வாக்குவாதம் எதனால் வளர்ந்தது, முடிந்தது என்பதையெல்லாம் உணர்ந்து ரசித்துவிட்டவன் போல் ரகுபதி, தன் இளம் மனைவியைப் புன்னகையுடன் பார்த்தான்.

குழந்தை சித்ருவின் அழுகுரலைக் கேட்டு பவானியை முந்திக் கொண்டு ராஜேசுவரி விரைந்தாள்.

ராஜேசுவரியைத் தொடர்ந்து வந்த பவானி, கையிலே மகவை வாங்கிக் கொண்டு, "நீ போய் குமுட்டி பற்ற வை; டீ போட வேண்டாமா? நான் குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும்" என்று படபடத்தாள்.

"ஆகட்டும் அக்கா, சாதாக் கரிக் குமுட்டியா?

"ஆமாம், கல் கரி தான் பற்றிவிட உனக்கு தெரியவில்லையே!" ராஜேசுவரி, சிரமப்பட்டு முறுவலித்துச் சென்றாள்; அவள் மனம் பற்பல எண்ணி நொந்தது.

கல்கத்தா வந்தது முதலே ராஜேசுவரிக்கு உற்சாகம் ரொம்பக் குறைந்து போயிற்று. உள்ளத்திலே பீதி அதிகமாயிற்று; நடையிலே தடுமாற்றம் ஏற்பட்டது. பேச்சிலே குழப்பங்கண்டு விட்டது. மலைத்து மலைத்து நின்றாள். குரலிலே கம்பலையும் பார்வையிலே குழைவும் மிகைப்பட்டபோது, கண்கள் நீர் கோத்துக் கொண்டன. இத்தனைக்கும் காரணம், காதல் நோய் அல்ல; கணவனின் பராமுகமும் அல்ல; கணவனின் தங்கையிடம் காணப்பட்ட கனிவின்மை தான்!

பவானி ராஜேசுவரியிடம் அன்புடன் பழகவில்லை. பரிவோடு பேசவில்லை. அதிகாரமுடன் பணிகளை இட்டு, அந்த உதவிகளை ஏற்றுக் கொண்டே அதிருப்தியும்பட்டாள். மனமுவந்து ராஜேசுவரி செய்த வேலைகளில், பல குறைகளைக் கண்டாள். பழக்கமில்லாவிடினும், களிப்புடன் பணியாற்றிய ராஜேசுவரி, சொல்லொனா ஏமாற்றத்திற்குள்ளானாள்.

சமையலுக்கு வாங்கிய தேங்காய் கொப்பரையாகிவிட்டது. "வேறு தேங்காய் உடைக்கலாமா அக்கா?" என்று ராஜேசுவரி கேட்டுவிட்ட குற்றத்திற்காக பவானி, அந்தக் கொப்பரையின் வேறு பல சேவைகளை மறந்துவிட்டாள்! "இதை என்ன செய்கிறது அப்புறம்? இதையே தான் துருவி

அரைக்கணும். முடியாத காரியமா என்ன? நானே அரைக்கிறேன்!" என்றாள்.

ஆனால் ராஜேசுவரி, பவானிக்கு வேலையை விட்டுக் கொடாமல் தானே அரைக்க முற்பட்டாள். எளிதில் மசியவில்லை.

"நீ அதை அரைப்பதற்குள் புருஷர்கள் நாலு நடை சமையலுள்ளுக்கு வந்து போயாச்சும்மா. விடு விடு, நானே அரைக்கிறேன்" என்று பவானி அலுத்தாள்.

"இல்லை அக்கா, கொப்பரையோன்னோ, மசிய மாட்டேங்கிறது . . . "

"மாட்டேன்னு சொல்லுமா என்ன? மளமளன்னு கையை ஓட்டினால், அரையாதாக்கும்! எடு எடு, விழுதைக் கொண்டா. புளிஜலம் சுண்டிப் போயாச்சு."

சிவந்து போய், எரிச்சலாக எரிந்த ராஜேசுவரியின் கைகள், பவானியிடம் பாத்திரத்தை நீட்டியபொழுது பவானி, "நீ, நம்ம பக்கம் போய், 'அதனால் சரியாக வரவில்லை', 'இதனால் சரியாக வரவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தால். ரொம்பக் கஷ்டம். எந்த வேலையும், பண்டம் எப்படியிருந்தாலும் கோணக் கூடாது" என்று புத்தி சொன்னாள்.

'ஐயோ, வெறுந் தேங்காயைக் கூட அரைத்துப் பழகாமற் போனேனே, அம்மா!' என்று நெஞ்சம் குமுறினாள், ராஜேசுவரி. கண்களில் நீர் மல்கிவிட்டது.

"நீ நம்ம பக்கம் போய்க் கஷ்டப்படாமலிருக்க புத்தி சொல்ல வந்தால், இப்படி அழுகை வருகிறதே உனக்கு! நான் இனிமேல் உன் வழிக்கே வரவில்லையம்மா!" என்று திஷ்டூரம் பேசியவாறே, குழம்பைக் கலக்கிவிட்டாள் பவானி.

அன்றிரவு சாப்பாட்டுச் சமயம், பவானி, குழம்பைப் பரிமாறிக் கொண்டே, "தேங்காயை அரைத்தது போதாது; குழம்பு ஒத்தாற்போலக் குழம்பாக இல்லை!" என்று புருஷர்களுக்குக் காரணம் விளக்கினாள்.

"ஐயோ, கொப்பரை அது! சாதாத் தேங்காயல்லவே!" என்று கூவிவிடணும் போல் ஆவேசமும் ஏக்கமும் ராஜத்தின் நெஞ்சிலே எழுந்து அடங்கிவிட்டது.

இது போல இன்னும் எத்தனையோ சம்பவங்கள்!

ராஜேசுவரி, பவானியை, துணைவி, தோழி என்று எண்ணியிருந்ததாளல்லவா? ஆனால் பவானியோ, "நான் நாத்தனார்!" என்று சொன்னாள். அடிக்கடி சொன்னாள்.

ஒரு நாள் மாலை சத்யமூர்த்தி, "எங்கே பிடிலையும் வீணையையும் எடுத்து வாசியுங்கள். பவானி, உன் மதனியையும் உட்கார்த்து! நாத்தனாருக்கும் மதனிக்கும் மோகன வர்ணம் தெரியும் போலிருக்கே! 'உம், ஜல்தி!' என்று தூண்டிவிட்டார், உற்சாகமாக.

பவானியும் ராஜேசுவரியும் சுருதி கூட்டி மோகன வர்ணம் வாசித்துக் கொண்டிருக்கையிலே, ஒரு நண்பர் தம்பதி வந்தனர். "நிறுத்த வேண்டாம்" என்று ஜாடை காட்டும் நண்பர்களுக்கு சத்யமூர்த்தி ஆரவாரமுடன் வரவேற்புக் கூற, ரகுபதி சுமுகமாக எழுந்து நிற்க, பவானி வாசிப்பை நிறுத்தாமலே முகமலர்ச்சியும் புன்னகையும் காட்டி நண்பர்களின் வருகையை உவக்க, நண்பர்களும் சிரித்த முகத்துடன் ஆசனங்களிலே அமர, ராஜேசுவரி நிலைமையறிந்து கொண்டாள்.

வர்ணம் முடிந்ததும் வீணையை எட்ட வைத்தாள் பவானி. "ரொம்ப ஜோரான புடவை, சுமதி! எந்த கடையில் வாங்கினீர்கள்?" என்று கேட்டுக் கொண்டு பவானி எழுந்துவிட்டாள். ராஜேசுவரியும் பிடிலைக் கீழே வைத்துவிட்டு எழ முயற்சித்தபோது, சத்யமூர்த்தி தடுத்தார். "நீ இரம்மா, இரண்டு பாட்டு வாசி! பவானி! ஸேனுக்கு நம்ம ஸ்பெஷல் போட்டுக் கொடேன்! மிஸ்ஸஸ் ஸேன், மிஸ்ஸஸ் ரகுபதி ஸோலோ கேளுங்கள், காப்பி வரும் வரை!" என்று சத்யமூர்த்தி சொன்னதும், "ஆம், ஆம், கேட்கிறோம்!" என்றார்கள் நண்பர்கள்.

'காப்பி போடுகிறதென்றால் நான் போய் கொட்டை அரைத்துத் தர வேண்டாமா?' என்று ராஜேசுவரி யோசித்தாள். பிடிலை கையில் எடுக்கத் தயங்கினாள்.

"வாசியம்மா, வாசி! 'ரகுவம்ச சுதாம்புதி' வாசியேன்!" என்று தூண்டும் சத்தியமூர்த்தியின்

குரலைக் கேட்டு, பிடிலை எடுத்து அணைத்து அமர்ந்தாள். உள்ளே புகுந்த பவானியை இனி தொடருவதற்கில்லை; வில்லை போட்டாள்.

ஐந்தாறு நாளாக வாசிக்காததனாலோ, அல்லது, சத்யமூர்த்தி 'ஸோலோ' என்று குறிப்பிட்டதனாலோ, ராஜேசுவரி தன் திறமையைக் காட்டி வாசிக்கத் தொடங்கினாள். 'கதனகுதூகலம்' ராகத்தில் அமைந்த 'ரகுவம்ச' கீர்த்தனம் வெகு அழகாக வாசித்து முடித்தாள்.

நண்பர்கள் ரசிப்பதை உணர்ந்த சத்யமூர்த்தி, "இன்னொன்று வாசி!" என்றார். ராஜேசுவரி, தன் கணவனை ஒரு முறை பார்த்துவிட்டு, 'உங்களுக்காக, உங்கள் பெருமைக்காக வாசிக்கிறேன்!" என்று சொல்கிறவள் போல அடக்கமும், உற்சாகமும் காட்டியவாறே, 'நின்னுவினா நாமதெந்து' என்னும் கீர்த்தனையை வாசித்தாள். அவள் பள்ளியில் வாத்திய கோஷ்டியில் வாசித்தபோது ஜனரஞ்சகமான கீர்த்தனை என்று சர்மா வாத்தியார் அதைத் தேர்ந்தெடுத்திருந்தார். கர்னாடக சங்கீதம் ரசிக்காத வடக்கத்தியர் கூட அந்தக் கீர்த்தனையை ரசிக்க முடியும். ஆதலால், ராஜேசுவரி, அதை வாசித்து வெற்றி கண்டாள்.

யாரும் 'சபாஷ்' என்று கைகொட்டவில்லை. ஆனால் அங்கு நிலவிய அமைதியே, ராஜத்தின் இசைத் திறமையைப் பாராட்டிவிட்டது.

ராஜேசுவரி தன் கணவனைப் பார்த்துவிட்டு எழுந்துவிட்டாள். சமையலறையை நாடிப் புறப்பட்டாள். சுமதியும் எழுந்து பின் தொடர்ந்தாள்.

பவானியும் சுமதியும் பேசிக் கொண்டாலும், சுமதி அடிக்கடி ராஜேசுவரியைப் பார்த்தாள். "அக்கா, பாலை இந்த 'ஜக்'கிலே ஊற்றட்டுமா?" என்று மெல்லக் கேட்கும் குரலுக்குடையாள் சுமதியின் கண்களில் ஒரு குழந்தையாகவே தென்பட்டாள்.

காப்பி அருந்தி வெகு நேரம் உறையாடி சென்றனர் சேன் தம்பதிகள். பவானி யாருடனாவது பேசிக் கொண்டிருந்தால் நலம் என்று தோன்றியது ராஜேசுவரிக்கு. ஏனெனில் தனித்திருக்க அவள் அஞ்சினாள். எந்தச் சொல்லம்பு காத்திருக்குமோ என்று பயம்!

அவள் எதிர்பார்த்தது வீணாகவில்லை.

"நீ பாட்டுக்கு அவர் சொன்னார் என்று வாசித்துக் கொண்டே போனாயே! ஏதுடா, நாத்தனார் காப்பிப் போடப் போகிறாளே. தனியாய் வேலை செய்ய விடலாமா, என்று உனக்குத் தோன்றிற்றா? எப்பொழுது உனக்குத் தெரியும் . . . ?"

"கொட்டை அரைக்க வரணும் என்று நினைத்தேன் அக்கா, . . . ஆனால்"

"புருஷர்கள் சொல்வார்கள், அதற்காக நாம் அப்படியே இருக்கலாமா? நாளைக்கே நீ நம்ம பக்கம் போய் இப்படி இருந்தால் என்ன நினைப்பார்கள்? எங்கம்மா வேலை செய்து கொண்டிருக்க, நீ பிடில் வாசித்துக் கொண்டிருந்தால் நன்றாயிருக்குமா?"

சத்யமூர்த்தி வருகை, பவானியின் கேள்விகளை அதோடு நிறுத்தியது.

"ஏன் பவானி, உன் மன்னியிடம் எத்தனை சரக்கு, கேட்டாயோ? சுத்தமான கை, தப்பித் தவறி ஒரு அபஸ்வரம் இல்லை. உன் சிநேகிதி சுமதி என்ன சொன்னாள்?" என்று கேட்டார் அவர்.

அதற்கு மறுமொழி கூறாமலே பவானி, "காப்பி நன்றாயிருந்ததா? கொட்டை அதிகம் அரைக்க முடியவில்லை. ஜலம் தளை தளை என்று தளத்தது; நான் ஒண்டி, என்னவோ போட்டேன்," என்று சொன்னாள்.

"நன்றாயில்லாமலா? நீ போடும் காப்பிக்காகத் தானே 'சேன்' நம்மகத்திற்கு வருகிறார்!" என்று கூறி மனைவியைத் திருப்தி செய்துவிட்டார் சத்யமூர்த்தி.

"எத்தனையோ தடவைகள் ஒண்டியாகத் தானே போட்டுக் கொடுத்தாய் என்று அவர் வெளிப்படையாகக் கேட்க விரும்பவில்லை.

ராஜேசுவரியின் சிந்தைனையெல்லாம், பவானி, சரமாரியாகப் பொழிந்த கேள்விகளின் வியூகத்தைத் துளைப்பதில் லயித்தது.

மாமியாரையும், நாத்தனாரையும் ஒண்டியாக வேலை செய்ய விடக் கூடாது! பவானி அளித்த புத்திமதி அது.

பவானி அழ அழச் சொல்கிறதெல்லாம் நல்லதற்குத்தான். மண வாழ்க்கையில் அனுபவப்பட்டவள் பவானி. புருஷர்கள் சொல்கிறபடியே நடக்கக் கூடாது என்று பவானி மட்டுமா சொல்கிறாள்? மாமியார், சொன்னார்! தாயார் சொன்னாள்! புருஷர்கள் மனப்போக்குத் தனிதான்! பெண்கள், ப_குத்தறிவுடன் சமயா சமயமறிந்து நடந்து கொள்ள வேண்டும். எத்தனையோ சிறு சிறு விஷயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன இல்வாழ்க்கையில் குழம்பையும், ரசத்தையும் ஈயப் பாத்திரத்தில் வைத்தால் உடம்பிற்கு ரொம்ப நல்லது. ஈயம்போலவே தோன்றும் அலுமினியப் பாத்திரத்தில் வைத்தால், உடம்பிற்கு மகா கெடுதி! ஆகா, எத்தனைதான் இருக்கிறது, தெரிந்துகொள்ள! நாத்தனார் என்று சொல்லிக் கொண்டு பவானி கொடுமைபடுத்தவில்லை; உறைக்க உறைக்க புத்திமதிகளை உரையேற்றுகிறாள், அவ்வளவுதான்!

ராஜேசுவரிக்கு, பவானியின் புத்திமதிகளை இன்முகத்துடன் ஏற்கும் எண்ணம் வலுப்பட்டுவிட்டதனால், அவளுடைய முக பாவமும் அதற்கேற்ப மாறிவரத் தொடங்கியது.

பவானி ஏதாவது கடுமையாகச் சொல்லிவிட்டாலும், கண்களில் நீர் துளும்பவில்லை. கண்ணீர் சோர நின்றால் பவானியின் மனம் புண்ணாகிவிடும். சந்தோஷமாக இருந்து சந்தோஷமளிக்க வேண்டும் என்று ராஜம் முடிவு செய்தாள்.

மிரள விழிக்காமல், தடுமாறாமல், சுமூகமாக பதில்கள் அளித்தால் பவானி சந்தோஷப்படுவாள் என்றெண்ணினாள்.

"சமையலறையில் எல்லாவற்றையும் திறந்து திறந்து வைக்கிறாயே! அசந்து மறந்து கூட ஒரு சாப்பாட்டுப் பண்டத்தைத் திறந்து வைக்கமாடேன் நான்; உன் அம்மா கூட சில சமயம் மூடி வைக்கிறதில்லை. அதெப்படி மூடாமல் கை அப்பால் போகும் என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கு!" என்று பவானி சென்னபோது, ராஜேசுவரி, "ஆமாம், அக்கா! ஏதாவது பூச்சி விழுந்தால் அத்தனையும் வீணாகத்தானே போகும்?" என்று ஒப்புக் கொண்டு பதிலயளித்தாள். பவானி, விசாலத்தைக் கூட குறை சொன்னாள் என்றால், அவள் பேச்சு பாரபட்சமற்றதல்லவா?

கூச்சலும் கும்மாளமும் போட்டு விளையாட்டு விஷமங்கள் செய்த குழந்தைகளைப் பற்றிதான் பவானி சில சமயம், "அதிக சலுகை, அநியாயக் கூச்சல்!" "அசட்டுக் கேள்விகள்! என்று ரகுபதியிடம் சொன்னாளே தவிர, விசாலத்தைப் பற்றிக் குறை எதுவும் சொன்னதில்லையே இதுவரை!

இரண்டு நாள் கழித்து, தண்ணீர் குடிக்க வந்த ரகுபதி, "ஏன், குடம் திறந்திருக்கு?" என்று கேட்டபோது, பவானி, "நான்தான் சொன்னேனே, மூடிவைக்கிற வழக்கமே இல்லை ராஜேசுவரிக்கு' என்று சொன்னாள்.

ராஜேசுவரி தயங்கினாள் ஒரு கணம். கணவனின் எதிரே குற்றம் செய்யாத குற்றவாளியாக நிற்கக் கூசினாள். துணிபுடன், "குடத்தை நான் வைக்கவில்லையே அக்கா! நான் இன்னும் குளிக்கவில்லை என்று . . . "

திடுக்குற்ற பவானி, "ஓ, ஆமாம், நான்தான் வைத்தேன் டிபனை எடுத்துக் கொடுக்கிற அவசரம், மூடவில்லை" என்று ஒப்புக் கொண்டாள்.

ரகுபதி ஒன்றுமே சொல்லாமல், யாரையும் ஏறிட்டுப் பார்க்காமல் போய்விட்டான். ரகுபதி சென்றதுமே, ராஜேசுவரியைக் கூர்ந்து பார்த்து, குரலைத் தாழ்த்தி, பவானி கேட்டாள். "ஆமாம், ராஜம், இப்படியா நீ நாத்தனாரை விட்டுக் கொடுப்பாய்? என்னமோ மூட மறந்துவிட்டேன் ஒரே ஒருதடவை. ஏதுடா, நாத்தனராச்சே, மறதியினால் நாத்தனார் செய்துவிட்டதை வெளிப்படுத்த வேண்டாம் என்று உனக்குத் தோன்றவில்லை, பார்!" என்றாள் பவானி.

ராஜேசுவரி, லேசாகச் சிரித்து, "நான் குடத்தை வைக்கவில்லை என்று மட்டும் தானே சொன்னேன் அக்கா?" என்று கேட்டாள்.

"கெட்டிக்காரிதான் நீ! நீ வைக்கவில்லை என்றால் மட்டும் அவனுக்குத் தெரியாதாக்கும்! இப்படித்தான் சட், சட் என்று ஏதாவது எதிர் கேள்வி கேட்கிறாய் நீ; அது நன்றாயில்லை. ஏதுடா நாத்தனார் கேட்டதற்கு எதிர்க் கேள்வி போடலாமா என்ற தயக்கமிருக்கா பார் உனக்கு?"

ராஜேசுவரி மௌனியானாள். கணவனின் எதிரில் குற்றமற்றவள் என்று தெளிவாகிவிட்ட பெருமிதம் இருந்ததால், கண் கலங்கவில்லை. "இந்தச் சம்பவம் ஒன்றே போதும், கணவனின் மதிப்பில் உயர்ந்துவிட்டேன்" என்று இறுமாந்தாள் பேதை.

ஆனால் பவானியின் குற்றச்சாட்டுகள் மட்டும் குறையவில்லை. ராஜேசுவரியிடம் காணப்பட்ட மாறுதல், அவள் கண்களுக்கு மாறுபட்ட அர்த்தம் சொல்லிற்று. நெஞ்சுரம், நெஞ்சழுத்தம் என்று தோன்றியது. புன்சிரிப்பு, மாயச் சிரிப்புப் போல் தென்பட்டது. அண்ணனின் பக்க பலம் தான் அண்ணியின் மாறுதலுக்கும் காரணம் என்ற பிரமை ஏற்பட்டது. இளம் தம்பதிகளின் பரஸ்பரம் பார்த்த பார்வைகள், பவானிக்கு எரிச்சல் மூட்டின.

ராஜேசுவரிக்கு மிகப் பிடித்தமான ராகமாலிகை விருத்தம் ஒருநாள் ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது. பாட்டுத் துவங்கும்பொழுது, பத்துப் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்த அவள், கையில் வைத்திருந்த சிப்பல் தட்டுடன், சற்று உட்புறமாக வந்து கதவருகு நின்றபடியே, பாட்டுக்குச் செவி கொடுத்துக் கொண்டு, சிப்பலை விரல் நுனிகளால் தேய்த்துக் கொண்டிருந்தாள். விசு_க்கென்று அவளை அணுகி வந்த பவானி, சிப்பலைப் பிடுங்கி, "ராஜம், நீ போய் பாட்டு கேள், பாத்திரம் நானே தேய்க்கிறேன்" என்றாள்.

"நானே தேய்க்கிறேனே அக்கா. எனக்குப் பிடிச்ச பாட்டு என்று . . . "

"எனக்கு மட்டும் பாட்டுக் கேட்க பிடிக்காது, காரியம் தான் ரொம்பப் பிடிக்கும்! நீ பத்து தேய்ப்பதை அவர்கள் பார்க்க வேண்டும், என்னை அவர்கள் சண்டை பிடிக்க வேண்டும், என்று தானே உன் எண்ணம்?" இவ்வாறு பவானி குரலைத் தாழ்த்தி சொன்னாளாயினும், கண்களிலும் பாவனையிலும், கடுங்கோபம் தெரிந்தது.

"ஐயையோ, அதற்காக இல்லை அக்கா!" தொண்டை கம்மிப் போய், துக்கம் பொங்கிவந்தது. கண்ணீர் சோர தன் கைக்காரியத்தைக் கவனிக்கச் சென்றாள் ராஜம். பாத்திரம் துலக்கத்தான் பழகியிருக்கவில்லையே தவிர உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் வகை அந்தப் பெண் அறிந்திருந்தாள். "ஆம், நான் செய்வது தவறல்லவா? அக்காவிற்குப் பொல்லாப்பு வரக்கூடும் என்று நான் உணராது செய்தது என் பிசகு; பவானியின் பீதி நியாயமற்றதல்ல!" என்று ராஜம் தன்னையே நொந்து கொண்டு மனம் தேறினாள்.

கணவனோடு பேச வேண்டும் என்ற ஆவலை விட, கணவனை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாலே போதும் என்ற நினைப்புத்தான் ராஜேசுவரிக்கு அதிகம் இருந்தது, கல்கத்தா வருமுன்; இப்பொழுது அந்த நினைப்பும் ஒடுங்கிவிட்டது.

கணவனின் எதிரில் செயலற்று அசடு போல நிற்பதை அவள் வெறுத்தாள். கணவனின் முன்னிலையில் சுத்தமான பாதங்களுடன் பிரசன்ன வதனமுடன், காட்சியளிக்காமல், நீர் புழக்கத்தினால் வெடித்த பாதங்களுடனும், அலங்கி ஆடையுடனும் தென்படுவதை வெருவினாள். ரகுபதி கையில் ஏதாவது புத்தகம் சகிதம் வருவான். ஏதாவது சுவையான பகுதியையோ, வேடிக்கைத் துணுக்கையோ, அழகிய விளக்கத்தையோ படித்துக் காட்டுவான். ஓரிரண்டு சமயங்களிலே கேலிச் சித்திரங்களும் கொணர்ந்து காட்டினான். ராஜேசுவரியின் பக்கத்தில் வந்து நின்று, அதை விளக்கினான். திரும்பிப் போகும்முன் அன்பு தெரியச் சிரிப்பான். பவானி, அலட்சியமாக ஏற்பவள் போல கவனிப்பாள், துணுக்கையும் ஹாஸ்யத்தையும். பிறகு ராஜேசுவரியிடம், "அண்ணா முந்தியெல்லாம் சமையலறைப் பக்கமே வரமாட்டான்! இப்போ சமையலறை அவனுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு!" என்று ஏதாவது ஏளனமாகச் சொல்வாள்.

என்றும் அனுபவிக்காத இந்த மௌன வேதனை ராஜேசுவரியைத் துன்புறுத்தியது. அன்று வரை கேட்டறியாத சுடுமொழிகள் அவளை சித்திரவதை செய்தன.

'அண்ணனின் அன்பைப் பகிர்ந்து கொள்ள வந்து முளைத்த அண்ணி" என்றுதான் பவானிக்குத் தன்மேல் கோபம் என்று எண்ணினாள் அவள். எப்பொழுதோ, எதிலேயோ, அவள் அப்படித்தான்

படித்திருந்தாள். அதனால், ரகுபதி, 'பேட்டி' விஷயமாக 'பாட்னா' புறப்பட்டபோது ராஜேசுவரி கொஞ்சமும் கலங்கவில்லை. கணவன் திரும்ப மூன்று நாட்களாகும்; அதற்குள், பவானி தன் மேலுள்ள கோப தாபங்கள் எல்லாம் அகலும்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தாள். கரி உடைத்துக் குவிக்கக் கூச வேண்டாம். புடவையை இழுத்துக் கட்டிக் கொண்டு மங்கு மங்கு என்று துணிகளைத் தோய்க்கலாம். குங்குமம் தீற்றிக் கொண்டு விட்டதே, தலை அலங்கோலமாகிவிட்டதே, பருக்கள் அதிகமாகி விட்டனவே, விரல் நகங்கள் அழுக்கேறிவிட்டனவே, என்று ஆதங்கப்பட வேண்டாம்! நிச்சிந்தையாக, பவானிக்கு உதவி செய்வதையே முழு முதற் காரியமாகச் செய்யலாம்; மதனியின் உள்ளன்பை உள்ளபடி உணர்ந்து கொள்ளாமல்லவா பவானி!

ராஜேசுவரியின் உள்ளன்பு பவானிக்கு உறைக்கவில்லை. அண்ணன் கூட ஊரிலில்லையே, மதனிக்குத் துணையாகவும், துணைவியாகவும், அன்புத் தோழியாக இருக்கலாமே என்று பவானிக்கு எண்ணமேயிருக்கவில்லை! அவளுடைய மனப் பிராந்தியும், மனப் பொருமலும், தன் கணவன், மைத்துனன் மனைவியிடம் நல்லபிப்பிராயம் கொண்டதனால் எழுந்த அதிருப்தியின் விளைவுகளன்றோ? தான் காணும் குறைகளை தன் கணவரும் ராஜேசுவரியிடம் காண வேண்டும் என்று நினைப்பவளாக பவானி மாறியிருந்தாளல்லவோ?

## 14

பாட்னாவிலே பேட்டி அலுவல் முடிந்து, ரகுபதியும் திரும்பிவிட்டான். கல்கத்தாவை விட்டு நாலு நாட்களிலே புறப்படவும், வேட்டகத்திலே மனைவியை இறக்கிவிட்டுச் சில நாட்கள் தங்கிவிட்டு, ஊர் போய்ச் சேரவும் திட்டமிட்டான்.

கடைவீதிகளைப் பார்க்காமல் ஒரு ஊரிலிருந்து கிளம்பிவிட முடியுமா? சில முக்கியமான இடங்களையும் பார்க்காமல் போகலாமா? கல்கத்தாவின் பிரசித்த பெற்ற இடங்களைப் பார்க்க நால்வரும் கிளம்பினார்கள். பெரிய மாளிகைகளையும், செல்வச் செழிப்புள்ள சில பகுதிகளையும் பார்த்து சந்தோஷித்தார்கள். மதனி ஊருக்குப் போகப் போகிறாள் என்ற நினைப்பினாலே, பவானி சற்று இதமாக இருந்தாள்.

பொம்மைக் கடையிலே, ராஜேசுவரியின் ஆசையைக் கவர்ந்தது, 'தொழிலாளர் பொம்மை' செட். கொலுவில், ரோட்டு போட்டு, பல இடங்களிலே ஒவ்வொரு தொழிலாளியை நிறுத்தலாம்! அதுமட்டுமா? 'அக்கா கொண்டு வந்தாளே', என்று குழந்தைகள் கூவி மகிழும். அந்த ஆனந்தக் காட்சியும் அவள் கண் முன்னே தோன்றியது; ஆசை வலுத்தது.

"அக்கா, அக்கா! கொலுவில் வைக்க ரொம்பப் பொருத்தம். வாங்கலாம், அக்கா!" என்றாள்.

சத்யமூர்த்தியும் பவானியும் அவள் ஆசையை ஆமோதித்துவிட்டு, மற்ற பேரங்களிலே முனைந்து, அவளுடைய ஆவலை மறந்தவர்களாக இருந்தார்கள். காத்துப் பார்த்தாள், ராஜேசுவரி, நினைவூட்டினாள். "வாங்கலாம், வாங்கலாம்" என்றாள் பவானி.

"கட்டாயம் வாங்கணும் அக்கா! அங்கே இது போல கிடைக்காது!" என்று குழந்தை போல கைகளை உதறி உற்சாகம் தெரிவித்தாள் ராஜேசுவரி.

"அதென்ன அத்தனை முக்கியமா? யாருக்காகக் கேட்கிறாய்? உனக்காகவா? உன் அம்மாவகத்திற்காகவா?"

இந்தக் கேள்வி யார் கேட்கிறார்?

ராஜேசுவரி திகைத்தாள். இன்பமான நித்திரையிலே, வாயிலே விரலை வைத்துச் சூப்பும் குழந்தை போ_ல் அடிபட்டு விழித்தாள்! 'பல் கெட்டுப் போகும்' என்று தாய் அதட்டியதைக் கேட்டாள்.

அப்படித்தான் இருந்தது அவள் நிலை. ரகுபதி கேட்ட கேள்வி அல்லவா அது? குழந்தைத் தனத்தை உதறிவிடத் தயாராகிக் கொண்டிருந்த ராஜம் கூசினாள், "ஐயோ, அசட்டுக் குழந்தை போலக் குதித்தேனே, பொம்மைக்காக, " என்று எண்ணி! காதலில் சுவை கண்ட அந்த அந்தரங்கம்_ சிரித்தது: 'பெண்ணே, ஏன் மறந்தாய்? உன் அகம் என்பது இனி உன் புக்ககம் அல்லவோ?

இன்னமும் அந்த நினைப்பு உன் உள்ளத்திலே மேலோங்கவில்லையே! நீ வேற்றுமை பாவங் காட்டிப் பேசினால், உன் காதற் கணவனின் மனம் நோகாதோ? அவன் வெகுண்ட காரணம் கவனி! வேதனைப்படாதே! அவர் மனசு உனக்குத் தெரியாதா?'

அந்தங்கம் ஓதிய போதனையினால், அவளுடைய இதழ்களிலே மெல்லிய கீற்றுப் போல புன்னகை மிளிர்ந்தது. ரகுபதியும் மனங் கனிந்துவிட்டான். "பொம்மையில் என்னதான் இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது!" என்று பேசி மழுப்பிவிட்டான்.

"குழந்தையாட்டம் தான் என்று இவர் சொன்னார் பாரேன்! சரியாகத்தானிருக்கு!" என்று பவானி அண்ணனிடம் சொன்னதையோ, சத்யமூர்த்தி, "எனக்கே பொம்மைகளைப் பார்த்தால் ஆசையாயிருக்கு! இருக்கட்டும், சித்ராவைக் சாக்கிட்டு வாங்கமாட்டேனா?" என்று கேட்பதையோ ராஜேசுவரி பொருட் செய்யவில்லை.

காதல் நிரம்பிய கணவர், "நீ சொல்வது சரியா?" என்று கேட்கிறாரே? புத்திமதிகள் சொல்வதையே தன் கடையாகக் கொண்ட பவானி எத்தனையோ கேட்கிறாள், எத்தனையோ சொல்கிறாள், என்றால் அவளை மட்டும் குறை கூறலாமா? இது தான் ராஜேசுவரி யோசித்துக் கொண்டிருந்தாள்.

"இந்த வளை அளவு பார், கலர் பிடிச்சிருக்கா?" என்று தன்னைக் கேட்கும் பவானியை ராஜேசுவரி நன்றிப் பெருக்கோடு பார்த்தாள்.

வெற்றியின் முதற் படியிலிருந்து வெகு விரைவிலே ராஜம் மேலேறிவிட்டாள். மதனி ஊருக்குப் போய்விடப் போகிறாள் என்று பவானியும் சற்று இதமாக இருக்கத் தொடங்கினாள். "அண்ணாவுக்கு வேலையாகிவிட்டால், அப்புறம் அப்படியப்படியே எட்டப் போய்விடுவோம்! அப்பொழுது நாத்தனார் நான் உன்னிடம் வந்து வந்து இப்படியெல்லாம் உரிமை கொண்டாடப் போகிறேனோ?" என்று கூட பவானி சொன்னாள். ராஜேசுவரி கபடமில்லாமல், "நீங்கள் உங்கள் மனசிலிருக்கிறதையெல்லாம் விளக்கமாகச் சொல்கிறதனால், எனக்கு நன்மைதானே அக்கா!" என்று சொன்னாள்.

மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தாள் ராஜேசுவரி. ஆகா, பவானி அளித்த படிப்பினைகள் உண்டே, அற்புதம்! மருந்து போல், கசந்தாலும் நன்மை பயக்கும் படிப்பினைகள் அவை! பத்துநாள் பட்ட கஷ்டம் வீணல்ல! பவானி, இதமாக இருக்கிறாள்; சுமுகமாகப் பேசுகிறாள்! இதைவிட ஆறுதல் வேறென்ன வேண்டும் என்று ராஜேசுவரி பூரித்துப் போனாள்.

அவளுடைய பூரிப்பு முகத்தில் ஒளிவீசியது. கணவனுடன் செய்யப்போகும் முதல் பயணம் என்னும் நினைப்பிலே உடல் சிலிர்த்தது. அது மட்டுமா? இன்ப இல்லறம் காத்திருந்தது! அன்பு மிகுந்த பெற்றோருடனும் உடன் பிறந்தவருடனும் சில நாள் இருந்து விட்டு, பிறகு புக்கக வாழ்வு தொடங்கப் போகிறாள்! பவானியின் அறிவுரைகள் பெரிதும் உதவ, பெரியவர்களின் கனிவுப் பார்வைகள் ஊக்கமளிக்க, கணவனின் உறவு மன நிறைவை அளிக்க . . . ஆகா, இன்ப வாழ்க்கை!

ராஜேசுவரி புது மலர் போன்று மாறிவிட்டாள் ஒரே நாளில். கணவனின் குதுகலப் புன்னகைக்கு மறுமொழி புலப்படுத்தின அவள் விழிகள். பவானியின் வேலைகளை அறிந்து உதவ துடித்தன அவள் கரங்கள். குழந்தை சித்ராவின் கன்னங்களிலே முத்தமாரி பொழிந்து, கொஞ்சு மொழிகளை அள்ளிச் சொரிந்தன அவள் இதழ்கள். கலகலவென்று சிரிக்கவவோ, பேசவோ பயந்து மருண்டு கொண்டிருந்தவள் வளர்ப்பு மான் போலாகிவிட்டாள்.

பயணம் புறப்படும் நேரம் நெருங்கிவிட்டது. "சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணினாயா? என்று கேட்டாள் பவானி.

"ஓ, சுவாமிக்கு பண்ணணுமா?" என்று ஓடினாள் ராஜேசுவரி. "உங்களுக்குப் பண்ணக் கூடாதா அக்கா? உங்களுக்கு நமஸ்காரம் செய்யாமல் போக இஷ்டமில்லை எனக்கு!" என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

"எனக்கு செய்யக் கூடாது என்று தான் தெரியுமே, கேட்கிறாயே சும்மா, நமஸ்காரம் வேண்டாம், வையாமலிருந்தாலே போதும்! ஜோராக ஆம்படையானும் பெண்டாட்டியும் போகப் போகிறீர்களே, அந்தக் குஷியில் என்னை வையாமலிருந்தால் அதிசயம் தான்!"

ராஜேசுவரி அயர்ந்து போனாள்! 'ஏன்? எதற்கு வையணும்? என்ன தவறு செய்தீர்கள்? நான் உங்களைப் பற்றிக் கோள் சொல்ல என்ன இருக்கிறது? நீங்கள் ஏன் திடீரென்று இப்படித் தாக்குகிறீர்கள்?' என்றெல்லாம் கேட்டுக் கதறவேணும் போல துக்கம் நெஞ்சையடைத்து.

"ஐயோ, அக்கா, நான் அப்படியெல்லாம் . . . " மேலே பேச மாட்டாமல் கண்ணீர் வழிந்தது.

"அதற்குள் கண்ணீரைக் கொட்டுகிறாயேடியம்மா. ஊருக்குப் போகும்பொழுது நாத்தனார் அழவைத்தாள் என்று எனக்கு பொல்லாப்புக் கட்டிவிடாதே!"

விக்கல்களுக்கிடையே ராஜேசுவரி "அப்படியெல்லாம் . . . " என்று திணறிவிட்டு, முகத்தை அலம்பிக் கொள்ள அப்பால் சென்றாள். திரும்பி வந்த பொழுது, முகம் சிவந்திருந்து. ஆனால் குமுறல் துளியும் இல்லை.

பவானி வெற்றிலை, பாக்கும் தட்டில் ஏந்தி நின்றாள். "ராஜம், இந்தத்தடவை நீ இங்கிருந்தது பற்றி எனக்குத் கொஞ்சமும் திருப்தியில்லை. ஏதாவது சொல்லாமல் போனால் அழுதுவிடுகிறாய். எப்படி உன்னோடு 'ப்ரீ' யாகப் பழக முடியும்? அடுத்த தடவை எங்கள் வீட்டிற்கு வரும்பொழுதாவது நீ மாறியிருப்பாயல்லவா?" என்று கேட்டாள், மதனியை.

மலைத்து, விழிகள் சாய நின்றுவிட்டாள் ராஜம். 'நான் இருந்த சொற்ப காலம் திருப்தியளிக்கவில்லை என்று சொல்லக் கூடாதா? ஆகா, நான் இருந்த மாதிரிதான் திருப்தியளிக்கவில்லையா? இறைவா, என்னிடத்தில் நல்ல அம்சமே இல்லையா? ஐயோ, ஒரு விஷயத்திலும் நான் திருப்தியளிக்கவே இல்லையா? கடவுளே, நான் நானாகவே இராமல் மாறிப் போவது எங்ஙனம்?' என்று மருகியவாறே, தாம்பூலம் பெற்றுக் கொண்டாள், ராஜேசுவரி.

'வேறொரு பெண்ணல்லவா மதனியாகியிருக்கவேண்டும், நான் முற்றும் மாறணுமென்றால்?'

இந்தக் கேள்வி, அவளுடைய சிந்தனையில் இல்லை. காதலில் பூரித்து பக்குவமடைந்திருந்த அவளுடைய வெள்ளையுள்ளத்தில் அத்தகைய நினைப்பிற்கே இடம் இல்லை. 'நான் மாற வேண்டும்!' என்று தான் ராஜேசுவரி உறுதி கொண்டாள்.

இளம் தம்பதிகளை ரயிலேற்றி இடம் பார்த்து அமர்த்திவிட்டு, சத்யமூர்த்தி குதூகலமாக விடை கொடுத்தார்.

"வாழ்க்கைப் பயணம் இனிது தொடங்கட்டும்," என்றார் சத்யம்.

"தொடங்கியாச்சே, பிறந்தத உடனே!" என்றான் ரகுபதி.

"அட, போப்பா, மனைவியோடு வாழ்க்கைப் பயணம் . . . "

"போன வருஷமே, தொடங்கியாச்சே!"

"அட, சட்! கேட்டுக் கொள்ளம்மா, உன்னவரின் இடக்குப் பேச்சை! இப்படித்தான்! பவானி என்னோடு வாதம் செய்கிறாள் என்றால் அது அவள் குற்றமில்லை. இந்த அண்ணனார் மாதிரிதானே . . . "

சத்தியமூர்த்தி சிரித்து பேசியே மனசை வெளியிட்டுவிட முயன்றாளர். ராஜேசுவரி குறுக்கிட்டாள்.

"அக்கா உங்களோடு வாதம் செய்ததை நான் பார்க்கவேயில்லையே!" என்று சிரித்துக் கொண்டே ராஜேசுவரி கேட்டாள்.

"பார்க்கவில்லை என்றால் அதுவும் இந்த ரகுபதியாரின் குற்றம்தான்!" என்று சத்யமூர்த்தி சிரித்துக் கண் சிமிட்டிப் பேசிய போது, ரகுபதியும் ராஜேசுவரியும் இன்பப் புன்னகை பூத்தனர்.

பச்சைக் கொடியைக் கண்டதும், பிரும்மாண்டமான ரயிலும், நகர்ந்து விரைந்தது.

பச்சை மரத்தினருகு பச்சைக் கொடி துவளுவதைப் போன்று ரகுபதியினருகு வீற்றிருந்தாள் ராஜேசுவரி.

"நல்ல கூட்டம்; அடுத்த கம்பார்ட்மெண்டு முழுக்க மிலிடெரி கூட்டம்!" என்று பேச்சுத் துவக்கினான் ரகுபதி.

"ஐயோ, ஆமாம், எனக்குத் கூட பயமாயிருந்தது. அதிலே ஏறுகிறதற்கு இடம் தர வந்தானே ஒருத்தன்!"

"நீ பெண்ணாச்சே என்று இடம் தர வந்தான், எல்லாருக்கும் தருவார்களா?"

"ஐயையோ, நன்னாத்தானிருக்கு!"

"ஏன், தப்பென்ன? வெள்ளைக்காரன், லேடீஸ் அசௌகரியமாக இருக்கவிடமாட்டான்! நீ பயப்படுவாய் என்று தான் ஏறவில்லை நான். உன்னைச் சாக்கிட்டு எனக்கும் அதிலே சௌகரியமாக இடங்கிடைத்திருக்கும்!"

ரகுபதி சிரித்தான். "அப்படியா விஷயம்! ஏறியிருப்பேனே தைரியமாய்!" என்று எண்ணி ராஜேசுவரியும் சிரித்தாள்.

ரகுபதி எத்தனையோ பேசினான். ராஜேசுவரி எத்தனையோ, தெரிந்து கொண்டாள். திடீர் திடீர் என்று மோனம் நிலவும். எதிர் கேள்வி போட விரும்பாமல், கணவனின் கருத்துரைகள் சிலவற்றை அசை போடுவாள் அவள். ரகுபதியும், மனைவிக்குச் சந்தோஷமும் பெருமையும் அளிக்கக் கூடிய விஷயங்கள் பேசினான்.

"நீயே அந்தப் பொம்மை செட்டைப் பார்த்துக் குதித்தாயே! உன் தங்கை தம்பிகளுக்கு ரொம்பப் பிடிக்கும்," என்று அவன் சிரிக்க, ராஜேசுவரி, சிரிக்காமலே, "நான்தான் ரோட்டு போட்டு வைக்கலாம் என்று ஆசைப்பட்டேன். அதுகளுக்கு, அந்த குடியானவனும், குயவனும், தபால்காரனும், வண்ணானும் பிடிக்குமா?" என்று பதிலளித்து, பெரியவர்களுக்கு பிடிக்கக் கூடிய பொம்மைகள் உண்டு என்று தெரிவித்தாள். இதையும் அவள் சிரித்துக் கொண்டே சொல்லியிருப்பாள். ஆனால், குழந்தைகள் ரசிக்கக் கூடிய பொம்மையாக இல்லையே, போனவுடன் குழந்தைகளுக்குக் கொடுக்க வேறு எதுவும் இல்லையே என்று யோசனை தான் அவள் சிரிப்பை ஒடுக்கியிருந்தது.

இதை அறியாத ரகுபதி, "எந்தப் பொம்மைதான் நிற்கும் குழந்தைகள் கையில்! அதுவும் உங்கள் வீட்டில்? என்ன அமர்க்களம்! அடுத்தகத்துக் குழந்தைகள் கூட இங்கே தான் குடி போலிருக்கு!' என்று சொன்னால், எப்படியிருக்கும் அவளுக்கு?

"இங்கே தான் கேரம் போர்ட்டு இருக்கு என்று வருகிறார்கள்," என்று தழதழக்கப் பதிலளித்தாள் ராஜேசுவரி. 'மணி, நீ உன் கேரம் விளையாட்டையும், டார்ஜான் வேலைகளையும் சற்றுக் குறைக்கவேணும்', 'கெணி, உன் ஆர்வக் கேள்விகள் அத்திம்பேர் 'சதா நச்சு' என்றாரப்பா, உன் சிந்தனா சக்தியைக் சற்று குறை!', 'ராதை, அத்திம்பேருக்குப் பக்கத்தில்தான் சாப்பிட உட்காருவேன் என்று பிடிவாதம் பிடிக்காதே; சாப்பிடும் போது குழந்தைகளை வரவிடக்கூடாது என்று சொன்னாரம்மா அத்திம்பேர்!' 'கையில் கறிவேணும், தின்பேன் என்று நீ அத்திம்பேரைக் கேட்கலாமா? அம்மாவைத் தரவேண்டாம், அத்திம்பேர் தான் தரணும் என்று நீ கேட்டால் அவர் கோபிக்கிறார்! அத்திம்பேர் கோபிக்கும்படி ஏற்படலாமா? அவர் செலுத்தும் அன்பு விலை மதிப்பற்றது, தெரியுமா? நாம் அந்த அன்பை வளர்க்கவேண்டும்!'

இதுபோல ராஜேசுவரி சிந்தனை செய்தபோது, ரகுபதி, "அதிசயமாக பிரகிருதிகள்! வீட்டில் அத்தனை இரைச்சலுக்கு நடுவே மாமனார் புத்தகம் படிக்கிறார், தூங்குகிறார்! அடுத்தகத்துக் குழந்தையைத் தூக்கிக் கொள்கிறார் ஒரு தோளில்! 'இரட்டைக் குழந்தைகள் இல்லையே என்று நான் வருத்தப்படவேண்டாம்!' என்று சொல்லிக் கொண்டே கம்பீரமாக நிற்கிறார்" என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

"கண்ணனுக்கு உன் ஜாடையே தான்!" என்று ரகுபதி சொல்ல, "அதனால் தான், அவனைப் பிடித்திருக்கோ?" என்று ராஜேசுவரி பார்க்க, "உங்கள் அகத்தில் எல்லோருக்கும் ஒரே சாயல்தான்!" என்று ரகுபதி முடிவாகக் கூறிய போது ராஜேசுவரி பெருமையாகச் சிரித்தாள்.

குழந்தைகளின் அசட்டுத்தனங்கள் எத்தகையவை என்பதைக் கணவனுக்குக் கொஞ்சம்

சொல்லவேண்டாமா? "அம்மாவும் அப்பாவை அப்பா என்று தான் கூப்பிடணும் என்று ராதை பிடிவாதம் பிடித்தாள்" என்று ராஜேசுவரி சொல்லிவிட்டு, அடங்கமாட்டாமல் சிரித்தாள். ராஜேசுவரியை, தன் பங்கையும் சேர்த்துச் சிரித்து விட்டாள் என்று நினைப்பவனாக, ரகுபதி சிரிக்காமலே இருந்தான்.

இப்படி பலவித முரண்பாடுகளுடன், அவர்களுடைய பயணம் இனிது முடிந்தது.

நடராஜன் ரயிலடிக்கு வந்திருந்தார். ரயிலை விட்டு இறங்கியதும் ராஜேசுவரி, "அப்பா, குழந்தைகளுக்கு ஏதாவது திங்க வாங்கிக் கொண்டு போகலாம்; அதோ, ஆரஞ்சு இருக்கே, வாங்குங்கள் அப்பா!" என்றாள். ரகுபதி திகைத்தான். தந்தையை கண்டவுடன் என்ன சலுகை! வழி நெடுக ஒரு வார்த்தை கூட ராஜம் சொல்லவில்லையே!

"நான் வாங்கிண்டு வரேன்" என்று ரகுபதி கிளம்பினான்.

"வேண்டாம், மாப்பிள்ளை, வீட்டிலிருக்கு,' என்று நடராஜன் தடுக்க, "வேறே வாங்கலாம், ஆரஞ்சு வேண்டாம்!" என்று ராஜேசுவரி வற்புறுத்த, நடராஜன் இள முறுவல் செய்து, "ஏது , விடமாட்டாய் போலிருக்கே! இந்தா, பையைக் கொண்டா! அதிலே போடு இதை!" என்று சொல்லி ஜிப்பாவின் நீண்ட பையிலிருந்து ஒரு பொட்டலத்தை உருவி எடுத்தார்.

“என்னப்பா?”

“சாக்கலேட்டு! அம்மா சொன்னாள் இப்படிச் செய்யும்படி! நீ பூரியிலிருந்து வந்தபோது பிஸ்கெட் கொண்டு வந்த மாதிரி, இப்பொழுதும் கொண்டு வருவாய் என்று குழந்தைகள் சொல்லிற்று! வந்ததும் உன்னைச் சூழ்ந்து கொள்ளுமே, வாங்கிக் கொண்டு வர முடிகிறதோ இல்லையோ, உனக்கு வருத்தமாகிவிடப் போகிறதே, என்று வாங்கிக் கொண்டு போகச் சொன்னாள்,” என்று அவர் விளக்கியபோது, ரகுபதியும் ராஜேஸ்வரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவேயில்லை!

வண்டியில் வரும் பொழுது ரகுபதி சொன்னான், “பொம்மை செட் குழந்தைகளுக்கு இருக்கு என்ற எண்ணம். தின்பண்டம் வாங்கத் தோணல்லை!”

ராஜேசுவரி தயங்கவில்லை. “பொம்மை செட்டை எடுத்துக் காட்டுவேன் பார்க்க. ஆனால் அதை தான் நான் வச்சுக்கப் போறேன். இவாளுக்குக் கொடுக்க மாட்டேன்” என்றாள்.

சிரிப்புப் பொங்க ரகுபதி, “நமக்கெதற்கு? குழந்தைகளுக்கே கொடுத்துவிடு!” என்று சொல்லவே, அவளும் சந்தோஷம் பொங்க, நமக்கு என்ற சொல் நெஞ்சிலே இனிப்பாக இனிக்க, தலையசைத்து ஒப்பினாள்.

வீட்டிற்கு வந்ததும், “கண்ணா, கண்ணா!” என்று ஆசையாக அழைத்து அணைத்து, தம்பியை உச்சி முகர்ந்து கொண்டிந்த ராஜேசுவரி, தன் வீட்டிற்குக் கணவனும் வந்திருக்கிறான் என்பதையே கொஞ்ச நேரம் மறந்துவிட்டாள்.

“அம்மா, பத்து நாளில் கண்ணன் எப்படி வளர்ந்துவிட்டான்! எடுத்துக் கொள்ளவே முடியவில்லை இவனை!” என்றாள், சந்தோஷமாக.

பத்து நாளில் அவன் வளர்ந்துவிடவில்லை; பத்து நாளாக நாலுமாசக் குழந்தை சித்ராவைப் பார்த்த கண்களுக்கு கண்ணன் பெரியவனாகத் தோன்றினான்.

விசாலம், பெண்ணைக் கேள்விகள் கேட்காமலேயே, பெண்ணின் வாய் மொழியாக வந்த சிற்சில விஷயங்களைக் கொண்டே, கல்கத்தாவில் ராஜேசுவரி சந்தோஷமுடன் இருக்கவில்லை என்று ஊகித்துக் கொண்டுவிட்டாள். “முதல் குழந்தைக்காரி பவானி; பொறுமை இருக்காது, அலுப்பும் கோபமும் வரும். இராத்தூக்கம் கெடும்; குழந்தை அழும்; சாப்பிடக் கூட அவசரமாகும். குழந்தைகள் எப்பொழுதுமே, அம்மா சாப்பிட உட்கார்ந்தால் அழ ஆரம்பிக்கும் வழக்கம். அம்மாவுக்கு, சாப்பாடு ஒசத்தியா, தான் ஒசத்தியா என்று பரீட்சை செய்யுமாம்!” என்று விசாலம் காரணம் சொன்னாள். ராஜேசுவரி ஆமோதித்தாள்.

## 15

1942ம் வருடம் அது.

நாட்டிலே பெரிய அரசியல் குழப்பம் நிலவியிருந்த காலம் அது. புரட்சிவீரர்களும், ஆகஸ்டு தியாகிகளும், நாட்டின் விடுதலைக்காகப் புற்றீசல் போலக் கிளம்பியிருந்தனர்.

ரகுபதியைப் போன்ற இனைஞர்கள், செயலில் இறங்காவிடினும் கார சாரமாகப் பேசி அரசியலை அலசி ஆராய எப்பொழுதும் முன்னணியில் நின்றார்கள். அரசியலில் தொடர்பு கொண்டிருந்த துரைசாமியின் மகன் அல்லவா? ரகுபதி பேசும் பேச்சில், எப்பொழுதும் ஆணித்தரமான கேள்விகள் இருக்கும். வேட்டகத்திற்கு வந்த அவன், தன் பேச்சுத் திறமையையும், நா வன்மையையும் காட்ட விரும்பியதிலே என்ன ஆச்சரியம்? ரகுபதிதான் இளைஞன் என்றால் நடராஜனும், அரசியலைப் பற்றிப் பேசுவதிலே பின் வாங்க மாட்டார். அவருடைய இறங்காத காந்தி பக்தி அவனுடைய நெஞ்சிலேயே எப்பொழுதும் இருக்கும்!

மாமனாரும், மாப்பிள்ளையும், சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் தர்க்கங்கள் செய்வார்கள். ரகுபதி குதர்க்கம் செய்தால், சிறு பிள்ளைத்தனம் என்று சும்மாயிருக்கமாட்டார் நடராஜன். துரைசாமி அய்யரின் பிள்ளையாகப் பிறந்தும், ரகுபதி காந்தித்தனம் இல்லாமல் பேசுகிறானே, என்று வெகுண்டு தாக்குவார். ஆனால் ரகுபதியோ, “எனக்கு என்று சில சுதந்திர நோக்கங்கள் உண்டு! வாக்குரிமை உண்டு! அப்பாவைப் போலவே முழுக்க நான் நினைக்க முடியுமா?” என்று கேட்பவனாக ஆவேசப் பேச்சுப் பேசுவான்.

விசாலமும், ராஜேசுவரியும், தங்கள் கண்வன்மார் செய்யும் வாக்கு வாதத்தைக் கவலையுடன் கவனிப்பார்கள். அவர்களுடைய பேச்சின் உக்கிரம் ஏற ஏற அவர்களுடைய மனைவிமாரின் அச்சம் வளரும்.

கெணி கூட, “என்னம்மா, அப்பாவும் அத்திம்பேரும் சண்டை போடறாளே?” என்று கேட்டுவிட்டான். அக்கம் பக்கம் போய் ஏதாவது உளறிவிடுமே குழந்தைகள்?

தர்க்கங்களிலே, முக்கியத்துவம் பெற்ற விஷயம், “ஆந்திரதேசம்!”

மாமியார் மாம்பழப் புடவை கட்டுவது வழக்கம் என்றறிந்து, அவன் தன் வாக்கு வாதங்களிலே தீவிரங் காட்டினான்.

ஆனால், ராஜேசுவரியின் வேதனையெல்லாம், கணவன் ஆந்திரத்துவேஷியாக இருக்கிறானே என்று தான்! “நீங்கள் ஆத்திரர்கள் அல்லவோ? தமிழர்களா?” என்று எத்தனையோ பேர் நடராஜனின் குடும்பத்தாரைக் கேட்டிருக்கிறார்கள்! ராஜேசுவரி மனதில் ரகுபதிக்குத் தன் பிறந்தகமும், தன் பிறந்தக பழக்கவழக்கங்களும் பிடிக்கவில்லையோ என பயம் தோன்றும். நடராஜனோ சளைக்காமல், “நான் இந்த தெலுங்கு நாட்டைப் போற்றத்தான் போற்றுவேன்! யார் தூற்றினாலும், செவியுற மாட்டேன்! இந்த நாடுதான் எனக்குச் சோறு போடும் நாடு! மாப்பிள்ளை, நீங்கள் ஆந்திர தேசத்தைப்பற்றி இளப்பமாகப் பேச வேண்டாம். உங்களுக்கு என்ன தெரியும் இந்த நாட்டைப் பற்றி?” என்று கேட்டுவிட்டார்.

ரகுபதியும் கூசாமல், “என்ன தெரியாது எனக்குத் தெலுங்கு நாட்டைப் பற்றி? என்று கேட்டு, சில சம்பிரதாங்களையும் பழக்க வழக்கங்களையும் எடுத்துத் கூறி கேலி செய்தான்,

“பொங்கலுக்கு மாப்பிள்ளையை அழைப்பார்களாமே! நம்மூரில் சூத்தர ஜாதியில் தான் அந்த வழக்கம்! அப்பள மாவு உருட்டிக் கலியாணத்தில் விருந்துக்குப் போடுவார்களாமே, பிசைந்து சாப்பிட! கூட, கலியாண வீட்டிற்குச் சாப்பிடப் போனால், கையிலே சொம்பும் ஜலமும் எடுத்துப் போவார்களாமே! பயத்தம் பருப்பு பூரணம் வைத்த உப்புட்டு பெரிய பக்ஷணமா? தேங்காய்ப் பூரணம் வைத்த உப்புட்டுப் போலாகுமா?” என்று கேள்விகள் கேட்டான்.

“சாப்பிடப் போகிற வீட்டில், குடி ஜலத்திற்கும், பாத்திரத்திற்கும் திண்டாட்டம் வைக்காமலிருப்போமே என்ற நல்ல எண்ணம்! அது கிராமாந்திர வழக்கம்!” என்று நடராஜன் ரகுபதியின் ஏளனத்திற்கு மாற்று கூற முயல்வார். இதற்குள் விசாலம், “மாப்பிள்ளை சரியாகத் தான் செல்கிறார். பிடி பயத்தம் பருப்பு, வெந்து பூரணமானால், தேங்காயளவு ஆகும்; தேங்காய்

ஒரு காய் போட்டால் ஒரு கைப் பூரணம் ஆகும். எது உயர்த்தி?" என்று இன்னொறு கேள்வியை ஆதரிப்பாள்

"புருஷர்கள் செய்யும் வாதம் விபரீதமாகாது, தெரியும்; ஆனால் இது புதுப் பழக்கம் ஆயிற்றே, கொஞ்சம் மனமொத்துவிட்ட பிறகு எப்படி வாதித்தாலும் நமக்கு பயமாயிருக்காது" என்று மகளிடம் சொல்லுவாள் விசாலம். ராஜேசுவரி கூட ஆச்சரியப் படுவாள். 'வெட்டுப் பழி, குத்துப் பழி' போல் பேசிவிட்டு, கொஞ்ச நேரத்திற்குள் எப்படி சுமுகமாக இருக்கிறார்கள்?" என்று சந்தோஷிப்பாள்.

ஆனால் ரகுபதி ராஜத்திடம் பேசிய சில சந்தர்ப்பங்களிலே, ஆந்திரத்துவேஷம் குறைத்துக் கொண்ட ரீதியிலே பேசவே இல்லை!

"ரொம்ப நல்லவர்கள் தான் அவர்கள்; அதாவது மந்த புத்தி, புத்திசாலித்தனம் குறைவு என்று அர்த்தம்!" என்பான். "விஜயநகரத்துப் பெருமையோடு சரி, பழங்காலப் பெருமை!" என்று இறக்குவான்.

பேச்சு ஆந்திரர்களைப் பற்றி எழக்கூடாது என்று நினைப்பாள் அவள். ஆனால் எப்படியோ வளைந்து கொள்ளும் பேச்சு. தெலுங்கர்களைப் பற்றிப் பேச்சு எழாவிட்டால், குழந்தைகளின் விஷமத்தைப் பற்றியாவது எழும். இல்லாவிட்டால் தமிழிசையைப் பற்றி எழும்! இந்த மூன்று விஷயங்களில் எதைப் பற்றிப் பேசினாலும் ராஜேசுவரியின் மனம் குழம்பும், கண்கள் கலங்கும்.

அப்படியிருக்க, இந்த மூன்று விஷயங்களைப் பற்றியும் ஒரு நாள் ரகுபதி அடுக்கடுக்காக பேசிவிட்டான்.

வீதியில் காலார உலாவி வரக் கிளம்பினார்கள் ஒரு நாள். எத்தனையோ பேர் அவர்களை ஊன்றிக் கவனித்தனர். "என்ன, நாம்தான் இந்த ஊரில் அதிசயக் 'கப்புல்ஸ்' போலிருக்கு; புருஷனும்; மனைவியுமாக உலாவப் போவதைக் காணாத பழம் பசலி மக்களா?" என்று கேட்டான் ரகுபதி.

ராஜேசுவரி தயங்கினாள் பதிலளிக்க; தெருவில் போகிறவர்களில் பல பேர் ராஜேசுவரியை அறிந்தவர்கள். 'பாட்டுப் பாடுகிற பெண்' என்று தெரிந்து கொண்டிருந்தவர்கள். எத்தனையோ பேர் பழக்கமானவர்கள். உரிமையுடன், "எங்கேயோ, தென் கோடிக்குப் போய் கலியாணம் நடத்திவிட்டீர்களே! இந்த ஊரில் வளர்ந்து, எங்கள் அன்புக்குப் பாத்திரமான பெண். அவளுடைய மணக் கோலத்தைப் பார்க்க ஆசைப்பட்டோமே! ஏமாற்றிவிட்டீர்களே!" என்று கேட்டவர்கள் பலர். 'எங்கள் பிள்ளைக்குக் கேட்கலாமென்று நினைத்தோமே! பார்த்தீர்களா, எங்கள் தெலுங்குப் பெண் என்று நாங்கள் நினைத்தோம், நீங்கள் வேற்றுமை பாராட்டிவிட்டீர்கள்!" என்று அன்புடன் கடிந்தவர்கள் சிலர். இத்தனை பேர் நிரம்பிய ஊர் அது. அவர்களில் எத்தனையோ பேர். ராஜேசுவரியை ரகுபதியுடன் கண்டதும், "ஓ, இவள் கணவனா?" என்று பார்த்து, தகுந்த ஜோடி என்று ஆராய்வார்கள். ராஜேசுவரிக்குத் தெரியாதா இது? தெரிந்தவர்கள் கண்ணில் படுவார்கள் என்று உலாவத் தயங்கினவளாச்சே!

"என்னை ரொம்ப பேருக்குத் தெரியும். அதுதான் நம்மைப் பார்க்கிறார்கள் . . " என்று மெல்லச் சொன்னான் ராஜேசுவரி.

"இப்பொழுது யாரோ சிரித்தானே உன்னைப் பார்த்து? அது யார்?"

"மஹிளா சமாஜத்து செக்_ரடரினின் புருஷர் போலிருக்கு."

"என்ன, மகிஷா சமாஜமா? இவன் மனைவி மகிஷியா? அந்த சமாஜத்திலேயா நீ தசராவின் போது பாடினதாக எழுதினாய்?"

"ஆமாம். ஆறு வருஷமாக வருஷா வருஷம் வருடாந்திர விழா நடக்கிறது! பாடுகிறேன், வழக்கமாக!"

"அ_துதான் எழுதியிருந்தாயே! கலியாணத்தின்போது ஒரு பாட்டுப் பாட பயந்தவள், கச்சேரி செய்கிறாளாமே என்று கூட பேசிக் கொண்டோம்! இந்த ஆந்திர தேசத்து ரசிக மகாஜனங்களுக்கு சங்கீதக் கச்சேரி என்பது என்ன என்றாவது தெரியுமோ?"

இந்தக் கேள்விக்கு உடனே பதிலளிக்காமல் மௌனமாக இருந்த ராஜேசுவரி, கணவனும் பேசாதிருக்கிறானே என்று வெருவி, "இங்கெல்லாம் சங்கீத ஞானம் போதாது என்று இவர்களே சொல்வார்களே, நாம் சொல்ல என்ன கிடக்கிறது? ஒரு நல்ல சங்கீதக் கச்சேரி கூட நடக்கிறதேயில்லை. வாத்தியார் கூட சொல்லுவார், 'கேள்வி ஞானத்திற்கே வழியில்லையே!' என்று. யார் வீட்டிற்காவது போய் நல்ல கச்சேரி புரோகிராமைக் கேட்கச் சொல்லுவார்," என்று சமாதானம் கூறினாள்.

"அவருக்கு மகா சங்கீத ஞானம்! நான்தான் கேட்டேனே அவர் சங்கீதத்தை!"

இது ராஜேசுவரி சற்றும் எதிர்பாராத தாக்குதல்!

"இதாவது இருக்கிறாரே என்று அம்மாவும் அப்பாவும் சந்தோஷப்படுவார்கள், " என்று ராஜேசுவரி மெல்லச் சொன்னதை ரகுபதி கவனித்தானோ? ரகுபதி பேசவேயில்லை.

"சொற்ப சங்கீத ஞானம் உள்ளவரை, பெரிய மேதை போல நடத்துகிறார்கள் நடராஜன் வீட்டில்! என்ன அறியாமை!" என்ற கோபம் ரகுபதிக்கு!

"பாட்டு வாத்தியாரைத் தூற்றுகிறார் என்றால் என்னையும் கேலி செய்கிறார் என்ற அர்த்தமா? இல்லை, இல்லை! யாரோ சொன்னார்களே முன்பு, 'மெட்ராசிலே நல்ல சிக்ஷையிருக்குமே! இந்த ஊரில் முதல் தர பாடகியாக இருப்பவள், மெட்ராசிலே முதல் தர வித்வாம்ஸியாகலாமே! இங்கே சிக்ஷை வேண்டாம், மெட்ராஸுக்கு அனுப்புங்கள்" என்று யாரோ சொன்னாரே, கணவரும் அதையே நினைக்கிறாரோ?

கணவரிடம் சொன்னால் என்ன? வாத்தியாரைக் குறை கூறுபவர்கள் இந்த ஊரிலும் இருக்கிறார்கள், சங்கீத ஞானம் உள்ளவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் தன் திறமையில் மதிப்பு வைத்துப் பேசினார்கள், என்று தெரியப்படுத்தினால் என்ன?

ராஜேசுவரி பேசும் முன், ரகுபதியே பேசிவிட்டான்!

"இந்த வாத்தியார் பாடினால் எப்படி இருக்கும் தெரியுமா? ஒரு நாள் நடுராத்திரியில் எழுந்து உன் தங்கை, 'அப்புச்சி தா' என்று அழுதாளே, அந்த அழுகை, தூங்கிக் கொண்டிருப்பவர்களின் காதிற்கு எப்படி இருக்கும், யோசித்துப் பார். அப்படி இருக்கிறது சர்மாகாரு பாடினால்!"

'நாராசமாகவா? எரிச்சல் மூட்டி விரட்டும் நச்சொலியாகவா?' ராஜேசுவரி இப்படியெல்லாம் கேட்காமல், "ராதை நடுராத்திரியில் எழுந்து கேட்டால் எப்படி இருக்கும்! குழந்தைகளுக்கு இரவு பகல் எல்லாம் தெரிகிறதா? தூங்கி எழுந்ததும் திங்கவேணும்!" என்று தான் பதிலளித்தாள்!

ஆந்திர தேசத்திலிருப்பதனால் தன்னிடமுள்ள சிறப்புகள் வெளிவரவில்லை; ஆந்திரதேசத்திலிருப்பதனால் தான், தன் பாட்டுத் திறமை இலுப்பைச் சர்க்கரை; ஆந்திர தேசத்திலிருப்பதனால் தான் தகுதிக்கு மீறிய பெருமை, என்று அடக்கம் நிறைந்த பல சிந்தனைகளை வளரவிட்டிருந்தாள் ராஜேசுவரி.

"'குருவுக்கு மிஞ்சின சிஷ்யை ஆகிவிட்டாள் ராஜம்; அவளுக்குப் பிறவியிலேயே இருக்கிறது வித்தை; 'இவர் சொல்லிக் கொடுத்தா வந்தது இத்தனையும்?' என்று என்னிடம் கூடச் சொன்னாள் சுந்தரம்மகாரு. பிறவியிலிருந்தால் மட்டும் வந்துவிடுமா என்ன? இந்த வாத்தியார் இல்லை என்றால் நம்ம ராஜேசுவரிக்கு சரிகம தெரிந்திருக்குமா என்பது சந்தேகம்தான்! நான் எங்கே சிரத்தையாய்ச் சொல்லிக் கொடுத்திருக்க முடியும்? அவளும் எங்கே வணங்கியிருப்பாள்? வாத்தியார் நல்ல வாத்தியார் தான்; 'இத்தனை தூரம் சொல்லிக் கொடுக்க வாத்தியார் இருக்கிறாரா என்று உன் மன்னி கேட்டாளே?" என்று விசாலமும் சந்தோஷமுடன் சொன்னதுண்டு.

"இப்பப்போதான் இந்தப் பக்கங்களில் சங்கீதத்தில் சிரத்தை வந்திருக்கிறது; அம்மாமார்கள் சிரமத்தை வைப்பது கிடையாது. சிஷ்யைகளுக்குத் தாயாரின் ஒத்துழைப்புக் கிடையாது. நான் எத்தனைதான் சொல்லிக் கொடுத்தாலும், வீட்டிலிருப்பவர்களுக்குச் சிரத்தையோ, ஞானமே இல்லாவிட்டால் எப்படி வித்தை பெருகும்?" என்று வாத்தியார் கூறுவார்.

"ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச் சர்க்கரை என்று சொல்வார்களே; இந்த ஊருக்கு இவள்

தான் வித்வாம்ஸி; இவள் வயசுப் பெண்களும், இன்னும் சில பேரும், ஐயோ, கர்ண கொடூரமாகப் பாடுகிறார்கள். ஏதோ, இந்தப் பக்கத்திலும் ஞானம் படைத்தவர்கள் இருக்கிறதனால், அவர்களுக்கு நம்ம ராஜேசுவரியின் பாட்டு அமுதமாக இருக்கிறது." என்று அடிக்கடி விசாலம் சொல்வாள்.

"இந்த ஊருக்குத் தான் சர்மாகாரு பெரிய படே பாட்டுக்காரர்!" என்று யாரோ யாரிடமோ, ராஜேசுவரியைப் பற்றிப் பேசியபோது, அவளும் அங்கே இருந்தாள்.

"வாத்தியாரைக் குறை கூறுகிறார்களே!" என்ற வருத்தம் உண்டாகவே, ராஜம் வீட்டில் வந்து சொன்னாள்.

"நம்ம தமிழ் நாட்டிலிருந்திருந்தால், வருஷத்திற்கு ஒரு வாத்தியாராக மாறி, ஒருவர் கற்றுத் தந்தது மற்றவருக்குப் பிடிக்காமல், உன் பாட்டு இன்னும் மட்டமாகவே போயிருக்கலாமோ என்னமோ? இங்கே இவர் ஒருவரிடமே பயிற்சி செய்வதாலேயே உனக்கு நன்மை ஏற்பட்டிருக்கலாம்! என்னமோம்மா, நமக்கு இவர் மேல் பக்தி. இவர் கற்றுத் தருகிற சங்கீதம் சோடை போகவில்லை. இவரும் சிரத்தையாய், தமிழ்ப் பெண், பாட்டுக்குப் பிறந்தவள் என்று சொல்லி உனக்கு நல்ல பெயர் வாங்கித் தந்திருக்கிறார்! நமக்கு அதுவே பெருமை!" என்று தந்தை கூறியபோது, சந்தோஷ ஆரவாரம் செய்தது அவள் மனம்.

அன்றிரவு படுத்த பொழுது இதையெல்லாம் நினைவிற்குக் கொண்டு வந்து அசை போட்டாள் ராஜேசுவரி.

## 16

அல்லும் பகலும் ஒரு பெண்ணை ஆட்கொள்ளும் மகத்தான பணி என்னவென்பதை யோசித்தாள் ராஜம். தன் தாய் கவன்றதையெல்லாம் நினைவு கூர்ந்தாள். இசைத் திறன், கல்வியறிவு ஆகிய அம்சங்களைவிட, அன்பும் சேவையும், பொறுமையும், மணவாழ்க்கையில் அதிகம் தேவை என்பதை அவள் உணர்ந்தாள். கணவனின் எம்.ஏ பட்டம் அவளைப் பெருமைப்பட வைக்கவில்லை. ஆனால் கணவன், ஒரு சிறு விகடத் துணுக்கைப் படித்துக் காட்டியபொழுது, பெருமையால் உள்ளம் பூரித்ததே? அது போலத் தானே, கணவனுக்கு மனைவியின் அன்பும், சேவையும், பணிவும் முக்கியமாகத் தோன்றும்? இசைத் திறனும் கல்வியறிவும் யாருக்குக் குறைவு? இடறி விழுந்தால் சங்கீதக் கச்சேரியாம், தமிழகத்திலே. படியிறங்கினால், பட்டதாரிப் பெண்களாம். இந்தப் பத்து வகுப்புப் படிப்பும், இலுப்பைப்பூப் பாட்டுத் திறமையும் எந்த மூலை? வாழ்க்கையில் இன்னும் பால பாடமே கற்கவில்லையே?

ராஜேசுவரி ஒரு உறுதி பூண்டாள். பெண் பிறவியின் பயனை சீரிய முறையிலே பெற்றுப் புகழுக்குரியவளாக வாழ வேண்டும். அது தன் கடமை மட்டுமல்ல; அதுதான் வாழ்வு என்று முடிவு கட்டினாள்.

"அம்மா! உன் கவலைகள் ஒழி! நான் புகழுக்குப் பிறந்தவளா? சரி, அந்தப் புகழ், மேடைப் புகழ் அல்ல; கிருகலட்சுமியாக விளங்குவதே என் சிறப்பு ஆகும். நான் அதிஷ்டசாலியா? சரி, என் முயற்சிக்குத் தோல்வியே இல்லை! வெற்றி நிச்சயம்!"

கண்ணனோடு தொட்டிலாடுவதைவிட்டு, ஆசைக் கணவனோடு கேரம் விளையாடினாள். அவன் அவள் கையிலிருக்கும் காயைக் காரணமில்லாமல் பிடுங்குவான். அவள் 'சுவரில் படம் கோணலாக மாட்டியிருக்கிறதோ?' என்று யோசனையில், விளையாடுவதை விட்டு, படத்தைக் கவனித்தால், பெரிய குற்றம் செய்துவிட்டவளைக் கடிவது போல, தோளைத் தட்டி, 'எங்கே கவனம்?' என்று கேட்பான்! ராஜேசுவரிக்கு இந்தத் தண்டனைகள் ரொம்பப் பிடிக்கும்!

ரகுபதி ஊருக்கு புறப்பட்டுச் சென்றான். ராஜேசுவரியின் மனதில் அவனுடைய தோற்றம் அன்பே உருவாக ஒளி வீசியது.

இளமைப் பருவம், வாழ்வின் சிகரம். அந்த இளமைப் பருவத்திலே அண்ணாமலைத் தீபம் போல் பிரும்மாண்டமாக ஒளி வீசுகிறது உள்ளம். அதன் சக்தி அற்புதம். ஒழுக்கம், நன்னெறி, தெய்வ பக்தி, உயர்ந்த லட்சியங்கள், ஆகிய நற்குணங்கள், நற்செய்கைகளிலே உண்மையான நாட்டம் ஏற்படுவது இளமையிலேதான்.

ஊருக்குப் போய்ச் சேர்ந்த ரகுபதி, அன்பு மழை பொழிந்தான். ராஜேசுவரி தகுந்த வாழ்க்கைத் துணைவி என்று போற்றினான். "சில பேரைக் கண்டால் பிடிக்கும், சில பேரைக் கண்டால் பிடிக்காது என்னும் கெட்ட குணம் என்னிடம் இருக்கிறது. தப்புத்தான். உன்னுடைய உறவினாலும், உன் தந்தையின் ஆந்திராபிமானத்தினாலும், நான் என்னிடமுள்ள இந்தக் குறையை தீர்த்துக் கொள்ளப் போகிறேன்," என்று அவன் குழைவுடன் எழுதியதைக் கண்டு ராஜேசுவரி மெய்சிலிர்த்தாள். "என்னிடமுள்ள எத்தனையோ குறைகளை நான் உணர்கிறேனே! உங்கள் உறவால்தான் என் வாழ்வு தழைய வேண்டும்!" என்று மனமுறுகினாள்.

வீட்டிற்கு நாட்டுப் பெண்ணை அழைக்க நாளைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதிவிட்டார் துரைசாமி அய்யர். ரகுபதி, 'பாட்னா' பேட்டி வெற்றியளிக்கவில்லை. மகனும், மருமகளும் கூடி வாழ்வதையும் ஒத்திப் போட வேண்டாம் என்று அவர் நினைத்தார். சாரதாம்பாளும், "நம்முடன் கொஞ்சநாள் இருக்கட்டும்," என்றாள். அதனால், ராஜேசுவரியை, சம்பிரதாயத்தையொட்டிப் புக்ககம் அழைக்கும் ஏற்பாடு தொடங்கியது.

கோடை விடுமுறை துவங்கியதும் குடும்பத்துடன் புறப்பட்டார் நடராஜன். "ராஜம், நீ காவிரி; பாயுமிடமெல்லாம் செழிப்பு, அது போல நீ கால் வைத்த இடமெல்லாம் செழிக்க வேண்டும். இதுதான் என் ஆசி" என்று முழங்கினார் நடராஜன், புறப்படுமுன். புறப்பட்டு சம்மந்தி வீடு வந்து சேர்ந்த பின் சோர்ந்து விட்டார். ஒரு நாள் முழுவதும் ராஜேசுவரி வாசற்புறமே வராமல், கண்ணிலே படாமல் இருந்துவிட்டாளே என்று வருந்தினார்.

உற்சாகமுடன் வந்திருந்த ராஜேசுவரி, தன் தாயை ஒண்டிக் கொண்டு நிற்கவும் முடியாமல், மாமியாரைத் தொடர்ந்து நிற்கவும் முடியாமல் சஞ்சலப்பட்டாள்.

சாரதாம்பாள், முகம் குறைந்து தென்பட்டதனால் விசாலம் தயங்கித் தயங்கி நடமாடுவதைக் கண்டு ராஜேசுவரி, "ஏன் இப்படி?" என்று மலைத்தாள்.

"அம்மா, உன் கவலைகளை அறிவேன். என் நாத்தனார் அளித்த புத்திமதிகளைக் கேட்டேன். என் புக்ககத்தாரின் சிறப்புகளைக் கண்டேன். என்னிடமுள்ள குறைகளை உணர்கிறேன். என்னைத் திருத்திக் கொள்ளும் வகையறிந்தேன். என், கணவரின் அன்பு எனக்கு தென்பூட்டும். நான் தளர மாட்டேன்; கலங்க மாட்டேன். நல்முத்துப் போல துலங்குவேன், காவிரி போல விளங்குவேன், என் பிறவிப் பயனை எய்துவேன். நான் பாக்கியலட்சுமி!" என்ற மானசீகமாகத் தாய்க்குத் தேறுதல் கூறினாள் அவள்.

அன்றிரவு, வாழ்க்கையில் முதல் தடவையாக, கணவனின் தலையணைப் பங்கு கொண்டாள் ராஜேசுவரி.

இருள் பிரிந்து காலை ஒளிபரவும் நேரத்தில் விசாலம் சாரதாம்பாளை அணுகினாள். கனிந்து கொண்டிருந்த அடுப்புப் புகைப்படலத்தைச் சுருள் சுருளாக அனுப்பிக் கொண்டிருந்தது. விசாலம் அந்தக் காட்சியைப் பார்த்தாள். இடுப்பில் கண்ணனைப் பார்த்தாள். பிறகு மெல்ல, "மாமி, உங்களுக்குத் தெரியாது என் குடித்தனம் ஆரம்பமான விதம். அவர் சம்மதப்படவில்லை; அதனால் எனக்கு விசேஷமாக எதுவும் நடக்கவில்லை. எனக்கு நேற்றெல்லாம் தடுமாற்றம், என்ன செய்கிறது என்று. அறையலங்காரம் செய்யணும் என்று நீங்கள் சொன்னப்புறம் தான் ஏதோ செய்து வைத்தேன்" என்றாள். இத்தகைய நிலைமை எதிர்பார்த்திராத சாரதாம்பாள், "அப்படியா, எனக்குத் தெரியாது. நடந்தாச்சு காரியம். நான் சொன்னதை இனிமேல் மறந்து விடுங்கள்!" என்று சர்வ சகஜமாகச் சொல்லிவிட்டு, கனிந்துவிட்ட அடுப்பை விசிறி, நெருப்பு கிளப்பிப் புகையை ஒழித்தாள் சாரதாம்பாள்.

"அத்தரின் மணமும், அகிற் புகையின் வாசமும், அறையலங்காரமும் இல்லாமல் தான் விசாலத்தின் இல்லற வாழ்வு மக்கட் செல்வத்துடன் தழைத்திருக்கிறது!" என்பதை சாரதாம்பாள் அப்போது தான் அறிந்தாள். "தெரியாதாக்கும்! தெரியாமல் தான், பூவும், பிஞ்சும் தழைத்ததாக்கும்?" என்று முதல் நாள் மாலை கேட்டதற்காக வருந்தினாள்.

சிறுவயதிலே, கொலுப்படிகளிலே பொம்மைகளை அமர்த்தும் பொழுதே, ராஜேசுவரி 'நல்ல நாட்டுப் பெண்ணாக' விளங்கினாள். லட்சுமி, சரஸ்வதி, பொம்மைகள் இரண்டு இருந்தன. லட்சுமி

பொம்மையை நடுப்படியிலும், சரஸ்வதியின் பொம்மையை அதற்கு அடுத்த கீழ்ப்படியிலும் வைத்தாள் ராஜேசுவரி. அது அவ்வளவு அழகாக அமைந்ததாகத் தோன்றவில்லை. "பெரிய பொம்மையான சரஸ்வதியை நடுப்படியில் வையேன்! எடுப்பாகத் தெரியும், வெள்ளை வெளேரென்ற பொம்மை! லட்சுமியை, சரஸ்வதியிருக்கும் இடத்திற்கு மாற்றேன்!" என்றார் தந்தை.

"மாமியாரைவிட உயரமாக ஆசனத்தில் நாட்டுப் பெண் உட்காரலாமா அப்பா? அதற்காகத்தான் இப்படி வைத்தேன். சரஸ்வதி தான் நடுவில் சோபிக்கும் போலிருக்கு என்று எனக்கும் தான் தோன்றிற்று" என்று பதிலளித்தாள் ராஜேசுவரி.

"அவள் சொல்வது சரிதான்" என்றாள் விசாலம்.

நடராஜன் சிரித்தார். "நாம் கல்விக்கு அதிகம் மதிப்பு வைக்கிறோம் அடுத்தபடிதான் செல்வத்திற்கு மதிப்பளிக்கிறோம் என்று இருக்கக்கூடாதா? சரி, உங்கள் இஷ்டம்" என்றார். ராஜேசுவரிக்கு அவர் கூறுவதும் சரியென்று தோன்றிற்று. ஆனால், செல்வமும் தான் கல்விக்குத் தேவை என்று அவள் எண்ணினாள் போலும். தாமரையில் அமர்ந்திருந்த லட்சமியை மேல் படியில் தூக்கி வைத்தாள். இருமருங்கும் இரண்டு பீங்கான் யானைகளை வைத்தாள். கஜலட்சுமி ஆக்கிவிட்டாள்_. துதிக்கையைத் தூக்கிய நிலையில் 'பீங்கான்' யானைகள், ஊதுவத்திகள் சொருக உபயோகப்படும்படியாக முன்பெல்லாம் உண்டு.

அந்தச் சிறுமி ராஜேசுவரி தான் இன்று, பருவத்தின் மலர்ச்சியிலே, இல்லற வாழ்வின் முதற்படியிலே, நின்றாள். அவளுடைய முதற் பகல் ஆரம்பமாயிற்று.

விசாலம் கண்களிலே நீர் மல்க, பேசமாட்டாமல் நின்றாள், இடுப்பில் கைக் குழந்தையுடன். சம்மந்தியம்மாளை வணங்கினாள். சற்றுத் தொலைவில் கதவருகு நடராஜனும், தம்பி மணியும், பளபளக்கும் கண்களுடன் நின்றனர். எட்டு வயதுப் பெண்ணும், நான்கு வயதுச் சிறுவனும் வாசலில் ஜட்கா வண்டியருகு இருந்தனர். "வறோம் மாமி, வறோம் ராஜம்! சமத்தாயிரு!" என்று எப்படியோ, கூறி முடித்தாள் விசாலம். நடராஜன் கண்ணீரை உதிர்த்துவிட மனமின்றி, சடாரென அப்பால் சென்று, வாசலில் நிற்கும் தமது இரண்டு குழந்தைகளையும் கூட்டி வந்தார். "அக்காவைப் பார்க்க வேண்டாமா? ஊருக்குப் போகிறோமே!" என்று கூறும்பொழுதே, கண்ணீர் புரண்டு விழுந்தது அவர் முகத்திலே.

இத்தனை நேரமும் பேசமுடியாமல் நின்ற ராஜேசுவரி, தன் மாமியாரையும் கணவனையும் ஒரு முறை பார்த்தாள், அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள். சிரிக்கும்பொழுது பொலபொலவென நீர்த் துளிகள் உதிர்ந்தன.

"பாப்பாவைக் கொடு அம்மா!" என்று கேட்க எண்ணினாள். தம்பிப் பாப்பாவைக் கையிலே வாங்கி முத்தமிட ஆசைப்பட்டாள். ஆனால் உடல் அசைய மறுத்தது; நா எழவில்லை.

தலையை ஆட்டி மகளிடம் விடை பெற்றார் தந்தை. மணி கூட கண்ணீருடன் அவரைப் பின் தொடர்ந்தான். பேச முடியாமல், கைகளால் சைகை செய்தவாறு, புடவைத் தலைப்பை இழுத்துச் சரி செய்து கொண்டு விசாலமும் வாசற்புறம் சென்றாள்.

துரைசாமி அய்யர் வாசலில் நிற்கும் வண்டி வரை சென்று நின்றார். தன் மனைவியைப் பார்த்து, "உன் சம்மந்தியம்மாளும் உன்னைப் போலத்தான். வயதில் சின்னவரானாலும் பழைய காலம் தான்! காலுக்குச் செருப்புப் போடுகிற வழக்கம் வைத்துக் கொள்ளவில்லை!" என்று கூறி சிரித்து, வருத்தமுடன் செல்பவர்களையும் சிரிக்க வைத்து உற்சாகமூட்டிவிட முயற்சித்தார். விசாலம் மரியாதைக்குச் சிரித்தாள், ஆனால் அந்தச் சிரிப்பிலே இன்பம் இல்லை. நடராஜன், விசாலத்திற்குப் பிறகு வண்டியில் ஏறி அமர்ந்தார்.

எல்லோருக்கும் பொதுவாக ஒரு நமஸ்தே வைத்து விடை பெற்றார். வண்டி நகர்ந்தது. சமையற் கட்டிலேயே, பாத்திர அலமாரிக்கருகு கண்களில் நீருடன் நின்ற ராஜேசுவரியை நோக்கி ரகுபதி வந்து கொண்டிருந்தான். இதற்குள் சாரதாம்பாள் வரும் ஓசை, பெட்டியோசையின் மூலம் கேட்டது. ரகுபதி, பாத்திர அலமாரியருகு வந்து ஒரு டம்ளர் எடுத்தான். அறைக்குள் நுழைந்து வரும் தாயைக் கண்டு, "அம்மா, குடிக்க ஜலம் வேணும். இவள் கண்களிலிருந்து ஜலம்

பிடிக்கட்டுமா?" என்று கேட்டான் இடக்காக. ராஜேசுவரி இடம் விட்டு நகர்ந்து அடுப்படிக்கே வந்துவிட்டாள்.

"அப்படி அழுகிறாளா என்ன? புதுசு, சித்த அப்படித்தான் இருக்கு! அவளுடைய அப்பாவே என்னமாய்க் கலங்கிவிட்டாரே! என்னமோ, எனக்கு அதிசயமாகத்தானிருக்கு! பவானிக்காக யாரும் இப்படிக் கண்ணீர் விடவில்லை. ஒவ்வொருத்தர் ஒவ்வொரு சுவபாவம்!" என்றார் சாரதாம்பாள்.

ராஜேசுவரிக்கு கண்ணீர் அடங்கிவிட்டது. கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு, மாமியாரைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே எத்தனையோ அர்த்தங்கள்! சாரதாம்பாள் கனிவுடன் நாட்டுப் பெண்ணைப் பார்த்தாள். "சரி, சித்த அந்தண்ட போவோம். பாவானிக்கு, நான் கடுதாசி எழுதணும். நீ ஏதாவது புத்தகம் படிக்கிறதானால் படி" என்றாள் சாரதாம்பாள்.

"இந்தக் காப்பிப் பாத்திரங்களைக் கொண்டு போய் போட்டுடக் கூடாது அம்மா?" என்று கேட்டாள் ராஜேசுவரி.

"காப்பி இன்னும் ரகுபதி குடிக்கல்லை! உனக்குக் காப்பி வழக்கமில்லைன்னா, கோகோவே சாப்பிடு, எது இஷ்டமோ! மூன்று மணிக்கு வேலைக்காரி வந்தப்புறம் ஒழித்துப் போடலாம், அவசரமில்லை."

சாரதாம்பாளைத் தொடர்ந்து ராஜேசுவரியும் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். "இத்தனை இதமாய்ப் பேசும் மாமியார் வேறு யாருக்கு உண்டு! என்ன ஆதரவு!" என்று ஆறுதலும், பெருமையும் உண்டாயின.

வாசலில் எவரோ, நண்பருடன் பேசிக் கொண்டிருந்த துரைசாமி அய்யர், 'ராஜலட்சுமி' என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தார். வாசலுக்கு அழைத்துச் சென்று, அவளை நண்பருக்கு நமஸ்காரம் செய்யச் சொல்லிவிட்டு,"தெலுங்குப் பெண்தான் சார், அசல்! வாக்குச் சுத்தமாய், தியாகய்யர் கீர்த்தனைகள் பாடுவதைக் கேட்கவேண்டுமானால், ராஜேசுவரி பாடுவதைக் கேட்க வேண்டும்!" என்று மருமகளைப் புகழ்ந்து கூறினார்.

நாணமுடன் நின்ற ராஜேசுவரி முறுவல் பூத்து நின்றாள். எத்தனை நேரம் வாசலில் நிற்பது என்று உள்ளூரத் தயக்கம் வேறு. மருட்சியுடன் பார்த்தாள். "பாடச் சொல்லுவாரோ? தைரியமாகப் பாடவேண்டும், கடவுளே!" என்று எண்ணினாள். "சரி, உள்ளே போம்மா!" என்று மாமனார், கூறியதுமே, சந்தோஷமுடன் உள்ளே திரும்பினாள்.

"நாட்டுப் பெண்ணுக்கு மாமனாரான பெருமை, இன்னும் கொஞ்ச நாளைக்கு இப்படித்தான் வலுவிலே, வாசலில் போகிற, தெரிந்தவர்களுக்கு எல்லாம் உன்னைக் காட்டுவார், உன் மாமனார்!" என்று ஒரு தினுசாக, அதிகம் சிரிக்காமல், அதிகம் பார்க்காமல் எங்கேயோ பார்த்துக் கொண்டே சொன்னாள் சாரதாம்பாள். கொஞ்ச நேரத்திற்குள் மாமியாரிடத்திலே சிறிது மாறுதல் ஏற்பட்டுவிட்டதா என்ற ஐயம் தோன்றியது ராஜேசுவரிக்கு.

ஆனால் அந்த ஐயம் மறுகணம் மறைந்தது. "இன்னிக்குக் காலையிலே வந்ததே ஒரு பத்திரிகை! அதை வேணுமானால் படி!" என்று கூறிவிட்டு, நோட்டுப் புத்தகமும் பேனாவுமாக கூடத்தில் உட்கார்ந்து பவானிக்குக் கடிதம் எழுதத் தொடங்கினாள் சாரதாம்பாள்.

"எங்கிருக்கும்மா பத்திரிக்கை?" என்று மெல்ல கேட்டாள் ராஜேசுவரி.

"ரகுபதியைக் கேட்டால் தெரியும். படிச்சிண்டு இருந்தான் சாப்பாட்டுக்கு அப்புறம்."

ராஜேசுவரி நகரவில்லை. சிரித்துவிட்டு மழுப்பினாள். நின்றாள் அப்படியே.

"ஏன், படிக்கலையா?"

"வேண்டாம்மா. கண்ணைக் கொஞ்சம் எரியறாப்பலே இருக்கு. கொஞ்ச நேரம் கண்ணை மூடிண்டு படுத்துக்கட்டுமா?"

"படுத்துக்கோயேன்; அழுதிருக்காய், கண்ணுக்குக் கஷ்டமாயிருக்கும், சித்தே தூங்கேன்."

"சரிம்மா."

அங்கேயே சுவரோரமாக உட்கார்ந்தாள் ராஜேசுவரி. மாமியரைப் பார்த்தாள். சாரதாம்பாள் கூட ராஜேசுவரியைக் கனிவுடன் பார்த்துவிட்டு "தலையணை வேணுமா?" என்றாள்.

"வேண்டாமே. வெறுமனே தான் படுத்துக்கறேன்."

பத்திரிகையைக் கேட்க ராஜேசுவரி வரமாட்டாள் என்ற ஏமாற்றம் போலும் ரகுபதிக்கு. அவனே கையில் பத்திரிக்கையுடன் எழுந்து வந்து எட்டிப் பார்த்தான். ராஜேசுவரி, சடாரென எழுந்து உட்கார்ந்தாள். மறுகணம் எழுந்து நின்றாள்.

"சரி தான், இது வேறே மரியாதையா? பார்த்தாயாம்மா, உன் நாட்டுப் பெண்ணை!" என்றான் ரகுபதி முக மலர்ச்சியுடன்.

"பார்த்துக் கொண்டிருக்கிறேனே! பின் ஆரம்பத்திலேயே வக்ரமாயிருக்கணுமா? அதுக்கென்ன நீங்கள் புருஷர்கள் சொல்கிறபடி பெண்கள் இருந்தால் நன்றாயிருக்குமா?" என்றாள் சாரதாம்பாள்.

"புருஷர்கள் சொல்கிறபடி கேட்கக் கூடாது என்று சொல்கிறாயே அம்மா!" என்று சிரித்தான் ரகுபதி.

"நீங்கள் தாட்பூட் என்று இருக்கச் சொன்னால், நாங்கள் கேட்டால், அப்புறம் உங்களுக்கே தான் கஷ்டம் தெரியுமா? சரி, இருக்கட்டும். போயேன் சித்தே அந்தண்டை. படுத்துக் கொள்ளட்டும் அவள். நீ வந்து எழுப்பிவிட்டாய்."

ரகுபதி, ராஜேசுவரியைப் பார்த்துக் கொண்டே அப்பால் சென்றுவிட்டான். ராஜேசுவரி சிறிது நேரம் நின்றாள். பிறகு சிறிது நேரம் உட்கார்ந்தாள். மாமியார் கடிதம் எழுதுவதிலே ஆழ்ந்து விட்டதைக் கண்டதும், படுத்துக் கொண்டு விட்டாள். உடலைக் குறுக்கிக் கொண்டு ஒடுங்கிப் படுத்தாள்.

கண்களை முடிக் கொண்டாள். ஆனால் மனம் மூடவில்லை. உள்ளத்தில் உருவாக்கிய உயர்ந்த லட்சியங்களை செயலில் நிறைவேற்றி நனவாக்கும் முதல் நாள் அல்லவா? கண்ணயர்ந்து கனவு காணலாமா? உடலயர்ந்து விட்டாலும் உள்ளம் அயரக்கூடாது!

இத்தகையக் கவலையினூடே ராஜேசுவரிக்கு ஒரே ஒரு நம்பிக்கை மேலோங்கியிருந்தது.

அன்னைக்கும், மனைவிக்குமிடையே அன்பு நிலவியிருப்பதைக் காணும் பாக்கியசாலிக் கணவனின் பாராட்டுக்குரியவளாக வேண்டியது தான் பெண்ணிற்குப் பெருமை; முயற்சியினாலும், அன்பினாலும், பணிவினாலும், வாழ்வைச் சிறப்பித்துக் கொள்ளுவது தான் பெண்ணின் கடமை. கடமையை நிறைவேற்றுவதற்கு ஊக்கம் கணவனால் ஏற்படும்; பெருமையைப் பெறுவதற்கு ஊக்கம் மனவலிமையினால் ஏற்படும்; இந்த உறுதி தான் அவளுக்கு இருந்தது.

ஒரு சிறு விஷயம் நினைவிற்கு வந்தது:

"உங்கள் அம்மாவிற்கு என் அம்மா ஒரு கடிதம் வைத்திருக்கிறாள் இத்துடன்!" என்று ராஜேசுவரி எழுதியது ரகுபதிக்குப் பிடிக்கவில்லையாம்.

"நம் அம்மா என்று எழுதுவாயே முன்பு? ஏன் பிரித்து எழுதிவிட்டாய்! என் மனசுக்கு எப்படியோ இருக்கிறது!" என்று ரகுபதி மறுமொழி எழுதினான்.

"இரண்டு அம்மாக்களைப் பற்றி எழுதும்படியாயிற்றே என்று பிரித்து எழுதினது கூட பொறுக்கவில்லையே, அடப்பாவமே!" என்று நினைத்து ராஜம் சிரித்துக் கொண்டாள். "பெற்று வளர்த்த தாயின் பால் பாசம் குன்றாதவர் என்றால் தான் என்னிடமுள்ள அன்பும் நிலைக்கும்!" என்று சந்தோஷப்பட்டாள்! அத்தகைய கணவனோடு இல்லறம் துவங்கிவிட்டது. தடுமாற்றத்துக்கு இடம் ஏது?

"மாமியாருடன் ஒத்துப் போவது தான் எனது முழுமுதற் கடமை!" என்று சிந்தித்தவாறு அவள் கண்ணயர்ந்துவிட்டாள்.

விழிப்பும் தூக்கமுமாயிருந்த நிலையிலே அவள் தன் மாமியார், மாமனாரிடம் குரலைக்

கேட்டாள். "ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். சின்னப் பெண் தானே? பிரிந்திருந்ததே கிடையாது போலிருக்கு!" என்ற சொற்களைக் கேட்டுக் கொண்டே நன்றாக விழித்துக் கொண்டுவிட்டாள். சடாரென எழுந்து உட்கார்ந்தாள். மாமனார் நிற்பதைக் கண்டு சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள்.

"ஏனம்மா, அதற்குள் தூங்கியெழுந்தாச்சா? கால் மணி நேரம் தானே ஆச்சு!" என்றார் துரைசாமி அய்யர்.

"கால் மணி நேரம் தூங்கினேனா?" என்ற வியப்பு மேலிட்டுக் கேட்டாள் ராஜேசுவரி. அவளுக்கு வெட்கமாகத்தான் இருந்தது. தலைக் கலைந்து விட்டதோ, ரகுபதி வந்து பார்ப்பானோ என்று எண்ணமுடன் ஒதுங்கி ஓரமாக நின்றாள்.

"நாட்டுப் பெண் வந்தாச்சா? என்னடி நாட்டுப் பெண்ணே, என்ன செய்கிறாய்?" என்று கட்டியம் கூறிக் கொண்டு தன் பின்னால் நிற்கும் பாட்டியம்மாளை, துரைசாமி, "வாருங்கள்.... பாருங்கள் நாட்டுப் பெண்ணை! ஒடுங்கி ஒதுங்கி ஓரமாக அதோ நிற்கிறாள்," என்றார்.

மாமனார் கூறுவது கேலியோ, பயங்கொள்ளித்தனம் என்று கூறுகிறாரோ, என்று எண்ணியபடியே ராஜேசுவரி, ஒண்டி நிற்காமல் தாராளமாக நின்றாள். பாட்டி நன்றாக உள்ளே வந்ததும், காலடியில் வணங்கி எழுந்தாள்.

"நாட்டுப் பெண் வந்தாச்சு வீட்டிற்கு!" என்று சாரதாம்பாளிடம் கூறியபடியே, ராஜேசுவரியை ஏற இறங்கப் பார்த்தாள் வந்த பாட்டி.

ராஜேசுவரியின் உடம்பு அவளையறியாமலே ஒடுங்கி மீண்டும் சுவரை ஒட்டிக் கொண்டது.

"பேஷாய்ப் பாடுவாள்!" என்றார் துரைசாமி.

"காரியம் தெரியுமா? ஏண்டி நாட்டுப் பெண்ணே, தாயார் உள்ளுக் காரியம் பழக்கியிருக்காளாயில்லையா?" என்று நேரடியாகக் கேட்டாள் பாட்டியம்மாள்.

சிரித்தபடியே நின்றாள் ராஜேசுவரி. பதில் சொல்லக் கஷ்டமாகிவிட்டதால், அப்படிச் சமாளித்தாள். தெரியாது, என்று சொல்லவும் வேண்டாம். 'தெரியும்' என்ற பெருமையாகக் கூறுவது போலும், பொய் சொல்ல வேண்டாம்!

"காரியம் தெரியறதோ இல்லையோ, ஆசையாய் 'நான்' என்று ஓடி வருகிறாள். சுறுசுறுப்பாக இருக்காள். நாலு நாள் பழகினால் தெரிகிறது" என்றாள் சாரதாம்பாள்.

"அத்தங்கா, சமையல் பிரமாதக் காரியமா? எல்லாம் தயாராய் வைத்துக் கொண்டு, நாலு அடுப்பு மூட்டினால், நாலு தினுசும் சமைக்க ஒரு மணி நேரம்! நான் கூட சமைத்துவிடுவேன்! சமைத்துமிருக்கிறேன்" என்றார் துரைசாமி.

சாரதாம்பாள் தலையை ஆட்டிவிட்டு, "நன்றாக ஆகும், ஆகாமலென்ன? காய்கறி நறுக்கி வைத்துக் கொண்டு, அரைக்க வேண்டியது, இடிக்க வேண்டியது எல்லாம் செய்து வைத்துக் கொண்டு அடுப்பு மூட்டினால் போதும் எனக்கு அரைமணி நேரத்தில் ஆகிவிடும்! அந்த மற்ற வேலைகளுக்குத்தான் நாள் முழுதும் வேணும். ஒழித்து, சாமான்களைப் பார்த்து வைத்து . . . இதையெல்லாம் செய்யத்தான் நாள் முழுதும் வேண்டியிருக்கு!" என்றாள் ரோசமுடன்.

ராஜேசுவரிக்கு மாமியாரின் பதில் மிகவும் ஆறுதல் அளித்தது. "இனி அச்சமில்லை. காலைச் சமையல் எப்படியும் மாமியார்தான் எப்பொழுதும் செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார். சமையலைப் பற்றி உடனடிக் கவலை வேண்டாம். மற்ற வேலைகளில், நாளில் பெரும் பகுதியைச் செலவழிக்க வேண்டிய மற்ற வேலைகளில், உதவிகளைச் செய்து, பெரும்பகுதி ஓய்வை மாமியாருக்குக் கொடுத்தால் அதுவே பெரும் மகிழ்ச்சியளிக்கும். ஆசையாய்ச் செய்வதைத்தான் மாமியார் விரும்புகிறார், புகழ்ந்து கூறினார். ஆதலால், சுறுசுறுப்புடன், இன்முகத்துடன், முழு மனதுடன் மற்ற வேலைகளைச் செய்வதே முக்கியம். மெல்ல மெல்லச் சமையல் பழகிவிடும். 'மனசு வைத்தால் வந்துவிடும். அந்த மனசுதான் வரவேண்டும்' என்று அடிக்கடி தாயார் சொல்வாள். மனம்தான் எப்போதோ வந்தாச்சே!"

பெரும் பகுதிக் கவலை நீங்கியவளானாள் ராஜேசுவரி. "மடிசார்ப் புடவை கட்டத் தெரியாதாடி, நாட்டுப் பெண்ணே?" என்று கேட்டாள் பாட்டி.

"தெரியும்." என்ற பாவணையில் தலையை அசைத்தாள் ராஜேசுவரி. "அகமுடையான் மடிசார்ப்புடவை கட்ட வேண்டாம் என்கிறானா?" என்று கூறிச் சிரித்தாள் பாட்டி. சிரிப்பதைத் தவிர மறு பதில் ராஜேசுவரி கொடுக்கவில்லை. சாரதாம்பாள் தான், "அகமுடையான் சொல்கிறதென்ன? நான் தான் சொன்னேன். நேற்றுவரை பள்ளிக் கூடம் போனவள். ஏகப்பட்ட நூல் புடவை சிற்றாடை வைத்திருக்கிறாள். அதெல்லாம் கட்டிக் கிழித்தப்புறம் வாங்குகிறதை ஒன்பது கஜமாக வாங்கலாம்" என்றாள் சாரதாம்பாள்.

எத்தனை அன்பு? மடிசார்ப்புடவை கட்டும் தொல்லையைத் தனக்கு வைக்காமல், பிறர் தன்னை குறை காணாமலிருக்கும்படி செய்கிறார் மாமியார் என்ற நன்றி பொங்கியது, ராஜேசுவரிக்கு.

“நானும் அப்பப்போ கட்டிப் பழகிவிட்டால், இழுந்துண்டு, இழுத்துண்டு போகாது அம்மா!” என்றால் அவள்.

“தேவலையே!” என்று மெச்சுபவள் போல ராஜேசுவரியைப் பார்த்தாள் பாட்டி.

இதற்குள், “அம்மா, பத்துப் பாத்திரம் போடுகிறீர்களா?” என்று வேலைக்காரியின் குரல் கேட்டது.

“முற்றத்துலே இருக்கிறதைப் போடட்டுமா அம்மா?” என்று கேட்டாள் ராஜேசுவரி நகர்ந்து கொண்டே.

“உம், போடு. புளிச் சக்கை ஒரு பாத்திரம் நிறைய இருக்கு, திண்ணைமேல். அதையும் போட்டுவிடு” என்றாள் சாரதாம்பாள்.

“ஏன், புளிக்காய்ச்சல் பண்ணினாயா?" என்று பாட்டி கேட்டாள்.

"ஆமாம், வழிக்கு சாதம் கலந்து தந்தேன், சம்மந்திகளுக்கு," என்று சாரதாம்பாள் பதில் சொல்வதைக் கேட்டுக் கொண்டே சமையலறையில் புகுந்தாள் ராஜேசுவரி.

"புளிக்காய்ச்சல் பண்ணினாயா என்று பாட்டி டக்கென்று எப்படிக் கேட்டார்? அனுபவ அறிவு!" என்று வியந்து கொண்டே சென்றாள், பாட்டியிடம் நல்ல பெயர் எடுத்தால் பெரிய பாக்கியம் என்று கருதினாள். "நாட்டுப் பெண்ணே!" என்று தன்னைக் கூப்பிட்டபோது தன் உடம்பு ஒரு கணம் நடுங்கியதை எண்ணிச் சிரித்துக் கொண்டாள். 'இப்படிக் கூப்பிடுவது நல்லது தான் எனக்கு. நம்மிடம் பணிவு எதிர் பார்ப்பவர்கள் யார் என்று தெரிந்துவிடுகிறது!" என்று சந்தோஷபட்டாள்.

பற்றுப் பாத்திரங்களை இரண்டு நடையாக வந்து புழக்கடையில் போட்டு விட்டுத் திரும்பும் போது, சாரதாம்பாளும் பாட்டியும் பேசும் விஷயம் எது என்பதை அவள் அறியலாயிற்று. "கட்டில் பீரோ எல்லாம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்" என்று சாரதாம்பாள் சொன்னதும், "எங்கள் அம்மாஞ்சி குணம் இனிமேல் மாறப் போகிறதா?" என்று பாட்டி பதில் அளித்ததும், "நான் வாயைத் திறந்து எதுவும் சொல்வதற்கு அவர் இடம் வைத்தால் தானே! இப்படியே என் காலம் போய்விட்டது" என்று சாரதாம்பாள் குறைப்படுவதும் ராஜேசுவரிக்குத் தெரிந்தது. மாமியாரின் மேல் அனுதாபம் ஏற்பட்டது. அம்மா கூட சொல்வாளே,‘வேலையை புருஷன் உதறித்தள்ளிய போது, எப்படித்தான் இருந்திருக்கும் மனம்_’? எனக்குத் கூட அந்த அம்மாளைப் பார்க்க வெட்கமாயிருக்கும் போலிருக்கு!" என்று சொல்வதுண்டே.

அன்று மாலை இன்னும் ஓரிருவர் வந்தனர். சாரதாம்பாளை விசாரித்துவிட்டு, ராஜேசுவரியை ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் போனார்கள். "ஒம்ரு நமஸ்காரம் போட்டால் அவர்கள் மனம் குளிர்ந்துவிடும்!" என்று முன்பு ஒரு நாள் ரகுபதி, பெரியவர்களைப் பற்றிப் பேசிய பொழுது கூறினான். அதை நினைவு வைத்திருந்த ராஜேசுவரி வந்த பெரியவர்களுக்கொல்லாம் நமஸ்காரம் செய்து எழுந்தாள். மனமுவந்து, இடை வளைத்து, தலை குனிந்து வணங்கி எழுந்த ராஜேசுவரியின் செய்கையே கண்ணுக்கு இன்பமாயிருந்தது.

மாலைச் சமயலையும் அன்று சாரதாம்பாள் தான் செய்தாள். தொடர்ந்து, தொடர்ந்து வந்து, "அதை எடுக்கட்டுமா? இதைப் போடட்டுமா?" என்று நடுநடுவில் கேட்ட வண்ணம், மாமியார் எந்தக் காரியம் செய்கிறாரோ, அந்தக் காரியத்தில் பங்கு கொள்ள வந்தாள் ராஜேசுவரி. எதை எதைச்

செய்ய வேண்டும் என்று முறை தெரியாததால், அவள் அப்படிச் செய்தாள்.

வெளியே உலாவச் சென்றிருந்தான் ரகுபதி. துரைசாமியும் சுற்றப் போய்விட்டார். சந்தியாகாலத்தில் விளக்கை ஏற்றிவிட்டு சாரதாம்பாள், "நீ வேணுமானால் பாட்டு வாசிச்சுக்கோ!" என்றாள்.

மாமியாரைப் பார்த்து ராஜேசுவரி முறுவலித்தாள். அந்தச் சிரிப்பிலே வினயம் தோய்ந்திருந்தது. "பிடில் வேணுமானாலும் வாசி" என்றாள் சாரதாம்பாள்.

பிடிலை எடுத்து வாசித்து நான்கு நாளாயிற்று என்று நினைத்ததும், வாசிக்கத் தோன்றியது ராஜேசுவரிக்கு. "காரியம் ஒண்ணும் இல்லையா அம்மா?" என்று கேட்டாள்.

"ரொட்டிதான் பண்ணணும். வேறே என்ன காரியம்? நான் பண்ணிக் கொள்கிறேன்" என்று கனிவுடன் சொன்னாள் சாரதாம்பாள். "நான் இட்டுப் போடறேனே அம்மா!" என்றாள் ராஜேசுவரி.

"இட்டுப் போட எத்தனை பேர் வேணும்? பத்து ரொட்டிக் கூட வேண்டாமே!" என்று சிரித்தார் மாமியார். மாமியார் காரியத்திலிருக்கும் பொழுது தான் பாட்டுக்கு உட்காருவது இஷ்டமில்லை ராஜேசுவரிக்கு. அதுவும், யாரும் கவனிக்காதபொழுது, மாமியார் கூட ஆவலாகக் கேட்காத பொழுது எதற்கு வாசிக்கணும்?

ஊரில் தன் தம்பி தங்கைகள் 'நான்', 'நான்' என்று ஓடி வந்து குட்டி ரொட்டிகளும், குஞ்சுப் பூரிகளும் இட்டுப் போடுவதுண்டு. ஒரு தடவை, ரகுபதி, அங்கிருந்தபோது அவர்களும் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இட்டுப் போட்டதை ரகுபதி கவனித்துவிட்டு பிறகு பேச்சு வாக்கில், "குழந்தைகள் கண்ட கண்ட இடத்திற்குப் போய் வந்திருப்பார்கள். எச்சிற் கையாயிருக்கும், அவர்களைச் சமையலறைக்குள் விடக் கூடாது. அவர்களுடைய எச்சில் பிறத்தியாரும் தின்ன வேண்டும் என்றால் முடியுமா?" என்றான். "தாயிருக்குமிடத்திற்குக் குழந்தைகள் வராதா? அதுவுமல்லாமல் இந்த மாதிரி இட்டுப் போடுகிறது என்றாலே எங்கேயும் குழந்தைகள் ஆசையாய் ஓடித்தான் வரும்! சொன்னால் கேட்கிறதுகளா? நாமும் கொஞ்சம் ஜாக்கிரதையாய்த்தான் இருக்கணும். மாப்பிள்ளை சம்மந்தி என்று வரத் தொடங்கிய பிறகும் "நம்ம குழந்தைகள் தானே" என்று இருந்துவிடக் கூடாதுதான். எங்கே, பெரியவர்கள் வீட்டில் இருந்தால், தொடலாம், தொடக்கூடாது என்ற வரம்பு இருக்கும்!" என்று விசாலம் கூட குறைபட்டாள் அல்லவா?

அதை நினைத்துக் கொண்டு ராஜேசுவரி, "எனக்கு இட்டுப் போடறதுன்னா ரொம்ப ஆசைம்மா! நாங்கள்ளாம் போட்டி போட்டுண்டு போவோம்!" என்று தன்னையும் சேர்த்துக் கொண்டு பேசினாள். "பின்னே, உங்கம்மா ஒண்டிக்காரி. நீயும் மூத்த பெண்! குழந்தைகள்ளாம் கூட மாட செய்வேளாக்கும்!" என்றாள் சாரதாம்பாள், ரொட்டி இட்டுக் கொண்டு எதிரில் அமர்ந்திருந்த நாட்டுப் பெண்ணைப் பார்த்தபடி.

"தம்பி இருக்கானேம்மா. அவன் அம்மா கூடப் போய் அடுப்புக்கு விறகு தூக்கிக் கொண்டு வருகிறதைப் பார்க்கணும், வேடிக்கையாயிருக்கும்!" இதை சொல்லும் போதே சந்தோஷத்தினால் கண்களில் நீர் துளும்பியது.

## 17

இரவு நெருங்க நெருங்க அவளுக்கு படபடப்பும் குழப்பமும் ஏற்பட்டது. முன்னிரவுதான் அவளுக்கு முதல் இரவு ஆகியிருந்தது. இந்தப் பகல் தான் அவளுடைய முதற் பகல் ஆகியிருந்தது; புக்கக வாழ்விலே. இரண்டாம் இரவு, மிகவும் மாறுபட்ட இரவாகத் தோன்றியது.

சமையலறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு மாமியார் கூடத்திற்கு வந்துவிட்டார். ராஜேசுவரி கூடத்திற்கும், தாழ்வாரத்திற்கும் இடையிலுள்ள கதவருகு நின்றாள். கூடத்தில் உட்கார்ந்தபடியே, குடிக்கும் பாலைப் பங்கிட்டுக் கொடுத்தாள் சாரதாம்பாள். ராஜேசுவரிக்கும் கொடுத்தாள். சர்க்கரை போட்டு கொள்ள ராஜேசுவரி விரும்பினாள். "நாங்கள்ளாம் சர்க்கரை போட்டு கொள்ள மாட்டோம், பால் ருசி கெடுத்துக் கொள்ள மாட்டோம்," என்று பவானி கூறியிருந்தாள். ராஜேசுவரிக்கு, மாமியாரிடம் "சர்க்கரை போட்டுக் கொள்கிறேன்," என்று கூறக் கூச்சம். "வேண்டாமே அம்மா," என்றாள் தயக்கமுடன்.

"கொஞ்சம் குடி" என்று கூறி பாதிப் பாலைக் கிண்ணத்திலே ஊற்றிக் கொண்டு கொடுத்தாள் சாரதாம்பாள். "சர்க்கரை போட்டுக் கொள்ளட்டுமா?" என்று ராஜம் கேட்டாள்.

"போட்டுக் கொள்ளேன்" என்று மாமியார் கூறியதும், சந்தோஷமுடன் அவ்வாறே செய்தாள் ராஜேசுவரி. பவானியிடம் தோன்றிய பயம் மாமியாரிடம் ராஜேசுவரிக்கு ஏற்படவில்லை. "எத்தகைய அன்புள்ள மாமியார்!" என்று எண்ணிப் பூரித்தாள்.

ரகுபதிக்குக் கொண்டு போய்க் கொடுக்க ஒரு டம்ளர் பால் கொடுத்தாள் சாரதாம்பாள். அதை எடுத்துக் கொண்டு போய், நேரே ரகுபதியிடம் தரவில்லை. படுக்கையை விரித்துக் கொண்டிருந்தான் ரகுபதி. அறை வாசலிலேயே டம்ளருடன் நின்றாள் அவள். அவன் முறுவலித்துவிட்டு டம்ளரை வாங்கிக் கொண்டான். ராஜேசுவரியைத் தொடர்ந்து, பாலை குடித்தபடியே கூடத்திற்கு வந்தான்.

துரைசாமியும் வந்தார் கூடத்திற்கு. "நாட்டுப் பெண்ணுக்குக் கொடுத்தாயா, மாமியாரம்மாளே! என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

"முதலிலேயே கொடுத்துவிட்டேன், நீங்கள் இப்படி ஏதாவது கேட்பீர்களென்று! அவளுக்கு வழக்கமில்லை போலிருக்கு, சர்க்கரை போட்டுக்கொண்டுதான் அரை டம்ளர் சாப்பிட்டாள்" என்றார் சாரதாம்பாள்.

"நியாயமாகப் பாலில் சர்க்கரை சேர்த்துத் தான் சாப்பிடணுமாம், சிமிட்டாவது போடணுமாம்" என்றார் துரைசாமி. "அதற்கென்ன, நாட்டுப் பெண்ணின் வழக்கத்தை மாமனார் பிடித்துக் கொள்ளுங்களேன். நல்லது தான் எதற்கும்!" என்று கொஞ்சம் சிரித்துக் கூறிவிட்டு சாரதாம்பாள் எழுந்துவிட்டாள்.

“ஊரிலே பால் சாப்பிடுகிறது ரொம்ப வழக்கமில்லை!" என்று ராஜேசுவரி மெல்லக் கூறியதும், துரைசாமி, "நான் அந்த வழக்கத்தைப் பிடித்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டுச் சிரித்தார்.

ராஜேசுவரி திடுக்கிட்டு, "அச்சோ! அதற்குச் சொல்லல்லே!" என்று பதிலளித்துவிட்டுச் சிரித்தாள். "குழந்தைகள் தூங்கிவிடுகிறார்கள், பால்காரன் வரும் முன்பேயே!”

“எதற்கு இரவுப் பால் குடிக்க குழந்தைகளை எழுப்பணும்! எல்லாருக்கும் பகல் சாப்பாட்டிலேயே தயிராக ஊற்று!" என்று நடராஜன் கூறியதனால் தான் விசாலம் கஷ்டப்பட்டு தன் தமிழ் வழக்கத்தைவிட்டாள். ஆம், இரவுப் பால் குடிக்கும் பழக்கம் தமிழ்நாட்டிற்குரிய தனிப்பழக்கம். உடல் நலத்திற்கின்றியமையானப் பழக்கம்.

பால் அருந்திய பின்னர் ரகுபதி படுக்கப்போய்விட்டான். துரைசாமி அய்யரும் வாயைக் கொப்பளித்துவிட்டு வாசலுக்குப் போய்விட்டார்.

"படுக்கையைப் போட்டுக் கொள்ளேன்!" என்று மாமியார் கூறியதும், "எங்கிருக்கம்மா?" என்று கேட்டு மென்று விழுங்கினாள் ராஜேசுவரி.

"அதோ, அந்தப் பக்கம்" என்று சொல்லிக் கொண்டே இடத்தைக் காட்டும் சாக்கிலே தன் படுக்கையை எடுத்துக் கொண்டாள் சாரதாம்பாள்.

புத்தம் புது ஜமுக்காளத்தில் சுற்றப்பட்டிருந்த தனது மெத்தையை உடனே எடுக்கக் கூச்சமாயிருக்கவே, ராஜேசுவரி, "நான் போடுகிறேனம்மா உங்கள் படுக்கையை!" என்று கை நீட்டினாள்.

"வேண்டாம், வேண்டாம். எனக்கு இந்த ஜமுக்காளத்தை விரித்துக் கொள்ள கஷ்டமா?" என்று கூறி, தர மறுத்தாள் சாரதாம்பாள், நடந்தாள்.

"ஏம்மா, ஜமுக்காளம் மட்டும் தானா? ஏன் அம்மா?" மாமியாரைத் தொடர்ந்தாள் அவள்.

"தரையிலேயே படுத்துக் கொண்டு எத்தனையோ நாள் தூங்கியிருக்கிறேனே!.... ஐயோ, பெண்ணே, உன் படுக்கையை எடுத்துப் போட்டுக் கொள்ளேன்!" என்று சிரித்துக் கொண்டே கூறி, நாட்டுப் பெண்ணைப் பார்த்தாள் சாரதாம்பாள்.

மாமியார் கூர்ந்து பார்த்துவிட்டதும், நாணம் சூழ்ந்து கொண்டது அவளுக்கு.

"ஏனம்மா, எங்கே படுப்பேள்? . . . ஓ, இந்தக் கட்டிலா? நாடா கட்டிலானாலும், ஜமுக்காளம் போதுமா? ஏம்மா, நான் இப்படி இங்கேயே போட்டுக்கட்டுமா? காற்று நன்னா வீசறது!" சாரதாம்பாள், கட்டிலில் ஜமுக்காளத்தை விரித்தவாறே, "சரித்தான் போ, சமத்து! மரியாதையாய் உள்ளே போய் தூங்கு!" என்று செல்லமாகக் கடிந்து கொண்டு படுத்தாள். ஒரு புறமாகச் சரிந்திருந்த துப்பட்டியை மாமியாரின் கட்டில் மேல் சரியாக வைத்துவிட்டு, ஒரு கணம் நின்று, பிறகு தன் மெத்தையை எடுக்க ராஜம் நகர்ந்தாள். மெத்தையுடன் அவ்வழி வந்தபோது, மாமியார் மறுபுறம் திருப்பிக் கொண்டு முகத்தைக் காட்டாமல் படுத்திருந்ததைக் கண்டு, நன்றியோடு அவ்விடத்தை விரைவில் கடந்து சென்றாள்.

உரிய இடத்தில் மெத்தையை விரித்தாள். விரித்துவிட்டுச் சிறிது நின்றாள். அவள் தயக்கம் அவள் கணவனுக்கும் விளங்கியது. "விளக்கை அணை," என்றான் மெல்ல. ஆனால் அங்கேயே நிற்கவோ, அல்லது உடனே படுக்கவோ அவளுக்கு தயக்கம் வளர்ந்தது. அறையை விட்டு வெளியே வந்து, மாமியார் படுத்திருந்த இடத்திற்குச் சமீபமாக நின்று, "படுத்துக்க போகட்டுமா அம்மா?" அம்மா?" என்று மெதுவாகக் கேட்டாள்.

"உம், உம், நாழியாச்சு" என்றாள் சாரதாம்பாள்.

ராஜேசுவரி நிம்மதியுடன் அறைக்கு மீண்டாள். மெதுவாக, ஓசைப்படாமல் கதவுத் தாளிடப்பட்டபோது துரைசாமியின் குரல் வெளியே கேட்டது. "உன் நாட்டுப் பெண் ஜமாய்க்கிறாளே? படுக்கை போட வருகிறாள் உனக்கு! படுத்துவிடாதேடியம்மா, நாட்டுப் பெண் வந்தாச்சே என்று! திடமாகச் சுற்றிக் கொண்டிரு!" என்று தம் மனையாளைக் கிண்டல் செய்வதை, இளந்தம்பதிகள் செவியுள்ளனர். "எத்தனை வயதானாலும், தம்பதிகளிடையே அன்பு மாறாது!" என்று உறுதி கூறுவது போல விளங்கியது அந்தக் குரல். அதை உணர்ந்த ரகுபதியும், ராஜேசுவரியும் புன்னகை பூத்தபடி பார்த்துக் கொண்டனர்.

அன்றிரவு ராஜேசுவரி ஆனந்தமாகத் துயின்றாள். தன் வாழ்வு நிறைவு பெற்றுவிட்டதாகவே எண்ணிப் பூரித்தாள். தன்னை அன்பு சூழ்ந்திருக்கிறது புக்ககத்திலே என்று மெய் சிலித்தாள். பல இன்ப நினைவுகளுடன் சுகமாகத் துஞ்சினாள்.

"காவிரி போல விளங்குவாய்!" என்று நடராஜன் புதல்விக்கு ஆசி கூறியது பொருத்தமாகத்தான் அமைந்துவிட்டது போலும்!

வைகாசியில் வறண்ட காற்று, ஆனியில் பருவக் காற்றாகிறது; பருவமழை பொழிகிறது; ஆடியில் காவிரி இரு கரையும் புரண்டோடுகிறது.

ராஜேசுவரியின் திருமணத்தின்போது நடந்த நலங்குச் சம்பவம் அவள் உள்ளத்தின் பருவக் கிளர்ச்சிகளை அதிகம் தீவிரமாக்கியிருந்தது. பருவமழை போலப் பொழிந்தது நல்லுணர்ச்சி!

உணர்ச்சிகளுக்கொத்த நினைப்புகள் தான் ராஜேசுவரியின் சிந்தனையில் எழும். சிந்தனைக்கேற்ற செயல் தான் அவள் செய்வது வழக்கம்.

அதனால் ராஜேசுவரி, அவள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே லட்சிய நாட்டுப் பெண்ணாகத் திகழலானாள். அத்தகைய பெருமை தனக்கு கிட்டிக் கொண்டிருப்பதற்கு காரணம், தன்னைச் சூழ்ந்திருப்பவர்களின் அன்பு தான் என்பது அவளுடைய அடக்கமான எண்ணம்.

மென்சொல்லைத் தவிர வேறு சொல் அவளுடைய நாவிலே வரவில்லை சிரிக்கும் அதரங்கள் தான் அவளுடைய முத்துப் பற்களை அணைத்தன. ஆனால் ராஜேசுவரி கண் கலங்காமலிருந்தாளா? இல்லை. சில சமயம் கண் கலங்கினாள். ஆனால் அவள் கண்களில் சுழன்ற நீர், கருவேப்பில்லையைக் காக்கும் நீர்ப்பவை போன்றது; கொத்தமல்லியை வீணாக்கும் நீர்த் தேக்கம் அல்ல.

ரகுபதி குறும்புக்காகவோ, சரசத்திற்காகவோ சில சமயம் ராஜேசுவரியை கலங்க வைப்பான். "உன் பெரியப்பாவின் பிள்ளை என்னோடு பேசணுமென்று முயற்சித்தான், நான் கவனிக்காதது போல வந்துவிட்டேன்," என்பான். "உன் அப்பா, தெலுங்கர்களை அப்படித் தாங்குகிறாரே, உன்னைத் தெலுங்கனுக்கே கொடுத்திருக்கலாமே?" என்று கேட்பான். ராஜேசுவரியின் கண்களிலே நீர் துளும்பிவிடும். ரகுபதிக்கு அவள் அழுகிறாளே என்ற வருத்தம் தான்.

கலியாணத்தின்போது அழுதாளே, இஷ்டமில்லாமல் தன்னை ஏற்றாளோ, என்ற ஐயம் வேறு! அவள் அழக்கூடாது, தன் கேள்விகளுக்குக் கலங்காமல் பதில் அளிக்க வேண்டும் என்பதுதான் அவன் விருப்பம்; அதற்காகவே தான் ரகுபதி அன்புக் கணவனாயிருந்துங் கூட சில சமயம் அவளை அத்தகைய கேள்விகள் கேட்டான்.

ஆனால் நாளடைவிலே ராஜேசுவரியின் அன்புத் தூய்மையை அவன் அறிந்து ஆறுதலுடன் கூடிய உ_வகையை எய்தினான். ராஜேசுவரி தன் தாயிடம் காட்டும் பக்தியையும் வீட்டு அலுவல்களிலே காட்டும் சலியா ஆர்வமும் அவனைக் கவர்ந்தன. குடும்பம், இல்லறம், என்று ராஜேசுவரிக்கு ஏற்பட்டுவிட்ட ஈடுபாட்டினைக் கண்ட பிறகும், அவன் அவளுடைய அன்பிலே அவநம்பிக்கை எப்படி கொள்ள முடியும்?

ராஜேசுவரியின் இங்கிதப் போக்கு ரகுபதியை மட்டுமல்லாமல், அவனுடைய பெற்றோரையும் வசீகரித்தது, மற்றோரையும் வசீகரித்தது. சாரதாம்பாள் சில காரியங்களை நாட்டுப் பெண்ணுக்கு விடாமல் பிடிவாதமாகத் தானே செய்வாள். ஆனால் ராஜேசுவரி கெஞ்சுவதைப் பார்க்கும் பொழுது, சாரதாம்பாள், உண்மை ஆர்வம் என்று தெரிந்து கொண்டு விடுவாள். "நல்ல பெண்ணடி, வேறே காரியம் இல்லை என்றால் போய்ப் புத்தகம்தான் வாசியேன்!" என்று சந்தோஷமாகக் கடிந்துக் கொள்வாள். ராஜேசுவரியும் சந்தோஷமாக ஏற்பாள், அந்தக் கோபமல்லாக் கோபத்தை! அது மட்டுமா? சமயங்களில் பவானியின் பால் நன்றி பெருகும். "அம்மா ஏவ மாட்டாள் வேலை. ரோசக்காரி. பிறர் செய்யாதபொழுது உதவி ஏற்பானேன் என்று நினைப்பாள். நீ தான் பார்த்துச் செய்யணும்!" என்று பவானி சொல்லியிருந்தது ராஜேசுவரி மறந்தவளல்லவே!

அதனால் ராஜேசுவரி மாமியாரை ஒண்டி நிற்பதையே அதிகம் விரும்பினாள். மாமியார் செய்யும் வேலைகளைக் கவனிப்பாள். சில சமயம் கேட்டுக் கேட்டுச் செய்வாள். சில வேலைகளை, மாமியாரின் மனம் உவக்கும் வகையில் முன்னதாகவே செய்து வைப்பாள். தன் உதவியை நாடாமலே மாமியார் பெரிய பீப்பாயையோ, டப்பாவையோ இறக்குவதைப் பார்த்தால், "அச்சச்சோ!" என்று ஓடிப்போய் கை கொடுத்து உதவி செய்து, "ஏம்மா, நான் வரமாட்டேனா?" என்று கேட்பாள். "நீ இல்லாவிட்டால் யாரைக் கூப்பிடுவேன்?" என்று சாரதாம்பாள் கேட்டால் ராஜேசுவரி, சிரித்துக் கொண்டே, "என்னம்மா, இப்படிக் கேட்கிறீர்கள்?" என்று தயங்காமல் கேட்பாள்.

சில சமயம் ராஜேசுவரி தயங்கிப் பேசுவாள். தயங்கி நிற்பாள். ஏனெனில் திடீரென்று சகஜ பாவம் குன்றி விடுவாள் சாரதாம்பாள்! விசாலத்திற்குத் தெரியவேண்டிய விஷயம் என்று ராஜேசுவரிக்குக் கூறுவது போல ஏதாவது சொல்வாள். அல்லது மாமியார் என்ற உரிமையையொட்டி பேசுவாள். அத்தகைய சந்தர்ப்பங்களிலே ராஜேசுவரி, 'நன்மைக்கே' என்ற மனச்சாந்தியுடன் ஏற்பாள். 'ஒரு வார்த்தை கூட பொறுக்கமாட்டாளாமே!" என்று பிறர் கூறும்படி கோழையாக இல்லாமல் தென்புடன் இருந்தாள். 'யாரையோ சொல்கிறதாக நினைப்பு. துளி லட்சியமும் யில்லை!" என்று யாரும் நினைத்துவிடாதபடி, சில சமயம் பதிலும் சொல்லுவாள். எலுமிச்சம் பழமும் புளிப்புத்தான், புளியும் புளிப்புத்தான்; எலுமிச்சையின் புளிப்பு உடல் நலத்திற்குகந்தது. புளியின் புளிப்பிற்கு ஏது அத்தகைய சிறப்பு? ராஜேசுவரியின் செயல்களும், சொற்களும், எலுமிச்சையைப் போல குணமும் மணமும் செறிந்து விளங்கின. மனமறிந்து நடந்து நடந்து கொள்வதிலே அவளுடைய திறமை புளியமரம் போல செழிப்புடன் துவங்கியது.

தலைவலி என்று நாள் முழுதும் படுத்துக் கொண்டிருந்தான் ரகுபதி. ராஜேசுவரிக்கு அவன் படுத்திருக்கும் பக்கம் போய் எட்டிப் பார்க்க தைரியமில்லை. "அவர்களுக்கு இல்லாத அக்கரையா? மாமியார்தான், அடிக்கடி தலைவலி வந்துவிடும் என்று சகஜமாகச் சொன்னாரே!" என்று இரவு வரை பொறுத்தாள். மிளகை அரைத்துக் காய்ச்சும்படி மாமியார் சொன்னதைச் செய்தாள். 'மிளகுப் பற்றுப் போட்டுவிடு!' என்று சொல்வது ரகுபதியின் வழக்கமாம். கையில் மிளகு விழுதுடன் மெல்ல மெல்ல ரகுபதியின் அறைக்குள் சென்றாள். தலையைச் சுற்றி கர்ச்சீப்பைக் கட்டிக் கொண்டிருந்த ரகுபதி, மனைவியைக் கண்டதும் லேசாகச் சிரித்தான். 'தடவு நெற்றியில்' என்று தலைக் குட்டையை அகற்றினான். ராஜேசுவரி தயங்கினாள். விழுதை அவள் எடுத்து வரும்பொழுது நடை வழியில் படுத்திருந்த மாமியார் தன்னையே உறுத்துப் பார்த்தது போல ஒரு பிரமை. "நேற்று வரை நான் போட்டேன் பற்று!" என்று மாமியார் நினைத்தாரோ?

"அம்மாவைப் போட்டுவிடச் சொல்லுங்கள். நான் போட்டால் கண்ணில் வழிய விட்டுவிடுவேனோ என்னமோ. எழுந்து வர முடியாதா?" என்று கேட்டாள் ராஜேசுவரி.

ரகுபதி எழுந்துவிட்டான். "அம்மா, நீ தடவு" என்று வந்து நடைவழியில் படுத்தான். "நன்னாயிருக்குடா.... உம், நல்ல பிள்ளை!" என்று புன்னகை கொழிக்கும் முகத்துடன் சாரதாம்பாள் புதல்வனுக்கு மிளகுப் பற்று போட்டக் காட்சியை ராஜேசுவரி ஆனந்தமாகப் பார்த்தாள். பெண்டாட்டி வந்ததும் அன்பு மாறாப் பிள்ளையாக ரகுபதி விளங்குகிறான் என்று சாரதாம்பாள் மகிழ்ந்தாள். மகத்தான தியாகம் செய்து விட்டது போன்று பூரித்தாள் ராஜேசுவரி.

இன்னொரு நாள் . . .

முகமெல்லாம் சிவந்து கணகணத்தது. தலைவலி என்று சொல்லத் தயங்கினாள். நாட்டுப் பெண்களின் சாகஸம், பாசாங்குத் தலைவலி என்று யாரோ சொன்ன நினைவு இருந்தது. மாலை நெருங்க நெருங்க நடை தள்ளாடியது. "என்ன, ஏன் அப்படிச் செய்கிறது உடம்பு?" என்று கேட்டார் மாமியார், பதறி. "கொஞ்சம், தலைவலி அம்மா!" என்றாள். ரகுபதி தெர்மாமீட்டர் கொணர்ந்தான். சுரம் கூட இருந்தது; ஆனால் அசதியினால் ஏற்பட்ட ஜுரமாதலால் ஒரே நாளில் பறந்தோடிவிட்டது. அந்த ஒரு நாள் கூட, 'படுத்துவிட்டேனே' என்று கவலைப்பட்ட ராஜேசுவரி, மறுநாள் ஓடி ஆடி ஈடு செய்து பணியாற்றிவிட்டாள்.

"நேற்று கண்ணில் நீர்; இன்று என்ன சிரிப்பு, பார்! குழந்தைதான்! உடம்பு கொஞ்சம் சரியானதுமே குழந்தைகள் படுக்கையில் நிக்காது!" என்று அடுத்தகத்து அம்மாள் கூறினாள்.

பிறந்தகத்துக்கு எழுதிய கடிதங்களிலேயெல்லாம் ராஜம் பெற்றோருக்கு, ஒளிவு மறைவின்றி தன் மனைநிலையை விளக்கினாள். அவற்றை கணவனுக்குப் படிக்கக் கொடுப்பாள். கடிதங்கள் எழுதுமுன் அனுமதி கேட்பது போலச் சொல்லிவிட்டு எழுதும்பொழுது கண்களில் கசியும் நீரைத் துடைத்துக் கொண்டே, பனி மலர் போல மாமியாரைப்பார்த்து முறுவல் மலர்த்துவாள். "அன்பு சூழ்ந்துள்ளது என்னை!" என்று தெரிவித்தாள். "எனக்கு உங்களைப் பிரிந்திருக்க சிரமமாயில்லை. ஆனால் உங்களுக்குகந்த சீமந்த புத்திரியான என்னைப் பிரிந்த துன்பம் அதிகமிருக்கும். அதை நினைக்கும்போது தான் நான் கண் கலங்கிவிடுகிறேன்," என்று அறிவித்தாள். "சாந்தமான மாமியார், நகைச் சுவையுடன் பேசும் மாமனார், ஆதரிசக் கணவர், இவர்கள் மத்தியிலே, நான் ஆனந்த ஜீவியாக விளங்குகிறேன்!" என்று ஒரு நாள் ராஜேசுவரி எழுதியதைப் படித்துவிட்டு ரகுபதி, "அம்மா, அம்மா, கேள்!" என்று அந்தப் பகுதியை உரக்க வாசித்தான்.

"அழகாக சொல்வதிலும் எழுதுவதிலும் எவ்வளவோ இருக்கிறது!" என்று சாரதாம்பாள் கூட பாராட்டி சந்தோஷப்பட்டாள்.

மற்றொரு கடிதத்தில் ராஜேசுவரி, "பாட்டும் படிப்பும் பெண்களுக்கு முக்கியமல்ல மனம் நிறைந்த வாழ்க்கை தான் வேண்டும் என்பதை நான் நன்கு உணர்கிறேன்," என்று எழுதியதைப் பார்த்து ரகுபதி, "மேலுக்கல்லவே!" என்று கேட்டுச் சிரித்தான்.

"பாருங்களேனம்மா, இப்படிக் கேட்கிறார். நான் எழுதியிருப்பதைப் பார்த்தால் மேலுக் கோசரம் சொல்கிற மாதிரி இருக்கா, பாருங்களேனம்மா!" என்று கடிதத்தை மாமியாரிடம் நீட்டினாள்.

"இருக்கட்டும் போ, அவன் கேட்பான் . . . " என்று சொல்லி புன்னகை பூத்த சாரதாம்பாள், கடிதத்தைப் படிக்க மறுத்துவிட்டாள்.

பெற்றோருக்கு எழுதிய கடிதங்களிலே, ராஜேசுவரி தான் புத்தகம் படிப்பதாகவும், பாட்டுப் பாடுவதாகவும் எழுதவில்லை என்றால் அதற்குக் காரணம் இருந்தது. "நான் வாசற்படி ஏறும்போதே வாருங்கள் பாட்டி என்று கூப்பிடுகிறாளே, அந்த அழகே போதுமே!" என்று பாட்டி கூட சொன்ன பிறகு, புத்தகம் பாட்டு, பிடில் என்று கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை என்று ராஜேசுவரி நினைத்துவிட்டாள். அதுமட்டுமல்ல, சாரதாம்பாள் எப்படி ராஜேசுவரியின் பாட்டு விஷயமாக அக்கறை காட்டவில்லையோ, அதுபோலவே ரகுபதியும் துரைசாமியுங் கூட இருந்தனர்.

ராஜேசுவரி வந்த புதிதில் சாரதாம்பாள் ஓரிரண்டு தடவைகள், "பாட்டுப் பாடிக்கொள், பிடில் வாசித்துக் கொள்," என்று சொன்னதுண்டு. ஆனால் ராஜேசுவரிக்குத் தயக்கம். "எங்கம்மா வேலை

செய்து கொண்டிருக்கும்போது நீ பாடிக் கொண்டிருந்தால் நன்றாயிருக்குமா?" என்று பவானி கேட்கவில்லையா?

மாமியாருக்கு வேலை இல்லாதபொழுது பாட்டுப் பாடலாம் என்று தான் நினைத்தாள் ராஜேசுவரி. ஆனால் அத்தகைய நேரம் கிடைப்பது தான் அரிதாயிருந்தது. சாரதாம்பாள் 'அப்பள மாமி' ஆயிற்றே?

மாமியாரின் அப்பளவேலையார்வம் எத்தகையது என்பதை கண் கூடாகக் கண்டு ராஜேசுவரி வியந்தாள். எத்தனையோ விஷயங்களில் மனக்குறை கொண்டு மனத்தாங்கலோடு விளங்கும் மாமியார், 'அப்பளம்' என்ற பேச்சு வந்ததும் முகத்தில் ஒரு தெம்புடன் மனம் விட்டுப் பேசத் தொடங்கிவிடுகிறார் என்பதைக் கண்டபோது அவள் மாமியாரிடம் அனுதாபங் கொண்டாள். "என்ன பொறுமை; என்ன சிரத்தை!" என்று பாராட்டினாள்.

பெண்ணுக்கு மட்டுமல்ல, சம்பந்திகளுக்கு மட்டுமல்ல; யார் யாருக்கோ அப்பளம் கொடுத்தனுப்புவார் சாரதாம்பாள். ஆசையாகக் கொடுத்தனுப்புவார், அலுத்துக் கொள்ள மாட்டார். "என்னமோ நமக்குக் கொஞ்சம் சிரமம், அவ்வளவுதான். அவர்கள் வாய்க்கு ருசியாகச் சாப்பிடுவார்கள்; நீ இடிக்கிறேன் என்று வருகிறாயே என்று விட்டுவிட்டேன். துணைக்கு ஒருவரையும் கூப்பிடாமல் நானே தான் பவானி கலியாணத்திற்கு வேண்டிய அப்பளம் இட்டேன்," என்று மாமியார் சொல்லும்போது, ராஜேசுவரிக்கு, வெயிலும் உறைக்காது, கையும் வலிக்காது.

"ஏம்மா, என் கலியாணத்தின்போதும் தந்தீர்களே, தனியாகவா இடித்து இட்டுத் தந்தீர்கள்?"

"இல்லை, அப்பொழுது அமாவாசை இருந்தான், இடித்துக் கொடுத்தான். அவனுக்கு நான் ஒரு குடை வாங்கித் தந்தேன். சளைக்காமல் இடித்துத் தந்தானே, பாவம்!"

ராஜேசுவரிக்கு ஆச்சரியமாக இருக்கும். அப்பள மாவு இடிக்கிற வேலை, அப்பள வேலையில் ஒரு சிறு பகுதி தான். மீதியெல்லாம், மாமியாரே செய்துகொண்டு, அதைப்பற்றி கவலைப்படவேயில்லையே? "அங்கே அம்மா, நூறு அப்பளம் இடப் பயப்படுவாள்," என்று மனம் திறந்து வாய்விட்டுச் சொல்வாள் ராஜேசுவரி.

பிறந்தகத்தைப் பற்றி பேசும்போது, ராஜம் 'அங்கே' என்று சொல்லுவாள். சில சமயம் ஊர் பேரைச் சேர்ப்பாள். ஆனால் 'எங்காத்திலே', 'எங்கூரிலே' என்று சொல்லமாட்டாள். அதுவும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளமாட்டாள். குழந்தைகளைப் பற்றிச் சொல்லும் பொழுதுதான் அன்பும் ஆசையும் பொங்க ஏதாவது சொல்லுவாள்.

"அம்மா, கேளுங்கள் வேடிக்கையை! அப்பாவிற்கும், இவருக்கும் டிபனை ஹாலிலேயே கொண்டு போய்க் கொடுத்து கொண்டிருந்தேன். உள்ளேயே சாப்பிட்டுக் கொண்டிருந்தான் மணி. திடீரென்று கையிலிருந்த தட்டை 'பிடி' என்றான். பிடித்துக் கொண்டேன். சிரித்துக் கொண்டே, "எனக்கும் வாசலுக்கே கொண்டுவா, ஸ்பூன் போட்டுக் கொண்டு வா!" என்று சொல்லிவிட்டு ஓடியே போய்விட்டான். அவனும், அப்பா, அத்திம்பேர் மாதிரி பிளேட்டும் ஸ்பூனுமாய் ஹாலிலேயே சாப்பிடணுமாம்! 'இங்கேயே இருங்கோடான்னு' சொல்லிக் கொண்டிருந்தேன், ஏமாற்றிவிட்டான்!" என்று சந்தோஷமாகச் சொல்லுவாள்.

"அந்த எச்சில் தட்டைப் பிடித்த கையாலேயே எனக்கும் கொண்டு வந்தாயாக்கும்!" என்று சிரித்துக் கொண்டே கேட்பான் ரகுபதி.

"ஐயையோ, அப்படிச் செய்வாளாம்மா!" என்று மாமியாரைத் துணை நாடுவாள் ராஜேசுவரி.

"மணியும் கெணியும் போட்டி போட்டார்கள் அம்மா. ரசம் சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் கெணி. மோர் சாதம் சாப்பிட ஆரம்பிக்கிறான் மணி. 'யார் முதலில் சாப்பிட்டுவிடுகிறார்களோ, பந்தயம் என்று மணி சொன்னான், தனக்குத் தான் ஜயம் என்று. 'சரி' என்று சொன்னான் _கெணி. ரசம் சாதம் சாப்பிட்டுவிட்டு, 'போதும்' என்று எழுந்து ஓடியேவிட்டான்! மணி விழிக்கிறான்!" என்று உவகையுடன், ராஜேசுவரி சொல்வாளே தவிர, 'இப்படிப்பட்ட குழந்தைகளை அவர் பாராட்டவில்லையே!" என்று வருத்தப்படுகிறவளாக விளங்கவில்லை.

மனைவியின் அன்பிற்குகந்த குழந்தைகள் என்று ரகுபதி தோன்றினால் போதும், பழிக்க

மாட்டாள் என்று நம்பினாள். சில சமயம் ரகுபதி அந்த நம்பிக்கையை நிறைவேற்றாமல் இல்லை!

தன் தம்பி தங்கைகளைப் பற்றி மட்டும் ராஜேசுவரி பீற்றிக் கொள்ளவில்லை. ஏழைக் குழந்தையையும் பாராட்டினாள். செல்வக் குழந்தையையும் மெச்சினாள். வேலைக்காரியின் பையன் தெருவிலிருக்கும் மற்ற சிறுவர்களோடு கிராமபோன் கேட்க வந்ததையும் அவன் பெஞ்சு மேல் உட்காராமல் தரையில் உட்காரப் போனதையும், பெஞ்சு மேல் உட்காரும்படி சொல்லியும் அவன் மறுத்ததையும் சொல்லும்போது அவள் குரலில் கம்மல் இருக்கும். "அதுபோல தான் எனக்கும் இங்கே வாசல் ஹாலிலிருக்கும், ரேடியோவினருகு போகக் கூட இப்பொழுது கூசுகிறது!" என்று அவள் அந்தரங்கம் சொல்லாதா?

"ஆறு வயசுப் பையன் அம்மா, பள்ளிக்கூடத்தில் சேர்க்கணும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். செகண்ட் கிளாசில் சேர்க்கப்போகிறீர்களா, தேர்டு கிளாசில் சேர்க்கப் போகிறீர்களா என்று அந்தப் பையனின் அப்பாவைக் கேட்டார். பக்கத்திலேயே இருந்த பையன், "தேர்டு கிளாஸ் கூட்டமாயிருக்கும் அப்பா, செகண்டு கிளாசிலேயே படிக்கிறேன்!" என்று சொன்னானாம். அவர்கள் அடிக்கடி செகண்டு கிளாசில் தான் ரயிலில் பிராயணம் செய்வார்களாம் அம்மா, அதனால் இப்படிச் சொல்லியிருக்கிறான் என்று அவள் பல குழந்தைகளன் பெருமையை எடுத்துப் பேசும் போது யார் குற்றம் கூற முடியும்?

## 18

ராஜேசுவரி, 'மனம் நிறைந்த வாழ்க்கை தான் பெண்ணுக்குப் தேவை', என்று சந்தோஷமுடன் எழுதிவிட்டாள்.

ஆனால் நடராஜன் பலநாள் பொறுத்துப் பார்த்தபின், தம் கடமையை செய்துவிட்டார். "உன் பாட்டு வாத்தியார் அடிக்கடி வந்து கேட்டுவிட்டுப் போகிறார். நீயோ ஒரு கடிதத்தில் கூட பாட்டு பாடுகிறதாகவோ, பிடில் வாசிப்பதாகவோ, எழுதவில்லை. பாடாமல் இருந்தால் தான் எழுதுவாய், பிடிலை வாசிக்காமல் இருக்க மாட்டாய் என்று நான் அவரிடம் சொல்லியும் கூட அவர் உன்னிடமிருந்து வரும் உறுதி மொழி கேட்கிறார். உன் பதில் என்ன?" என்று கேட்டுவிட்டார் அவர்.

துரைசாமி அய்யர், "இப்படிக் கேட்கும்படி வைத்துக் கொண்டுவிட்டாயேம்மா! வாசித்தாயா பிடில்? என்று கேட்டார்.

ராஜேசுவரி சிரித்து மழுப்பவே, சாரதாம்பாள் தான் துரைசாமிக்குப் பதிலளித்தார். "இரண்டு நான் சொன்னேன், அவள் கேட்கவில்லை. அப்புறம் நானும் சொல்கிறதில்லை. கலியாணத்தின்போதே பாட்டுப் பாடச் சொன்னதற்கு தானே அழுதாளாம்!" என்று மாமியார் சொன்னதைக் கவனித்ததும் ராஜேசுவரி திடுக்குற்றாள்.

"அந்த ராஜேசுவரி அல்ல, அம்மா, நான்! அந்த சம்பவத்திற்குப் பின் மாறிவிட்டேன். வந்த புதிதில் கூசினேன், இனிக் கூசமாட்டேன். நீங்கள் மீண்டும் தூண்டும் பட்சத்தில் பாடுவேன்," என்று பற்பற கூற விரும்பினாள் ராஜேசுவரி.

அவளைப் பார்த்துவிட்டு போக பலர் வந்தார்கள். நாட்டுப்பெண்ணின் தன்மைகளைச் சிறப்பாகப் படைத்தவள் என்று மெச்சிக்கொண்டு போனார்கள். ஆனால் யாரும் அவளைப் பாட்டுப் பாடச் சொல்லவில்லை.

பெற்றோருக்கு மறுமொழி எழுதவேண்டுமே! ஒருநாள், "அம்மா, பிடில் வாசிக்கட்டுமாம்மா?" என்று கேட்டாள் ராஜேசுவரி. "உம், பேஷாய் வாசி" என்று விடையளித்தாரள் சாரதாம்பாள்.

அன்று ஆனந்தமாக பிடில் வாசித்தாள் அவள். வாசித்து முடித்தபின் புது உற்சாகமுடன் வீட்டு அலுவல்களிலே ஆழ்ந்தாள். 'இனி அசட்டு பயங்களுக்கு இடமில்லை என்று அதற்கடுத்த நாளும், அதற்கடுத்த நாளும், அதற்கடுத்த நாளும் வாசித்தாள். மாமியாரின் விருப்பத்தைக் கேட்டு வாசித்தாள் சில பாட்டுக்கள். சில அசந்தர்ப்பங்களால் தடைபட்டது வாசிப்பு. ஒரு வாரங் கழித்து மீண்டும் வாசித்தாள். ஒரு நாள் உறுதி ஏற்பட்டது. 'இனி ஒரு தடங்கலும் தயக்கமும் இல்லை. பாடுபட்டுக் கற்ற வித்தையை பாழாக்க வேண்டியதில்லை!" என்று சந்தோஷப்பட்டாள் ராஜேசுவரி.

அப்படிச் சந்தோஷப்பட்ட வேளை நல்ல வேளையாயிருக்கவில்லை.

பவானியின் கணவருக்கு நாகப்பூருக்கு மாற்றலாகிவிட்டது. மாற்றலான இடத்தில் குடியிருக்க வீடு கிடைத்தபின் தான் குடித்தனம் போடவேண்டும் என்று பவானியை பிறந்தகத்தில் விட்டு வைக்க சத்யமூர்த்தி அவளை அழைத்து வந்தார்.

பவானியின் வருகையைப் பற்றி செய்தி வந்தபோது, ராஜேசுவரிக்கு ஏற்பட்ட பரபரப்புத்தான் அதிகமாயிருந்தது!

"நான் பிறந்தகம் போனால் இன்னும் சிறப்பான வரவேற்பு கிடைக்கும்; இவர்கள் ஏன் பவானியின் வருகையைப் பற்றி அதிகம் ஆவல் காட்டவில்லை?" என்று தோன்றிற்று அவளுக்கு. அதனால் பவானியை வரவேற்றபோது, ராஜேசுவரிக்குக் குரல் எடுப்பாகவே ஒலித்தது. "வாங்கோ அக்கா, தாங்கோ அக்கா சித்ருவை!" என்று அழைத்து வரவேற்றாள். "ஐயோ, ரேடியோ கிட்ட 'சேர்' இருக்கே, உட்காரக் கூடாதோ?" என்று சத்யமூர்த்தியை உபசரித்தாள். மற்றவர்கள் காட்டிய நிதானமான வரவேற்புக்கு ஒரு சோபையைச் சேர்த்தாள்.

அன்று மாலை சத்யமூர்த்தி, "நாத்தியும், மதனியும் எடுங்கள் வீணையையும், பிடிலையும்!" என்று கூறவே, ராஜேசுவரி, முதலில் வீணையையும் பிறகு பிடிலையும் கொண்டு வந்து வைத்துவிட்டாள். குளிக்க நீர், ஒய்வெடுத்து உறங்கப் பாய், ஆகியவற்றின் தேவையறிந்து முந்திக் கொண்ட ராஜேசுவரி, இதற்கு மட்டும் பின் வாங்குவாளா? பவானி வந்துவிட்டதனால் சில தமிழ்க் கீர்த்தனைகளைக் கற்க வேண்டும் என்று கூட திட்டமிட்டுவிட்டாளே அவள்?

பவானியும் ராஜேசுவரியும் 'ஆபோகி' வர்ணம் வாசித்தார்கள். பவானிக்கு சிக்ஷையும் அதிகமில்லை, பயிற்சியும் அதிகமில்லை. ஆனால் ராஜேசுவரிக்கு ஐந்து வருஷக் கைப்பழக்கம் உண்டு. தடைபட்ட பயிற்சியினால் கைலாவகம் போகவில்லை.

வர்ணம் வாசித்த பிறகு பவானி தன் தாயைப் பார்த்தாள். "மன்னி தினம் வாசிக்கிறாளாக்கும்!" என்று கேட்டாள்.

"உம், வாசிக்கிறாள், முன் மாதிரி அழக்காணோம்!" என்று சுருக்கமாக விடை அளித்தார் சாரதாம்பாள்.

"தேவலை மன்னி, கெட்டிக்காரியாயிட்டாள். எனக்கு அங்கே வீணையை எடுக்கவே முடியறதில்லை. ஏதோ வேலை, எப்படியோ பொழுது சரியாகிவிடுகிறது. மூன்று பேர் தான் என்றாலும், வற்றக் குழம்பு போதும் என்று இருக்க முடிகிறதா? நாலு தினுசில் பண்ண ஒவ்வொரு வேலையும் பார்த்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. கொஞ்சமாகச் சமைக்க, குமுட்டி சின்னதாயிருக்கிறது. நிறைய சமைக்க, குமுட்டி பெரிசாயிருக்கிறது. ஆகக் கூடி சமையல் நேரமெல்லாம் ஒன்றே தான்!" என்று பவானி சொல்லிக் கொண்டிருக்கையில் ராஜேசுவரியின் நினைப்பு அன்னையை நாடி ஓடியது.

'ஐயோ, அம்மா. நீ எத்தனை திண்டாடினாயோ? நான் ஒரு ஒத்தாசை செய்தேனா, இல்லையே, பாவி நான்! மூத்த பெண் நான் பல உதவிகள் செய்து காரியம் பழகியிருப்பதாக மாமியார் கருதுகிறார், நான் அங்கு மீண்டும் வரும்பொழுதாவது, மூத்தப் பெண்ணாய் லட்சணமாய் இருப்பேன்!' என்று விசாலத்திற்கு மானசீகச் செய்தி அனுப்பினாள்.

பவானியின் கைப்பிடியிலிருந்த வீணையைப் பார்த்துக் கொண்டே சத்யம் சிரித்தார். "வீணையை வைத்துக் கொண்டு குடும்பப் பாட்டுப் பாடுகிறாள் உங்கள் பெண்!" என்று மாமியாரிடம் சொல்லிவிட்டு, ரகுபதியைப் பார்த்து சிரித்தார்.

ரகுபதி ராஜேசுவரியைப் பார்த்தான்!

பவானி வீணையை எட்ட வைத்துவிட்டு எழுந்தாள். "நாளைக்கே போகணும் என்று சொல்கிறீர்களே, பாட்டுக்கு உட்கார்ந்தால் முடியுமா? கோயிலுக்குப் போய் வருவோம், வெள்ளிக்கிழமையாயிருக்கு!" என்று பவானி புறப்பட்டாள். மறுபேச்சினிற்றி சத்யமூர்த்தியும் கிளம்பினார்.

ரகுபதி சிரித்தான். "நான் கூப்பிட்டேன் வெளியே போவோம் என்று! ரயிலில் வந்த அலுப்பு

என்றீரே ஐயா?" என்று கேட்டான்.

"கோயிலுக்கு என்று கூப்பிடுகிறாள் பெண்டாட்டி! நீர் உம்ம சிநேகிதனைப் பார்க்கக் கூப்பிட்டால் நான் வருவேனா, ஐயா!" என்றார் சத்யம்!

“உங்களுக்காக நானும் சிநேகிதனைப் பார்க்கப் போகாமல் இருந்து விட்டேனே! சரி, போகிறேன் நான்!" என்று ரகுபதி சிரித்துக் கொண்டே போய்விட்ட பிறகு பவானி, "இவருக்காகப் பேச்சுத் துணைக்கு என்று அண்ணா இருந்ததேயில்லை முன்பு! இப்பொழுதெல்லாம் அண்ணாவுக்கு வீடும் சமையலறையும் ரொம்பப் பிடிச்சுப் போச்சு" என்று சிரித்தாள்.

"இப்படிச் சொல்லுகிறாரே அக்கா? தினமும் சாயங்காலம் ஐந்து மணிக்கெல்லாம் போய் இவர் ஏழரை மணிக்கு வருகிறாரே என்று நான் வருத்தப்படுகிறேனே," என்று ராஜேசுவரி நினைத்தாள். சாயங்காலம் தான் முகம் அலம்பிக் கொண்டு சற்று பளிச்சென்று இருக்க முடிகிறது என்னும் வருத்தம் அவளுக்கு ரொம்ப நாளாகவே உண்டாகியிருந்ததல்லவா?

பவானியின் கணவர் சத்யமூர்த்தி இரண்டு நாள் தான் தங்கினார். புறப்பட்டுவிட்டார். புறப்படும்பொழுது, "மாமியாரே, உங்கள் கோழி முட்டை டிரேட் மார்க்கு அப்பளங்களைக் கொடுங்கள்! அங்கே தினமும் டிபனுக்கு நாலு சுட்டுத் தள்ளுகிறேன்! என்று கேட்டார்.

"எடுத்து வைத்துவிட்டேன் நாலு கட்டு. உங்களுக்கு இரண்டு கட்டு, உங்கள் அம்மாவுக்கு இரண்டு கட்டு," என்று சாரதாம்பாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பவானி வந்தாள். "ஏன் எங்கம்மா, கோழி முட்டை மாதிரி இடுகிறாளா? வட்டமாயில்லையோ?" என்று கேட்டாள் கணவனை.

"கோழி முட்டை என்றால் சைபர் என்ற அர்த்தத்தில் நான் சொன்னேன்டியம்மா! 'டிரேட் மார்க்கு இல்லாத உயர்ந்த சரக்கு!' என்று நான் சொன்னால் உங்கள் பெண் இப்படிக் கேட்கிறாளே, மாமியாரே!" என்று சிரித்தார் சத்யமூர்த்தி.

"அம்மாவின் அப்பளத்தைக் குறைச் சொல்கிறீர்களோ என்று ரோசம் வந்துவிட்டது, அவளுக்கு! அவசரக்காரி!" என்று சாரதாம்பாள் முறுவலித்தாள் தம்பதிகளின் தர்க்கம் கண்டு.

ராஜேசுவரியும் தான் கவனித்துக் கொண்டிருந்தாள். ஆகா, கணவன், மனைவி வாழ்க்கையிலே தான் எத்தனை இன்பங்கள் புதைந்து கிடக்கின்றன! வாழ்நாள் முழுதும் இருக்கிறது. மெல்ல மெல்ல படிப்படியாக அனுபவிக்கலாம். இந்த புது மணவாழ்வுடன் இல்லற இன்பம் அடங்கிவிடாது. பவானியைப் போல கணவனுடன் சலுகையாகப் பழகிப் பேசி களிக்கும் பேறு உண்டு; புத்தகங்களிலே படிக்கும் ரசமான கட்டங்கள் வாழ்விலும் உண்டல்லவா?

சத்யமூர்த்தி புறப்பட்டுச் சென்ற பின் பவானி, உற்சாகம் குன்றினவளாய்த் தென்பட்டதைக் கண்டு ராஜேசுவரிக்கு பவானியின் பால் அனுதாபமும் அன்பும் பெருகியது. "ஏன் அக்கா, சங்கீதம் சோர்வுக்கு மருந்து என்பார்களே, வாருங்கள் உட்காரலாம். ஏனம்மா, இராத்திரிச் சமையற்காரியம் ஒன்றும் இல்லையே! உட்காருகிறோம் அம்மா!" என்று சலுகையுடன் கூறிவிட்டு பாயை விரித்தாள் ராஜேசுவரி.

புன்சிரிப்புடனே பவானி உட்கார்ந்தாள். சுருதி கூட்டினாள் ராஜேசுவரி. பவானியைச் சிலப் பாட்டுக்கள் பாடச் சொன்னாள். பவானி அவற்றைப் பாடி முடித்த பின், "போதும், எடுத்து வை!" என்றாள்.

ராஜேசுவரிக்கு ஏமாற்றம், "நீ பாடு" என்று பவானி சொல்லவில்லையென்று. 'அழுதுவிடுவேன்' என்று அச்சமா என்று தோன்றியது. அதற்காக ராஜேசுவரி, "இப்பப்ப தான் எனக்கு பாட்டு மேல் ஆசை, அக்கா! முந்தி ஒரு கீர்த்தனையை இரண்டு மாசம் இழுக்கடிச்சுத்தான் கற்றுக் கொள்வேன். இப்பொழுது சிரத்தையாய்க் கவனிக்கத் தோன்றுகிறது! கல்கத்தாவில் நீங்கள் இரண்டு தடவைப் பாடினதை கவனித்தேன். 'மாமவஸதா' பல்லவி வந்துவிட்டது! அனுபல்லவியும் சரணமும் நாலு நாளில் வராதா அக்கா! கற்று தருகிறீர்களா?" என்று கேட்டாள்.

முகத்தை அசுவாரஸ்யமாக வைத்துக் கொண்டு, "ஆகட்டும், இப்பொழுது வேண்டாம். நீ 'எந்த நேர்ச்சினா' அனுபல்லவியைப் பாடு; சாவேரி ராகம் எனக்குப் பிடிக்கும்; இந்தப் பக்கங்களிலே நான் அந்தப் பாட்டுக் கேட்டதில்லை!" என்று பவானி கேட்டபோது ராஜேசுவரி

சந்தோஷப்பட்டாள்.

"தியாகராஜர் பாட்டுக்கள் எத்தனை எத்தனையோ?" என்று கூறிவிட்டு, ராஜேசுவரி சுருதியைப் போட்டாள். "சுருதி வேண்டாம், அப்படியே அனுபல்லவியை மட்டும் பாடிக் காட்டு போதும்!" என்று பவானி கூறவே ராஜேசுவரியின் மகிழ்ச்சி மறைந்தது. அரைகுறையாகப் பாடக்கூடாது, வாக்கேயகாரர்களுக்கு அபசாரம் செய்வது போலாகும் என்று சர்மா வாத்தியார் அவளுக்குப் போதித்திருந்தார்.

"அக்கா, அனுபல்லவியில் ஆரம்பிப்பானேன்! அப்படிப் பாடலாமா?"

"ஏன், 'பாலகனகமய' என்று ஆரம்பித்து பெரிய பெரிய வித்வான்கள் பாடுகிறதில்லையா? 'ஏல நீதயராது' எப்படிப்பட்ட கீர்த்தனை? தியாகராஜரின் முதல் சிருஷ்டி அது!"

"ஓகோ," என்று குளிர்ந்தது ராஜேசுவரியின் உள்ளம். ஆனால் பல்லவி பாடாமல் அனுபல்லவி நினைவுக்கு வரவில்லை.

பல்லவியை மெல்ல வாய்க்குள் பாடிப்பார்த்துக் கொண்டே பிறகு, அனுபல்லவியைப் பாடினாள் ராஜேசுவரி. பவானி நிறுத்தச் சொன்ன இடங்களில் நிறுத்தி, திரும்ப பாடச் சொன்ன இடங்களிலே பாடிக் காட்டினாள்.

"சரணம் ஒரு தடவை பாடு!" என்று பவானி சொல்லவே, 'அரைகுறையாகப் பாடாமல் தப்பினேன்!" என்று ராஜேசுவரி சந்தோஷமுடன் பாடினாள்.

கீர்த்தனையின் இறுதி முத்திரை, 'வரத வெங்கடேச்வர' என்று இருக்கவே, பவானி, "தியாகராஜர் கிருதி என்றாயே, யார் செய்த பாட்டு என்ற நினைவு வேண்டாமா? உனக்குச் சங்கீதத்திலே பக்தி போதாதுதான்! சினிமாப் பாட்டுப் பாடத்தான் நீ சரி," என்று விமரிசனம் செய்து ராஜேசுவரியை ஓய வைத்தாள்!

இசைத்தட்டைப் போல தன்னை உபயோகித்துக் கொண்ட பவானி, இவ்வாறு கூறியதும் ராஜேசுவரிக்கு கண் கலங்கிவிடும் போல கனன்றது முகம். ஆனால் நல்ல வேளை பவானி, அடுத்தகத்துக்குப் போகலாம், சித்ராவை எடுத்துக்கொள்!" என்று அழைத்துவிட்டாள். ராஜேசுவரி சந்தோஷமுடன் கிளம்பினாள். வாரங்கள் பல ஆகியிருந்தன, அவள் வீதி வாசற்படி தாண்டி!

## 19

இளம் வித்வான் ஒருவர் அந்த வட்டாரத்திலே சிலருக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறார் என்ற செய்தி பவானிக்கு எட்டியது. அவள் பாட்டு கற்க விரும்பினாள்; ஏற்பாடு நடந்தது.

முதல் நாள் வித்வான் வந்தபோது ராஜேசுவரி எத்தனையோ ஆவலாய் இருந்தாள். தனக்கும் கற்றுக் கொள்ள இஷ்டமா என்று கேட்பார்கள் என்று எதிர்பார்த்தாள்.

இளம் வித்வான், ஜம்மென்று சுருதியும் குரல் நயமும் இழைய ஓரிரண்டு பாட்டுக்களைப் பாடியபோது, ரகுபதியும் துரைசாமியுங்கூட அருகே அமர்ந்து கேட்டார்கள். பிறகு பவானி ஓரிரண்டு பாட்டுக்கள் பாடினாள். பிறகு புதுப்பயிற்சி துவங்கியது. புதுக்கீர்த்தனம், அம்பிகை துதி. சம்ஸ்கிருத சொற்களால் அமைந்த அழகிய கீர்த்தனம்; ராஜேசுவரி மெய் சிலிர்த்தாள். உள்ளம் உருகியது.

பாட்டினைக் கவனித்தபடியே, பாத்திரங்களை அலம்பி சமையலறைக்கு கொண்டு வந்து கொண்டிருந்த ராஜேசுவரியின் முக பாவம், சாரதாம்பாளை என்ன செய்ததோ?

"நீயும் கற்றுக் கொண்டு விடலாம், கொஞ்சம் கவனித்தாயானால் பிடிபட்டுவிடும். வாத்தியாருக்கு இரண்டு பங்குச் சம்பளம் அனாவசியமாகக் கொடுக்க வேண்டாம் பார், அதற்காகத்தான்," என்று கூறினாள். நெஞ்சு அடைத்தாலும், "ஆமாம்மா, எதற்கு அனாவசியமா," என்று சொல்லி ராஜம் சமாளித்துக் கொண்டாள். விழிக்கடையில் ஒரே ஒரு நீர்த்துளி எட்டிப் பார்த்தது. ஜிவுஜிவு என்று உஷ்ணமேறிய முகத்திலே எத்தனை நேரம் தங்க முடியும் ஒரு துளி நீர்? மறுகணம் மறைந்துவிட்டது நீர் முத்து.

ஆனால் ராஜேசுவரி மாமியாரின் நினைப்பை உண்மையாக்கிக் கொண்டாள். பவானி

வாத்தியாரிடம் பாடிக்காட்டிப் பழகும் பொழுதும், வீட்டிலே பாடிப் பழகும் பொழுதும், ராஜேசுவரியின் செவிகளும், மனமும், நாவும் அவற்றை கிரகிக்கும். அவள் மனதிலே பாட்டு பதிந்துவிடும். வாய் திறந்து பாடவில்லை எனினும் தனக்கு கீர்த்தனை பாடமாகிவிட்டது என்பதை அவள் அறிந்து கொண்டாள். "எப்படி இத்தனை எளிதில் பதிகிறது!" என்று அவளே பிரமித்தாள். சோர்வுறாமல், ஏகலவ்யனைப் போல ஆர்வத்தை நிறைவேற்றிக் கொண்டு வந்தாள்.

ஒரு பெண்ணுக்கு, புக்ககத்து உறவு எப்படி ஏற்படுகிறது? கைப்பிடித்த கணவனால் ஏற்படுகிறது. அவள் அந்தப் புக்ககத்திலே நுழையும்போது, கணவனையே கொழுக்கொம்பாகக் கொண்டு, அவனுடைய அன்பினால் தழைக்கிறாள்.

அந்தக் கணவனின் நிலையையும் நன்கு உணருகிறாள். பெற்றவர்களின் பாசம், உடன் பிறந்தவர்களின் அன்பு, கைப்பற்றியவனின் காதல் ஆகியவற்றையெல்லாம் ஒருங்கே பகிர்ந்து கொண்டு எல்லோருக்கும் அவள் உரியவள் என்ற உரிமையை நிலை நாட்ட விரும்பும் கணவனுக்கு அனுசரணையாக மனைவி விளங்கவேண்டும்; கணவனின் பெற்றோரைப் போற்றி, கணவனின் உடன் பிறந்தவர்களின் அபிமானத்தை வளர்த்து, தன் அன்பையும் தளும்பாத நிறை குடமாக்கிவிட வேண்டியவள் பெண். "எல்லோருக்கும் என் அன்புக்குரியவர்கள், என்பால் அன்புள்ளவர்கள். எல்லோருக்கும் இதமாகஇருக்க வேண்டும் என் உறவு. இந்த வீட்டிற்குரியவள் நான்," என்று அவள் கருத வேண்டும். இதை ராஜேசுவரிக்கு உள்ளுணர்வு தெளிவாக அவளுக்குக் கூறியிருந்தது.

ராஜேசுவரி கணவனுக்குச் செய்யாத பல சிசுருஷைகளைத் தன் மாமியாருக்கும் நாத்தனாருக்கும் செய்தாள். கணவனுக்குக் குளிக்கத் தூண்டும் சோப்பும் கொண்டு போய் வைக்க அவள் கூசினாள். ஆனால், மாமியாருக்கு மஞ்சள் பொடியும், சீயக்காயத் தூளும் எடுத்து வைப்பாள்.

ஒருநாள், பவானி குளிக்கப் போகும்பொழுது, "ஜலம் தயாரா? சரி, அதோ அதெயெல்லாம் போட்டு வை!" என்று தேவையான ஆடைகளைக் குறிப்பிட்டுவிட்டுப் போனாள். 'சொல்லாமலே செய்வர் பெரியவர்' என்று ராஜேசுவரி, குளிநீர் வைத்ததுமே, 'எந்த புடவை எந்த ரவிக்கை?' என்று கேட்டு எடுத்துத் தயாராக வைத்துவிட்டாள். ஒரு நாள் மாமனார், "புடவையை அவள் எடுத்துக் கொள்ளமாட்டாளா, நீ ஏன் எடுத்து வைக்கிறாய்?" என்று ராஜேசுவரியைக் கேட்டதற்கு ராஜேசுவரி சிரித்து மழுப்பினாள். பவானி சொன்னாள், "வேண்டாம் என்றால் மன்னி கேட்கிறாளா?" என்று! தனக்கு இல்லாத பெருமையை பவானி அளித்துவிட்டதாகப் பூரித்தாள் ராஜேசுவரி.

புடவைகளை உலர்த்தும்போது, முதலில் பவானியின் உடைகளைத்தான் உலர்த்துவாள். ஒரு நாள், புதுப் புடவை சாயம் இறங்கிவிடும் என்று தன்னுடையதை முதலில் உலர்த்த எடுத்தாள் ராஜேசுவரி. பவானி ஓடிவந்தாள், தன் புடவையை எடுத்து உலர்த்தத் தொடங்கினாள்.

"நான் உலர்த்துகிறேன் அக்கா!"

"நீ உலர்த்துவாய் என்று தான் இருந்தேன். தினமும் உன்னுடையதைக் கடைசியில் உலர்த்துவாய், இன்றும் உலர்த்துகிறது கடைசியாக்கும் என்று வந்தேன். ஆச்சு, நான் வந்து ஒரு வாரமாகிவிட்டதே, இன்னும் என்ன மரியாதை எனக்கு!" என்றாள் பவானி அறைகுறையாகச் சிரித்து.

"என்னக்கா, நீங்கள் இப்படிச் சொல்லலாமா? என் புடவை சாயம் இறங்குகிறது கரை! பாருங்கள்! அதற்காக முதலில் உலர்த்துகிறேன்!"

"நாலு நாள் முந்தி சாயம் கரையில் இறங்குகிற என் புடவையை நீ முதலில் உலர்த்தினாயா? அம்மாவுடையதையும் என்னுடையதை இன்னொன்றையும் உலர்த்தினப் புறம், நான் வந்து சொன்னப்புறம்தானே உலர்த்தினாய்? ராஜேசுவரி கலங்காமல், சிரித்து, "அன்றைக்கு நீங்கள் சொன்னதனால் தான், இந்தக் கருப்புக் கரை கலங்குகிறது என்று தெரிந்தது அக்கா? கிட்டத்தட்ட ஒரே மாதிரிப் புடவைதானே!" என்றாள்.

பவானி இடம்விட்டு நகரமாட்டாள். சித்ரா சற்று எட்டப் போய் எதையாவது உருட்டவோ, உருளவோ முயன்றால், 'ஐயையோ, எடு குழந்தையை! விழப்போகிறது பெட்டி! தடுக்கிவிழப்

போகிறாள், தூக்கு!" என்று கூறி அலறுவாள், ஆனால் எழவே மாட்டாள். அவள் கையிலே கம்பளி நூல் உருவாகிக் கொண்டிருக்கும். அது மட்டுமா?

ஒருநாள் புழக்கடைக் கதவைச் சார்த்தி விட்டு படுக்கக் கிளம்பினாள் ராஜேசுவரி.

"இங்கே, வா," என்றாள் பவானி.

வந்தாள் ராஜேசுவரி.

"திறந்துவிடு." திறந்தாள்.

"இங்கேயே நில்லு." நின்றாள்.

போய் பல்லைத் துலக்கி வாயைக் கொப்புளித்துவிட்டு வெளியே வந்தாள். "தித்திப்பு இருக்கக்கூடாது வாயில்; பல் கெட்டுவிடும்." என்று சொல்லிக் கொண்டே போய்விட்டாள் பவானி.

"ஐயோ கதவைத் திறந்து சார்த்தவா நான் தேவையானேன்!" என்று நொந்தாள் ராஜேசுவரி.

ராகதாளம் அணுவளவும் பிசகாமல் சுருதிசுத்தமாக ஒலிக்கும் இன்னிசை போல விளங்கிய தனது புது மணவாழ்விலே, தாளம் பிசகியது போல ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது ராஜேசுவரிக்கு புலனாயிற்று. ஆனால் ராஜேசுவரி சமாளித்துவிட்டாள்.

## 20

கொஞ்ச நாட்களாக நடராஜனின் உள்ளத்திலே ஏக்கம் படர்ந்திருந்தது; ராஜேசுவரியைப் பிரிந்த ஏக்கம்தான் அது. ஆறு மாதங்கள்தான் ஆயின எனினும், அவர் தம் அருமைப் புதல்வியைப் பார்க்கத் துடித்தார். விசாலம் கூட அத்தனை கலங்கவில்லை. அவர்தான், பெண்ணைப் பற்றி கொஞ்சம் பேசியதும் கண் கலங்கிவிடுவார்.

"அவள் அங்கே சந்தோஷமாக இருக்கும்போது நமக்கு ஏன் கலக்கம்?" என்று அவர் ஆறுதல் செய்து கொண்டாலும், அது நீர் மேல் கோடு போல மறைந்துவிடும்.

"ஒரு தடவை அவளைப் பார்த்து விட்டேனாயின் மனம் சாந்தி பெறும்," என்று அந்தரங்கம் அரற்றும். மகளைத் தாரை வார்த்துத் தானம் செய்து போதும், பிறகு புக்ககத்தில் விட்டு வந்தபொழுதும் தோன்றாத ஏக்கமும், இப்பொழுது தோன்றியது. மகளைப் பிரிவதில் இத்தனை துன்பம் உண்டு என்று அவர் நினைத்ததே இல்லை.

"அவள் மறந்துவிட்டாள். காதற் கணவனோடும், அவனுடைய உறவினரோடும், அவள் உல்லாசமாக வாழ்கிறாள். அன்பு சூழ்ந்திருப்பதாக ஆயிரம் தடவை கடிதங்களிலே சொல்கிறாள். ஆனால் பெற்று வளர்த்துப் பெருமையாக வாழச் செய்த பெற்றோரைப் பற்றி ஏதாவது சொல்கிறாளா? கேட்கிறாளா? கிடையாது! பிறந்தகப் பாசம் புலப்படுத்தும் வகையில் ஏதாவது எழுதுகிறாளா? உஹூம்!"

'சீர் கெழும் வெண்முத்தம், அணிபவர்க்கல்லதே, நீருளே பிறப்பினும் நீர்க் கவைதான் என் செய்யும்!' என்று ஒரு செய்யுள் இருக்கிறதே!

நல்முத்து, தன்னை அணிபவர்க்குத்தான் பெருமை தருகிறதேயன்றி, தான் உதித்த கடலுக்கு என்ன கைம்மாறு செய்கிறது? முத்து உதித்த சுவாதியிலேயே உதித்த ராஜேசுவரியும் அப்படியே இருக்கிறாள்; துரைசாமியின் வாக்கு பலித்துவிட்டதே?

அதோ பூத்தொட்டி! ராஜேசுவரியைப் புக்ககத்திலே சேர்ப்பிக்க வேண்டி தென்னாடு பறப்பட இரண்டே நாள் இருந்தபோது, ராஜேசுவரி அதனருகு நின்று, தந்தையைப் பார்த்து, "கொள்ளையாய்ப் பூத்துவிட்டது, ஆசை தீர வைத்துக் கொண்டாச்சு!" என்று கூறினாளே!

இப்பொழுதும் எத்தனையோ செடிகள் பூத்துக் குலுங்குகின்றன. ஆனால் மலரெல்லாம் கொய்யப்பட்ட செடிபோல விளங்குகிறது இல்லம். இலைகளும் வாடிப் போன செடியாக விளங்குகிறது உள்ளம்.

"நீங்கள் போய் ஒரு தடவை பார்த்துவிட்டு வாருங்களேன்!" என்று விசாலம் சொன்னாள். ஆனால்

நடராஜன் அவ்வாறு செய்யவில்லை. விசாலத்திற்கு மட்டும் ஏக்கம் இராதா? குழந்தைகளும்தான் ஆசைப்படவில்லையா? ராஜேசுவரியைப் பற்றி பேச்சு எடுத்ததுமே, விசாலத்தின் முகம் கன்றிப் போவதையும், குழந்தைகளின் முகத்திலே அசடு தட்டுவதையும் நடராஜன் அறிவாரன்றோ?

"மாப்பிள்ளைக்கு ஏதாவது வேலையாகிவிடும். பிறகு அவருக்கும் முடியாது. இப்பொழுது அவளை அழைத்துக் கொண்டு அவர் வந்தால் நலம்," என்று நடராஜன் மனைவியிடம் கூறுவார். ஆனால் புது மணவாழ்வு நடத்தும் பெண்ணின் இன்பத்திற்கு இடையூறாகி விடுமோ என்று அவர் ஆலோசித்தார். கையிலிருக்கும் தினசரி தாள் மீது அவர் கவனம் பதிந்திருக்குமானால், அந்தக் காகிதப் பகுதிகளிலே அவர் உலகம் முழுதும் பார்த்து மகிழலாம். ஆனால் ராஜேசுவரியின் மீதுதான் அவருக்கு நினைவு ஓடியது. உலகத்தைத் துறந்துவிட்டது பெண் பாசம்.

"அப்பா! அப்பா!"

யார்? ராஜேசுவரியா? அவள் குரல் தான்!

தெருவழியே போய்க் கொண்டிருந்த குதிரை வண்டியினின்று எட்டிப் பார்க்கும் முகம் ராஜேசுவரியல்லவா? ஐயோ, ஏன் வண்டி நிற்காமல் ஓடுகிறது! அந்தப் புயற்குரல், வெண்கல ஒலி . . . தேய்ந்து செல்கிறதே!

நடராஜன், கையில் பத்திரிகையுடன் படியிறங்கி, அடுத்தகத்து வாசல் வரை ஓடினார். அதே வண்டியினின்று எட்டிப் பார்க்கும் மற்றோரு முகம் . . . சாம்பசிவத்தின் மனைவி . . .

திகைத்து நின்ற நடராஜனின் அருகு மற்றொரு வண்டி நின்றது. பெட்டி படுக்கைகளுக்குக் காவலாக அதிலே சாம்பசிவம் இருந்தார்.

"உன் பெண்ணை அழைத்து வந்திருக்கிறேன், அதற்கு என்ன தரப் போகிறாய் எனக்கு? பருப்புத் தேங்காய் பண்ணிக் கொணர்ந்துவிடு போதும், பெண்ணை அழைத்துக் கொண்டு போகலாம் . . . " என்றார் அவர், குறும்பாக சிரித்து.

சிரித்தபடியே அவர் சொன்னதால் நடராஜன் அதை வேடிக்கைப் பேச்சு என்று எண்ணினார். தம் வீட்டு வாசலில் நிற்கும் இளைய பெண் ராதையைப் பார்த்து, "அக்காவைக் கூட்டிண்டு வரப் போகிறேன் என்று அம்மாவிடம் சொல்லு!" என்று கூறியவாறே, வண்டியில் உட்கார இடமில்லை என்று கண்டு தெருவில் நடக்கத் தொடங்கினார்.

"அத்தனை சுலபமாக அனுப்பிவிடுவேனா, நடராஜா! பருப்புத் தேங்காய் கொண்டு வர வேண்டும், சொல்லு போ விசாலத்திற்கு!"

நடராஜன் புரிந்து கொண்டார்.

"டிபனுக்கு அனுப்புகிறேன்."

"நான் சம்பிரதாயப்படித்தானே கேட்கிறேன், கொண்டாப்பா!"

சாம்பசிவத்தை ஏற்றிக் கொண்டு ஒரு வண்டி நீளச் செல்வதையும், கணவர் முகம் சுண்ட, வாசற்படி ஏறி வருவதையும் பார்த்துக் கொண்டே விசாலம் வந்துவிட்டாள்.

"பருப்புத் தேங்காய்ப் பட்சணம் பண்ண ஆரம்பி. சமையல் அப்புறமாகட்டும். நான் போய் பார்த்துவிட்டாவது வருகிறேன் . . . " என்றார் நடராஜன் மனைவியிடம்.

"நீங்கள் இப்பொழுது போகவேண்டாமே; மைசூர்ப் பாகு கிளற நாழியாகாது. சீக்கிரம் பண்ணித் தந்துவிடுகிறேன். நீங்கள் குளித்துவிட்டு தயாராயிருங்கள். வேலைக்காரியை வெற்றிலையும் பழமும் வாங்கிக் கொண்டு வரச் சொல்கிறேன் . . . சம்மந்திகளுக்கு உறவு என்கிற உரிமை அவருக்கு. சந்தோஷப்பட்டுப் போகட்டும். இந்த மட்டும் அழைத்துக் கொண்டு வந்தாரே!" என்று அதற்கு மேல் புகழாமல், பெண்ணை மீட்கத் தேவையான பட்சணம் செய்யப் புறப்பட்டாள் விசாலம். ராஜேசுவரியை அழைத்து வர நடராஜன் புறப்படுவதற்குள் மணி ஓடி வந்து, "நான் பார்த்துவிட்டேன் அக்காவை! ஓடிப்போய் வந்துவிட்டேன்," என்று ஆரவாரம் செய்துவிட்டு, பிறகு மெல்ல அன்னையிடம் வந்து, "எப்படியோ இருக்காம்மா அக்கா! அழுகிறமாதிரி இருந்தது முகம்!" என்றான். ஒன்றுமே பேசாமல், உருண்டு விழும் கண்ணீர்த் துளிகளை துடைத்துக் கொண்டாள்.

விசாலம்.

தந்தையைக் கண்டதுமே, "அப்பா,!" என்று உரக்க அழைத்த ராஜேசுவரி, பிறகு அதிகம் பேசவேயில்லை. பேச்சுக் கொடுக்க சாம்பசிவம் இருந்தாரே! நடராஜனின் கேள்விகளுக்கு அவரே பதிலளித்தார்.

"ஏன் இப்படி உடம்பு இளைத்துவிட்டது?" என்று கேட்டதற்கு, சாம்பசிவம், "புக்ககமப்பா, புக்ககம்!" என்றார். ஜுரக்குழந்தை போல் பேசமாட்டாமல் பார்வையாலேயே ஆவலைத் தெரிவித்துக் கொண்டிருந்த ராஜேசுவரி, முகம் சுளித்தாள்.

இளைத்து உருகிவிட்ட ராஜேசுவரி தெருவில் நடந்து வரும்படியாகிறதே என்று நடராஜன் மனம் புண்ணானார். உற்று உற்றுப் பார்த்தார் மகளை. அவர் கண்களில் கலக்கமும், நீர்த்துளிகளும் எட்டிப் எட்டிப் பார்த்து மறைந்தன.

"ஏனம்மா, இப்படி அசட்டு ஏற்பாடு செய்தார்கள்? ஒரு கடிதம் போட்டிருந்தால் நான் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே!" என்று அவர் வினவினார். "'பருப்புத் தேங்காயைப் பற்றிக் கொண்டு பெண்ணை ஒப்புவி', என்று உன் சம்மந்தியம்மாளே சொல்லிவிட்டார்" என்று சாம்பசிவம் கூறியது உண்மையாயிருக்கும் என்று அவருக்குத் தோன்றவில்லை. சாம்பசிவத்தின் தீனிவெறி அவர் அறியாததல்லவே! ஆனால், ராஜேசுவரியும், "சாம்பசிவம் சொன்னாரே அம்மா! என்ன இருந்தாலும் சம்மந்திகள் தங்கள் மதிப்பை விடக் கூடாதோல்லியோ அப்பா!" என்று காரணங் கூறியபோது அவர் துணுக்குற்றார். முன்னறிவிப்பில்லாமல், ராஜேசுவரியை அனுப்பிவிட்டதற்காக, நடராஜன், "அவர்களுடைய பெருந்தன்மையே பெருந்தன்மை! நம் மனதறிந்து அனுப்பியிருக்கிறார்களே!" என்று பாராட்டியவர் அல்லவா?

வாசற்படியிலே கண்ணனை ஏந்திக் கொண்டு நிற்கும் அன்னையை நோக்கி ராஜேசுவரி விரைந்தாள். அடுத்தகத்து வாசலில் கூட தன்னை எதிர்பார்த்து நிற்பவர்களைக் கண்டு உவகை பொங்கச் சிரித்துக் கொண்டே போனாள்.

குழந்தை கண்ணனை வாரியணைக்கப் போகிறவள் போல் கைகளை நீட்டியபடியே ஓடினாள், ஆனால் அழைப்பு அன்னைக்குத்தான்.

"அம்மா! அம்மா! அம்மா! அம்மா!

விசாலம் வலக் கரத்தால் புதல்வியை அணைத்தாள். தம்பியை அணையச் சென்றவள் தாயின் அணைப்பில் வீழ்ந்தாள். ஒரே ஒரு கணம் தான் இந்த உணர்ச்சி வேகம், நாடகக் காட்சி!

"அம்மா!"

"அழாதேம்மா, ராஜம்!"

மறுகணம் இருவருமே வெட்கமுற்றவர்கள் போல விலகிக் கொண்டனர். பிரிவென்பதே அறிந்திராத அந்தக் குடும்பத்தில் ராஜேசுவரியின் புக்ககப் பிரவேசம் தான் முதல் பிரிவு அனுபவம். அந்தப் பிரிவு நீங்கிய உவகை தான் அவர்கள் வாழ்வின் இன்பச் சிகரமாயிற்று.

முன்னறிவிப்பின்றி தான் சாம்பசிவம் வீட்டாருடன் வர நேர்ந்த காரணத்தைச் சொன்னாள் ராஜேசுவரி. உத்தியோக விஷயமாய் ரகுபதியைப் பேட்டி காண பம்பாயிலிருந்து அழைப்பு வந்திருந்தது. அதற்காக ரகுபதி புறப்பட ஆயத்தமாயிருக்கையில் பவானிக்கு நாகபூரிலிருந்து சத்யமூர்த்தி அழைப்பு அனுப்பிவிட்டார். மகளுக்குத் துணையாக சாரதாம்பாள் கூட புறப்பட விரும்பினாள். ராஜேசுவரி தனியாயிருப்பாளா என்று யோசித்தார்கள். அந்த சமயத்தில் சாம்பசிவம் வந்து பார்த்தார். உடனே ராஜேசுவரியை அவருடன் பிறந்தகம் அனுப்பிவிட ஏற்பாடு ஆயிற்று.

இந்த விவரம் கேட்டதும் விசாலம், நிதானமுடன், "சாம்பசிவம் பக்ஷணம் கேட்டது தப்பே இல்லை. அவராலேதான் நம்ம பெண்ணைப் பார்க்கிறோம், என்றாள்.

நடராஜன் முறைத்தார். "ஏன், மாப்பிள்ளை பேட்டியானதும் வந்திருப்பார். கொஞ்ச நாள் புருஷனும் மனைவியுமாய் இருக்கவொட்டாமல் செய்து விட்டார் இந்த சாம்பசிவம் என்று

எனக்குக் கோபம்தான் வருகிறது!" என்றார்.

ராஜேசுவரி குறுக்கிட்டாள். "பேட்டி முடிவு தெரிந்து மாப்பிள்ளை பம்பாயிலேயே இருக்கும்படியாகலாம் என்றுதான் என்னை இங்கே அனுப்பினார்கள். அப்பா! அம்மாவுக்குக் கூட இஷ்டமில்லை. முதலில் பிறந்தகத்திற்கு அனுப்புகிறபோது நாம் செலவு செய்யணுமா? எல்லாமே சம்மந்திகளுக்குச் சௌகரியமாக அமைந்துவிடுகிறது என்றார் அம்மா. அப்போது தான் சாம்பசிவம் மாமா சொன்னார், "நான் பட்சணமாவது பற்றிக் கொள்ளுகிறேன்," என்று! "பேஷாய்!" என்று ஒப்புக் கொண்டார் அம்மா! என்ன இருந்தாலும் சம்மந்திகள் என்ற ஹோதா கொஞ்ச நாளைக்கு இருக்கட்டுமே என்று தான் தோன்றும் அப்பா! என்னை இப்பொழுது அனுப்பினதே பெரிய உபகாரம்தான்," என்று ராஜேசுவரி சொன்னதையெல்லாம் செவியில் வாங்கிக் கொண்ட நடராஜன், பதிலே பேசாமல் வாசற்புறம் போய்விட்டார்.

வேலைக்காரியும், ராஜேசுவரியும் குசலம் விசாரித்துக் கொண்டிருந்த சமயம் சமையலறையிலிருந்த மனைவியருகு சென்று, "நம்ம பெண் ராஜேசுவரி தான் என்று நீ நம்புகிறாயா?"என்று கேட்டுவிட்டு மீண்டும் வாசலுக்கு விரைந்தார்.

ராஜேசுவரி தொட்டிலில் கண்ணனையும் ராதையையும் உட்கார்த்தி விட்டு தானும் ஏறி உட்கார்ந்தாள். மசமசவென்று சற்று நேரம் அப்படியே இருந்தாள். நடராஜனுக்குப் பொறுக்கவில்லை; வந்தார்.

"ஆடேன், பாடேன்! உம்!"

கால்களைத் தரையில் உந்திவிட்டு ராஜேசுவரி தொட்டில் ஆடினாள். ஆனால் முந்திய வேகம் இல்லை. கால்களுக்குத் தான் பலவீனமோ? . . .

"ஏன் அப்படி இருக்கிறாய்?"

"இந்த மாதிரி ஒரு நடத்தைவிட்டு மறுபடியும் ஊருக்குப் போக மனசு வருமா என்று ஆச்சரியமாயிருக்கு அப்பா1"

"என்ன? . . . என்ன?"

"கொஞ்சங் கூட பயப்படாமல், கொஞ்சங் கூட ஒரு இதுவுமில்லாமல், இருக்கக் கூடிய இடம் ஒன்று இருக்கா என்று ஆச்சரியமாயிருக்கு!"

"ஒரு எதுவுமில்லாமல்? ஏன் நீ அங்கே சந்தோஷமாக இருக்கவில்லையா? அது தான் பார்த்தேன், உடம்பு இப்படி இருக்கிறது!"

"அதற்கு சொல்லவில்லை அப்பா. அங்கே எத்தனையோ சந்தோஷமாயும் உற்சாகமாயும் இருந்தேன். ஆனால் அங்கே சந்தோஷமாயிருக்க வேண்டுமென்றால் இப்படியிப்படி இருக்க வேண்டும் என்று ஒரு கவலையும் பொறுப்பும் இருக்கு. இங்கே அப்படியில்லையே! தொட்டிலாடுகிறேன் பார்! அம்மா ஒன்றும் நினைத்துவிடமாட்டாள் என்ற துணிச்சல் தான்! இத்தனைக்கும் நான் செய்திருக்கும் தீர்மானம் என்ன தெரியுமோ? அம்மாவுக்கு, வலது கை மாதிரி இருக்கணும் என்று தீர்மானம்! நானோ வந்ததும் தொட்டிலில் உட்கார்ந்துவிட்டேன்!" என்று சொன்ன வண்ணமே ராஜேசுவரி எழுந்துவிட்டாள்.

ராஜேசுவரி சோகமுடன் சிரிப்பதும், சோனிப்பார்வை பார்ப்பதும், பேசும் குரலில் மாறதலும் நடராஜனின் வேதனையை வளர்த்தின. உள்ளே விசாலம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"சரி, குளிக்கப் போம்மா. பசிக்கும், சாப்பிட நாழியாகிறது!" என்று மகளை அனுப்பிவிட்டு நடராஜன் தொட்டிலில் உட்கார்ந்துவிட்டார். மெல்ல ஆடியது தொட்டில். "புக்ககமப்பா, புக்ககம்!" என்றது தொட்டில் சங்கிலி!

உணவருந்தும்போது எல்லோரும் ஒரு அரைவளையம் போல உட்காருவது தான் வழக்கம். விசாலம் உண்டிகளை அருகே வைத்துக் கொண்டு உட்கார்ந்தபடியே பரிமாறுவாள். விருந்தினர் இருக்கும்போது தான் பந்திச் சாப்பாடு, பரிமாறும் நடையெல்லாம்.

ராஜேசுவரியும், பல மாதங்களுக்குப் பிறகு கலவரம் இன்றி, வேறு வேலைகள் மீது கவனம் இன்றி, உணவு கொண்டாள். ஆவலாகச் சாப்பிட்டாள். அன்னை வற்புறுத்திப் போட்டதைச் சந்தோஷமாகச் சாப்பிட்டாள்.

"இப்படி இரண்டு நாள் சாப்பிட்டால் பருத்துப் போவேன்!" என்றாள் ராஜேசுவரி.

"ஏன், சாப்பாடு கூட சரியாகச் சாப்பிடமாட்டாயா அங்கே?"

"சாப்பிடாமலா? பிடித்தது, பிடிக்காதது என்ற வித்தியாசமே இல்லை. எல்லாம் தின்பேன்; அத்தனை பசியிருக்கும்! மாமியாரை காக்காய் பிடிக்கிறாயா என்று கூட கேட்பாள் பவானி! ஆனால் எனக்கென்னமோ நிஜமாகவே அத்தனை பசி! எல்லாமே ருசியாயிருக்கும்! பகாசுரி ஆகிவிட்டேன் நான்!" என்று ராஜேசுவரி கூசியவாறே சொல்லிச் சிரித்தாள்.

அவளை ஒரு தடவை பார்த்துவிட்டால் மனசு சமாதானமாகிவிடும் என்று ஏங்கி இருந்தவர், இப்பொழுது, "இப்படிப் பார்க்கவா ஆசைப்பட்டேன்!" என்று வருந்தினார்.

புது மணவாழ்வு வாழ்ந்துவிட்டு வந்துள்ள இளம் மனைவியா இவள்? ராஜேசுவரியா இவள்? அழகுப் பிம்பமாகத் திகழ்ந்தவள் ஏன் சேப்பிழம்பாகிவிட்டாள்! உயரமும் பருமனும் வாளிப்பாக அமைந்திருந்த உடல் இப்படிக் குறுகிவிட்டதே! 'நிமிர்! 'நிமிர்! கூனாதே!" என்று பிடில் வாசிக்கும் போதும் புத்தகம் படிக்கும் போதும் சொல்லி சொல்லி கம்பீரமாக நடக்கச் செய்தாரே அவளை? செழிப்புப் போய்ச் சீவனற்று வந்திருக்கிறாளே! பாதிக் கூந்தல் கொட்டிப் போயிற்றே' வேலைக்காரி கூட "எப்படித்தான் பொறுக்கிறீர்களோ? என் மகள் இப்படி வந்திருந்தால் நான் உசிரையே விட்டிருப்பேன்!" என்று சொல்கிறாளே! கன்னமும் கதுப்புமாய், பங்கனபல்லி மாம்பழமாக இருந்தவள், மாங்கொட்டையாக இருக்கிறாளே! கேட்டால், "இல்லேப்பா, இங்கே வந்ததும் எனக்கு என்னவோ ஒரு தினுசாயிருக்கு..... சந்தோஷம்தானா என்று சொல்ல முடியாமல் ஓய்ச்சலா இருக்கு . . . முந்தா நாள் வரை, எத்தனை சுறுசுறுப்பாய் இருந்தேன்! திடீர் என்று சோம்பலும் மசமசப்புமாய் பிரமையாட்டமாயிருக்கு . . . " என்று என்னமோ சொல்கிறாளே!

## 21

"பார்த்தேளா, நம்ம ராஜம் எப்படி மாறிவிட்டாளே, ஆச்சரியமாயிருக்கு!" என்றாள் விசாலம், கணவரருகு வந்து.

"இப்பத்தான் கண்ணில் பட்டதா உனக்கு?"

"ஆமாம். நான் சொல்கிறது உடம்பைப் பற்றி இல்லை!" விசாலம் அடுக்கிக் கொண்டே போனாள். ராஜேசுவரி தானாகவே புடவை தோய்த்துக் கொண்டு அழகாக உலத்தினாளாம்; வெந்நீரடுப்பைப் பார்த்து விறகை வைத்து, குவிந்திருந்த நெருப்புத் தணலை சமையலடுப்புக்குக் கொணர்ந்து கொடுத்தாளாம்! குளித்துவிட்டு, அண்டாவைத் திறந்து போட்டு வராமல், நீர் நிரப்பி மூடிவைத்து வந்தாளாம். குளித்து வந்ததும், கூட்டுக்கு அரைக்க வைத்திருந்ததை நிமிஷமாக அரைத்துக் கொண்டு வந்து கொடுத்தாளாம்!

நடராஜன் சிரித்தார். "வந்ததுமே இப்படி இங்கே சமையலறையில் புகுந்துவிட்டாளே! வழக்கமாக உட்காருகிற சிமெண்டு திண்ணையை வந்து பார்த்தாள். வாசலில் நின்று செடிகள் என்னமாயிருக்கு என்று பார்த்தாளா? அங்கே எப்படி இருந்திருப்பாள்? அதான், கருவேப்பிலைக் குச்சியாயிருக்கிறாளே!" என்று பொருமலாகச் சொன்னார்.

விசாலம் கலங்கவில்லை. "இல்லைன்னா, இரண்டு நாளிலே சரியாவிடும். முகம் தெளிந்துவிடும்; நம்மைப் பிரிஞ்சு எங்கே இருந்தாள்? எக்ஸ்கர்ஷன் போய்விட்டு வந்தாளே, ஒரே வாரத்தில் வாடிவிட்டாளே! இப்போது ஆறு மாசம் பிரிந்திருக்க மனசு தாங்கினாலும், உடம்பு தாங்கவில்லை. அவ்வளவுதான். புது மனுஷர்கள்; காரியம் செய்து பழக்கமுமில்லை, உருகிவிட்டது. அதுவும் முதல் முதல்லே புக்கம் போய் வந்தால், உடம்பு பொக்குன்னுதான் போய்விடும். வளர்த்தி எல்லாம் அடங்கி உடம்பை உருவிவிட்ட மாதிரிதான் ஆகிவிடும்!" என்று விசாலம் புன்னகையை அடக்க முயற்சிப்பவள் போல் மென்னகை சூசித்து, ஒரு செருகற் பார்வை பார்த்துவிட்டு போனாள்.

"உருவிவிட்ட மாதிரி இல்லை! பிழிஞ்செடுத்த மாதிரி!" என்று கணவர் சீறியதைப் பொருட் செய்யவில்லை விசாலம்.

சிறிது பொருத்து மீண்டும் வந்தாள். "எனக்குக் கவலையே இல்லை! நம்ம ராதைக்கும் படிப்பு, பாட்டு என்று பேஷாக சொல்லிவைக்கலாம்! ராஜத்தைப் பார்த்தப்புறம், மனசுதான் வேணும், உடம்புதான் வணங்கணும், என்று எனக்கு ஊர்ஜித மாச்சு!" என்றாள் விசாலம்.

கடு கடுத்தார் நடராஜன். "ஊர்ஜிதமாச்சு! எனக்கும் ஊர்ஜிதமாச்சு! சாம்பசிவம் சொன்னார். 'உன் பெண் சொன்னதைக் கேட்காமல், பாத்திரம் தேய்க்கப் போவாளாம்! வேலைக்காரி இல்லையா, இருக்கிறாள்! இவள் தேய்ப்பானேன் சொல்லு' என்று என்னைக்கேட்கிறார். அவருக்கும் நாட்டுப் பெண்ணை இளைப்பாய் அனுப்புகிறோமே என்று வருத்தம் போல தான் பேசினார். கெட்ட பேர் அவர்களுக்குத் தானே! இங்கே வேலைக்காரி இல்லாமல் இருக்கிறோமா? முந்தி உனக்குக் கூட ஒத்தாசைக்கு வரமாட்டாள், அங்கே வேலைக்காரிக்கு ஏன் ஒத்தாசை செய்தாளாம், கேள்!" என்று இரைந்தார்.

தங்கையின் கேள்விக்குப் பதிலளிக்க ராஜேசுவரி வந்துவிட்டாள்.

திகைக்கும் தாயையும், துடிக்கும் தந்தையையும் நிதானமாகப் பார்த்தாள். "அம்மா, மாமனார் ஒரு தினுசாகச் சொல்லுவார்! அம்மா ஒரு தினுசாகச் சொல்லுவார்! வேலைக்காரிக்கு பாத்திரங்களை நிறையப் போடுவானேன். அவள் பிரமாதப்படுத்துவாள், நாமே ஒரு குழப்பு குழப்பி அலம்பி விடலாம் என்று மாமியார் இரண்டு நாள் டீ பாத்திரம் தேய்த்ததைப் பார்த்தேன். நான் அதைப் பிடித்துக் கொண்டேன். மாமனார் இரண்டு மூன்று நாள் பார்த்துக் கேட்டார். 'ஐந்து நிமிஷம் இந்த வேலை!' என்று சொன்னேன்! எத்தனையோ வேலைகளில், இது ஒரு பொருட்டாகவே எனக்குப் படவில்லை. சில விஷங்கள் இப்படித்தான் வீட்டில் புருஷர்களுக்கும் பெண்களுக்கும் ஒத்து வருகிறதில்லை!" என்று தன் அனுபவ அறிவை வெளியிட்டாள் ராஜேசுவரி. விசாலம் மகளைப்பற்றிப் பெருமிதம் அடைந்தாள்.

விசாலம் சொன்னது போலவே, ராஜேசுவரி நான்கு நாட்களுக்குள் தெளிவுடன் விளங்கினாள். சிநேகிதிகளைப் பார்க்கப் போவதும், சந்தோஷமாகப் பேசி வருவதுமாக இருந்தாள். ஆனால் வீட்டிலே புத்தகத்துடன் நாற்காலியில் பிணைந்திருக்கவில்லை. கைகைப் பிடுங்கிக் காரியம் செய்தாள். விசாலத்திற்குப்பெருமை பிடிபடவில்லை; வருவோர் போவோரிடமெல்லாம், "எனக்கு முன்பு சாதம் பரிமாறாமல் இருந்ததற்காக எத்தனையோ வருத்தப்படுகிறாள் இந்தப்பெண்! நான் கூட என் அம்மாவிற்கு சாதம் பரிமாறப் போனதில்லை. எங்கம்மாவே சமைப்பாள், சாப்பிடுவாள், எடுத்துப் போட்டுக் கொண்டு. இவளைப் பார்த்தப்புறம் தான் எனக்கு என் அம்மா அருமை தெரிகிறது!" என்று தன் மகளைப் பற்றிப் புகழ்ந்து புகழ்ந்து மகிழ்ந்தாள்.

பாட்டு வாத்தியார் சர்மாகாருவிற்கு மணி செய்தி சொல்லிவிட்டு வந்தான். அவர் வந்தார்.

வத்தியார் பிடில் வாசித்தார்; ராஜேசுவரி ஆனந்தம் பொங்கப்பாடினாள். சுதந்திரமாகப் பாடும் திறமை வந்துவிட்டது போல ஒரு தென்பு; வாத்தியார் கூட அதையே சொல்லிப் பாராட்டினார்.

ராஜேசுவரி பிடிலை வாசிக்கும்பொழுது அவர் வருத்தமடைந்தார். "ஐந்து வருஷக் கைப்பழக்கத்தினால் வாசிக்கிறாயே தவிர, இந்த ஆறு மாதமும் வாசித்த கையாக இல்லையம்மா? ஏன் இப்படி? நீயும் எல்லோரையும் போலத் தானா கற்ற வித்தையை பறி கொடுக்கப் போகிறாய்? கலியாணமாகும் வரை தான் பாட்டுப் பாடவேண்டுமா?" என்று கேட்டார்.

"தினமும் வாசிக்கிறது, பாடுகிறது என்றால் இனிமேல் முடியுமா சார்?"

"அடேயப்பா, என்ன தடையோ? கையில் குழந்தை கீக்சு முச்சு என்கிறதா?"

"அப்படியில்லை சார், புக்ககத்தில் சுயநலம் பார்த்தால் நன்றாயிருக்குமா? நம்ம வேலையையே பார்த்துக் கொண்டு எப்படியிருக்க முடியும்?"

"ஒரு மணி நேரம் வாய்ப்பாட்டு, ஒரு மணி நேரம் பிடில் வாசிப்பு. இதை நீ கவனித்துக் கொண்டால் சுய்நலமாகுமா? உன் புக்ககத்தில் இப்படி நினைக்க மாட்டார்களே!"

"ஐயோ, அவர்கள் நினைப்பார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை சாரி; எனக்குத் தான் ஒரு

மாதிரியிருக்கும். மாமியார் சமையலறைக்குள் போனால் பாட்டு வாசித்துக் கொண்டிருக்கும் எனக்கு இருப்பாக இராது," என்று ராஜேசுவரி பதிலளித்ததையும் நடராஜன் மறக்கவில்லை.

துறைசாமியின் முற்போக்கான குணங்களை அறிந்திருந்த நடராஜன் ராஜேசுவரி தான் அனாவசியமாக பீதியினால் துன்பப்பட்டுவிட்டாள் என்று முடிவு செய்தார்.

அதனால் அவர் அடிக்கடி ராஜேசுவரிக்குத் தென்பூட்டும் வகையில் பேச விரும்பினார். ஆனால் அவர் தான் தென்பிழந்து வரலானார்.

"நீ அவர்களுக்கு பணியாற்றுவதும் சந்தோஷமுடன் கடமையைச் செய்வதும் அவசியம் தான்; நான் இல்லை என்கிறேனா? நீ வரம்பில்லாமல் ஒடுங்கணுமா, பயப்படணுமா? அதைத்தான் கேட்கிறேன்!" என்று நடராஜன் கேட்டால், ராஜேசுவரி அசட்டுச் சிரிப்புச் சிரித்து, "உனக்குப் புரியாது, அப்பா" என்று பதிலளித்தாள்.

"இங்கே நம்மகத்தில் இருக்கிற பேரைவிட குறைச்சல் அங்கே! அப்படியென்ன காரியம் இருக்கும்? இருந்தாலும் தான், பாட்டும் படிப்பும் கவனிக்க நேரமிராதா? இத்தனைக்கும் காலைச் சமையல் மாமியார் செய்வார் என்கிறாயே!" என்று தந்தை கேட்டதற்கும், "இதையெல்லாம் கேட்டால் எப்படிச் சொல்கிறது அப்பா? எனக்குத் கூடத் தோன்றும்! எப்படியோ பொழுது சரியாகிவிடும்! எத்தனை நாள் நான், ஒரு நிமிஷம் கூட வெறுமனே உட்கார நேரமில்லாமல் சாப்பிட மட்டும் உட்கார்ந்திருக்கிறேன் தெரியுமா?" மறு மொழி கிடைத்தது.

"ராஜம், நீ நாட்டுப் பெண் ஸ்தானத்தையே நினைத்துக் கொண்டு பழகியிருக்கிறாய்! பெண் என்ற ஸ்தானத்தில் உன் கடமை நீ பிழறிவிட்டாய், தெரிகிறதா?" என்று கோபமாகக் கேட்டதற்கு கண்ணீருகுத்துவிட்டு மௌனமாகிவிட்டாள் ராஜேசுவரி.

இதையெல்லாம் யோசித்தார் நடராஜன். மனைவி சொல்லுவாள், இப்பொழுது மகள் சொல்கிறாள். பெண்கள் மனசு ஒரு தினுசுதான் என்று இந்தப் பெண்களே சொல்கிறார்களே!

வீட்டின் நிலவரத்துக் கேற்ற படிதானே ராஜேசுவரி இருப்பாள்! அவளைக் கடிவதில் பயனென்ன!

ராஜேசுவரியின் புது மண வாழ்வு எப்படியிருந்தது என்பதை மெல்ல மெல்ல நடராஜன் அறியலானார்; அதற்கான சந்தர்ப்பங்கள் சில ஏற்பட்டன.

பவானியின் மனப் போக்கைப் பற்றித்தான் சற்று கவலையுடன் புதல்வியைக் கேட்டாள் விசாலம். "கையில் குழந்தை வளர்ந்துவிட்டதே! அதுவும் தனியாய்க் குழந்தையை சமாளித்துப் பழகிவிட்டாளே! இப்பொழுது சிடுசிடுத்திருக்க மாட்டாளே!" என்று கேட்டாள். ராஜேசுவரி சிரித்தாள். "முந்தி குழந்தை அது பாட்டுத் துங்குமே அம்மா, இப்போதான் விஷமம் செய்கிறது," என்றாள். இத்தனை குழந்தைகள் பிறந்தும் தனக்குச் சரியாகக் கேட்கத் தெரியவில்லையே, என்று விசாலம் யோசிக்கும் சமயம், "அதனால் பாவனியின் விஷமமும் அதிகமாகிவிட்டதாக்கும்? என்று கேட்டுவிட்டார், அங்கு வந்த நடராஜன்!

"அதெல்லாம் இல்லையப்பா! நானும் பார்த்தேன், பவானி அக்கா வரப் போகிறாள் என்று வீட்டில் யாருக்கும் ஒரு பிரமாதப் பரபரப்புக் காணோம்! எனக்கே பரிதாபமாயிருக்கும்! 'அப்பா கோபிப்பார், அப்பாக்குப் பிடிக்காது' என்று பவானி கூட சற்று பயப்பட்டுத் தான் எனக்கு ஒத்தாசை செய்யச் சொல்லுவாள். அதனால் நான் என்ன செய்வேன் தெரியுமா? எதிர்பார்க்கிறதற்கு முந்தியே செய்து விடுவேன்! 'எள்' என்றால் 'எண்ணெயா'க இருந்துவிடுவேன்! எப்படி என்னால் இருக்க முடிந்தது என்று இப்பொழுது தான் ஆச்சரியமாயிருக்கு! ஒரு நாள் மட்டும் எனக்கு அழுகை வந்துவிட்டது . . ."

"ஏன், என்னாச்சு?

"வெந்நீரடுப்புப் புகையறது, விறகை அணைத்துவிடு மன்னி" என்றாள் பவானி. அணைத்துவிட்டு வந்தேன். குளித்துவிட்டு வந்தாள். நான் போய் விறகை வைத்து ஊதுவதற்குள், அம்மா வந்தார். "இன்னும், மூன்று பேர் குளிக்கணுமே, அணைத்துவிட்டாயே" என்றார். தலையைச் துவட்டிக் கொண்டிருந்த பவானி, "மன்னி தான் அணைத்தாள், நான் அணைக்கவில்லை" என்றாள்! அக்கா அணைக்கச் சொல்லித்தான் அணைத்தேன் என்று சொல்லவில்லை நான். என் கை தான் அணைத்தது, நிஜம் தான் என்று சமாதானப்படுத்திக் கொண்டுவிட்டேன்; ஆனால் அழுகை

வந்தது. அடுப்புப் புகைந்ததனால் தப்பித்தேன்! புகையினால் கூட கண்கள் சிவந்து போகுமே!"

அசட்டுச் சிரிப்புடன், ராஜேசுவரி சொன்னதைக் கேட்டு நடராஜன் "ஆகா, இது தான் காந்தித்தனம்!" என்று சொல்லிவிட்டு வியந்தார்.

"பவானிக்கே உன் அருமை தெரிந்துவிடும்," என்றாள் விசாலம்.

"இப்பொழுதே சொல்லிவிட்டுத் தானேம்மா போனாள்? 'மன்னி, நான் மாற மாறச் சொன்னபடி மாறிவிட்டாய், தேவலை! என் வார்த்தைக்கும் செல்வாக்கு இருக்கு!' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு போனாள், அக்கா! நாம் எத்தனை கஷ்டப் பட்டாலும், அந்த அபிமானம் இருந்தால் போதாதாம்மா?"

"அதுதானே, வாய் நிறையச் சொன்னார்களே என்றுதான் சந்தோஷப்படவேண்டும் நாம்! அதுகூட சொல்லாமல், 'பிரமாதமாக செய்துவிட்டாளாக்கும்!' என்று பேசிவிடுவார்களே சில பேர்? சின்ன வேலை கூட அவளுக்குப் பிரமாதமாகத் தோன்றினதால் தான், நீ செய்கிறதை எல்லாம் பெரியதாகத் தோன்றியிருக்கிது; பாராட்டியிருக்கிறாள்!"

"ஆமாம்மா, நிஜம்தான்! நான் பிரமாதமாக ஒன்றும் செய்யவில்லை. சமையல் மாமியார் செய்வார். நான் சில்லறை வேலைகள் தான் செய்வேன். சுத்தாள் எட்டாளுக்கும் சமானம் என்று மாமியாரே சொல்லுவார்! இந்தப் பாராட்டு போதுமம்மா, என் மனம் குளிர!" என்று பேரானந்தம் கொண்டாள் ராஜேசுவரி.

மண வாழ்க்கை, மகளின் உயர்வுகளை உயர்த்தும் என்பது நடராஜனின் நம்பிக்கையாயிருந்து இப்பொழுது ராஜேசுவரியைக் கண்ட பிறகு அவருக்கு அதிர்ச்சியாயிருந்தது.

அவருடைய ஏமாற்றமும் கோபமும், தங்குத் தடையின்றி வெளி வந்தன.

"நல் முத்துப் போலவே ஆகிவிட்டாயே!" என்று கேட்டால், "ஸ்வாதியில் பிறந்தவாயிற்றே நான்!" என்று ராஜேசுவரி கேட்கக் கூசமாட்டாள் என்று நடராஜன், "ராஜம், கேள் ஒரு செய்யுள்;

"பலவுறு நறுஞ் சாத்தம் படுப்பவர்க் கல்லதை

மலையுளே பிறப்பினு மலைக் கவைதான் என் செய்யும்?

என்று நாலடியிருக்கிறது! 'சந்தன மரஙகள், அவற்றை உபயோகித்து உரிமை பாராட்டுகிறவர்களுக்குப் பெருமை தருகின்றன. அவற்றின் பிறப்பிடமான மலையை யாரும் நினைப்பதில்லை!' இது தான் அர்த்தம்! அதுபோலாகிவிட்டாய் நீ. பெற்று, வளர்த்து, பாட்டும் படிப்பும் கற்பித்து, பெரியவளாக்கிய எங்களை விட அவர்கள்தான் உனக்கு உசத்தியாகிவிட்டார்கள்! நீ ஒடுங்கி, ஒடுங்கி உழைத்ததற்கு அவர்கள் வைக்கும் நல்லெண்ணமும் அபிமானமும் தான் உன்னை உயர்த்துவிட்டன! செருப்பாய் உழைத்தால் பிரியம் வருகிறது; அதிசயம் பார்! நீ எங்களுக்குப் பெருமை கொடுக்கவில்லை. எங்கள் அன்பும் மட்டமாய்த் தோன்றுகிறது உனக்கு!" என்றார்.

"ஏன், நமக்கு என்ன பெருமை தரவில்லை! வணங்காமுடியாய் வளர்ந்துவிட்டார்கள் என்ற பேச்சு நமக்கு வராமல், நம்மை யாரும் குறை கூற இடமில்லாமல் செய்துவிட்டாள். அவள் இளைத்துவிட்டாள், என்று கண்டபடி பேச வேண்டாம்!" என்று விசாலம் கணவரைக் கடிந்தாள்.

"அப்பா, தேய்ந்த சந்தனக் கட்டைதான் மணக்கும்! இளைத்தால் என்ன? என்று ராஜேசுவரி கேட்டுவிட்டாள். நடராஜன் சளைக்கவில்லை.

"இளைப்பிற்குச் சொல்லவில்லை நான்! நீ பாட்டும் படிப்பும் துளிக் கூட லட்சியம் செய்தாயா? பிடில் வாசிக்கிறேன் என்று எழுதுவாயே, மாதத்திற்கு ஒரு கடிதம்! தீட்டுக் கடிதம் தான் அப்பா அம்மாவுக்குப் பிராப்தி இல்லையா?"

துணுக்குற்ற ராஜேசுவரி, "எப்படித் தெரியும் அப்பா?" என்று கேட்டுவிட்டாள்!

"தெரியும். தெரியாதா? பெரிய கடிதம், மாதத்திற்கு ஒன்று! சாவகாசத்திற்குக் குறைவென்ன அப்போது? முதலில் இரண்டு மூன்று கடிதங்கள், இரண்டு மூன்று வாரத்திற்கொருமுறை வந்தன. பிறகு, சரியாக நாலு வாரத்திற்கு ஒரு கடிதம்! தெரிந்ததம்மா, கள்ளத் தனம்!

"பொய்யும் கள்ளத்தனமும் கூடாது என்று தான் அப்பா . . . "

"நன்றாய் வதைக்கிறேள் அவளை?" என்று விசாலம் ஆதரவு காட்டியதும் ராஜேசுவரி சமாளித்துக் கொண்டாள்.

"அப்பா, மலை மேல் பிறந்தாலும் பச்சிலை உரலிலே மசிய வேண்டும் என்று சொல்வார்களாமே! இங்கே எப்படி இருந்தாலும் கூட புக்ககத்திலே உழைத்தால் தான் பெருமை அப்பா!" என்று மீண்டும் ராஜேசுவரி பதிலளிக்கவே, நடராஜன் தளர் குரலில், "சரிம்மா, உனக்குத்தான் எல்லாம் தெரிஞ்சிருக்கு! எனக்கென்ன தெரியும்! நான் ஒரு அசட்டு அப்பா!" என்று சுண்டிய முகத்துடன் மௌனம் சாதித்தார்.

ராஜேசுவரிக்கு சொல்லொனா வேதனை உண்டாயிற்று. பிறந்தகம் என்ற சலுகை அல்லவா? வேதனையை அன்னையிடம் சொன்னாள்.

இத்தனை நாள் 'அப்பாப் பெண்' என்ற செல்லப் பெயரைத் தாங்கியவள், 'அம்மாப் பெண்' என்ற பட்டத்திற்கு ஆளாகிவிட்டதைச் சொல்லிக் கொள்கிறவள் போல் பேச்சுத் துவங்கினாள் ராஜேசுவரி.

பழமொழிகள் மூலம்தான் தனக்கு உலகமே தெரிகிறது என்றும், தமிழ்ப்பத்திரிக்கைகள் மூலம்தான் தனக்குத் தமிழ் நாட்டு வாழ்க்கைத் தெரிகிறது என்றும் விசாலம் கூறுவது உண்டு. அதை நினைத்துக் கொண்டாள் ராஜேசுவரி. துள்ளும் மாடு பொதி சுமக்கும் என்று எப்பொழுதோ தாய் தன்னைக் கடிந்தததையும் நினைவு கூர்ந்தாள்.

"அம்மா, 'தாயைப் பார்த்து மகளைக் கொள்' என்னும் பழமொழி ரொம்ப சரி. தேய்ந்த கட்டை மணக்கும், மலைப் பச்சிலைக்கு உரலில் தான் பெருமை. என் பாட்டுத்திறமை இந்த ஊருக்குத் தான் சர்க்கரை என்றெல்லாம் நானும் புது மனப்போக்குகளுக்கு வழி செய்து புது அனுபவங்களுக்கு அடிகோலினேன். பெரியவர்கள் கூடப் பழகாததால் உனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்று நீ மலைப்பாயே? பெரியவர் கூட பழகுகிறதனால் எத்தனையோ தெரிகிறது என்று நான் சந்தோஷப்படுகிறேன். இது தான் உனக்கும் எனக்குமுள்ள வித்தியாசம்!" என்று சொல்லிச் சிரித்த ராஜேசுவரி, "அப்பா தான் ஏனோ வருத்தமாய்ப் பேசுகிறார்," என்று வருத்தத்துடன் முடித்தாள்.

"அப்பாப் போக்குத் தனி, அப்பா சொன்னபடி இருக்கணும் என்றால் என்னால் தான் முடிந்தது; எல்லோருக்கும் முடியுமா என்ன?" என்று விசாலம் மறுமொழி அளித்தபோது, அந்தக் குரலில் பெருமிதமில்லை, பொருமல் இருந்தது.

ஓரிரண்டாண்டுகளாகவே விசாலம், அடிக்கடி கவலைப்படுகிறவளாகவும், சிறு விஷயங்களுக்கு மலைக்கிறவளாகவும் விளங்கினாள் அல்லவா? அதற்குக் காரணம், ராஜேசுவரியின் விஷயமாக ஏற்பட்டிருந்த கலியாணக் கவலை மட்டுமல்ல! பக்கத்தகத்து சீதா மாமியும் கூடத்தான்!

மாமியார், மாமனார், முதலானவர்களுடன் குடித்தனம் செய்யும் சீதம்மாள், விசாலத்தை விட சில வருஷங்கள் சிறியவளாயினும், கெட்டிக்காரி. உலக விஷயங்களிலே நல்ல அனுபவம் பெற்றவள். விசாலத்திற்கு ஒன்றும் தெரியாது என்று அவள் கூட சில சமயம் சொல்லியிருக்கிறாள்!

பிறரிடத்தில் சிறப்பையே காணும் இயல்பினளான விசாலம், சீதம்மாள் தன்னைவிடப் பலவிஷயங்களில் உயர்ந்தவள் என்று போற்றினாள். சீதம்மாவுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்று பாராட்டினாள். ஆனால் சில சமயம் அசட்டுப் பட்டம் வந்து விடும் போது மட்டும் விசாலம் வருந்தாமலில்லை! "அப்பா சொல்கிறபடியே நானும் இருந்தாச்சு," என்று அன்னை சில சமயம் வருத்தப்பட்டது ராஜேசுவரிக்குத் தெரியும்.

இன்று கூட அதே தொனியில் தான் அம்மா பேசுகிறாளோ? அம்மா வருத்தப்படுவது அனாவசியம் என்று பட்டது அவளுக்கு.

நடராஜன் எந்த விஷயத்தில் மனைவியைக் கட்டுப்படுத்தினார்? உடை விஷயத்தில் தான். "ஊரோடு ஒத்து வாழ வேண்டும். நீ தமிழச்சி என்று பிறர் வித்தியாசமாகப் பார்க்க

இடங்கொடாதே! உன்னைப் பார்த்ததுமே வேற்றுமை தோன்ற இடமளித்தாயோ, மற்ற பல விஷயங்களிலே வேற்றுமை வளரும். எளிய உடையின் அவசியத்தையொட்டி நீ தெலுங்குப் புடவை உடுத்து; நான் தமிழ் வேஷ்டியே உடுத்துகிறேன். பணக்காரத் தெலுங்கச்சியாக வைத்தோடும், இரட்டை மூக்குத்தியும் போட்டுக் கொள்வதை நான் ஆட்ஷேபிக்கவில்லை!" என்று கூறினாராம், தெலுங்கு நாடு புகுந்த போது. "பெரியவர்களைப் பார்க்கும்போது உடம்பு கூசுகிறது!" என்று விசாலம் தமிழ்நாடு செல்லும் சமயங்களிலும், விருந்தினராகப் பெரியவர்கள் வரும்பொழுதும் தமிழ்ப் புடவை உடுத்துவாள். "பதினெட்டு முழம் எப்படித்தான் உடுத்துகிறீர்களோ?" என்று சீதம்மாள் எப்பொழுதோ கேட்டதற்காக அம்மா வருத்தப்படலாமா?

தந்தையின் புத்திமதியும் சரியானதுதான், தாயின் மடிசார்ப் புடவை பக்தியும் சரியாவது தான். மற்ற எந்த விஷயத்தில் அப்பா அம்மாவைக் கட்டுப்படுத்தினார் என்று அம்மா பொருமுகிறாள்?

"ஏனம்மா, கொசாப் புடவை தான் காரியம் செய்யவும், பரிமாற லாயக்கான புடவைக் கட்டு; இல்லையாம்மா?" என்று அன்னையைக் கேட்டாள் ராஜேசுவரி.

விசாலம் மெல்ல சிரித்தாள். "அப்பாவிற்கு அது தெரியும் போலிருக்கு! அதனால் தான் என்னை இப்படிப் பழக்கிவிட்டார். மாம்பழப் புடவை உடுத்து என்று சொன்னவர், காரியங்களைக் குறை என்றும் சொன்னார். அப்பா ஏதாவது சொன்னால் அது மனதில் பதிந்துதான் போகிறது! நான் பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு இந்த ஊரில் தனிக்குடித்தனம் வந்தபோது, அப்பா சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டே வாயைப் பிளப்பேன்! அப்படிச் சொல்வார் விஷயங்களை; புரொபஸர் ஆச்சே!" என்று விசாலம் முறுவல் செய்தாள்.

கணவனின் அன்பையே உயர்வாகக் கருதும் பெண்ணுள்ளம் அந்தக் கணவனின் அபிப்பிராயங்களுக்கு அதிகம் உயர்வு கொடுக்கிறது, வலியப் போய்ச் சிக்கிக் கொள்கிறது என்பதை விசாலம் உணரவில்லை; ராஜேசுவரி உணர்ந்தாள்.

"மாப்பிள்ளை புரொபஸர் அல்லவே! அவர் பேசுவதெல்லாம் என் மனதில் எப்படிப் பதியுமோ!" என்று கேட்க நாணம் இடமளிக்கவில்லை.

"ஆமாம் அம்மா, அப்பா சொல்கிறதெல்லாம் ஆணித்தரமாகப் பதிந்துவிடுகிறது! எப்படியெல்லாம் மடக்கிப் பேசிவிடுகிறார்!" என்று ராஜேசுவரி, தன் வேதனையின் முத்திரையை இட்டாள்.

விசாலம் பெண்ணின் வேதனையைப் பொருட் செய்யவில்லை. தன் வருத்தத்தை நினைக்கவில்லை. கணவரைப் பற்றிய பெருமையைத் தொடர்ந்தாள். "அப்பா வாயினால் சொன்னதோடு நின்றாரா? காரியங்களைக் குறை, டிபனைக் குறை, என்று சொன்னவர், சளைக்காமல் புத்தகங்கள் வாங்கிக் குவித்தார். படி, படி, என்றார். நான் சமையலறைச் சிங்கியாயிருக்கக் கூடாது என்றார். நான் அடுக்களையை வளைய வந்தால் குழந்தைகளும் என்னையே சுற்றிக் கொண்டிருக்கும் என்று சொன்னார். குழந்தைகளுக்கு தாயார்தான் முதல் ஆசிரியையாம்; என்னைத் தையல் வேலை செய், புத்தகம் படி, குழந்தைகளுக்குத் தமிழ் சொல்லிக்கொடு என்றார். குழந்தைகள் கேட்கிற கேள்விகளுக்கு சாந்தமாய்ப் பதில் சொல்லு, வேலையிருக்கு என்று பறக்காதே, மிரட்டாதே, என்று போதனை செய்தார். குழந்தைகளுக்கு அறிவை வளர்க்கணும் என்று என்னைப் படி, படி என்று சொன்ன வண்ணமிருந்தார். அப்பா சொல்கிறபடி நடக்க எனக்கும் கசக்கவில்லை. உன்னோடு கூட உட்கார்ந்து பிடில் வாசிப்பேன். தெலுங்கு கற்றுக் கொண்டேன்!" என்று உற்சாகமாகப் பேசி முடித்தாள் விசாலம்.

"'சமையலறை சிங்கியாக இராதே! குழந்தைகளின் அறிவு வளராது!' என்று அப்பா அம்மாவை இத்தனைக் கட்டுப்படுத்தியிருக்க . . .. அவருடைய பெண் நான் எந்த நீதியில் பேசுகிறேன் தந்தையிடம்!" என்று திகைத்தாள் ராஜேசுவரி.

"ராஜம், நான் உன்னைப் பற்றி நினைத்ததையெல்லாம் வீணடித்துவிட்டாயே!" என்று நடராஜன் கண்ணீர் மழை பொழிவது போல பிரமை தட்டியது ராஜேசுவரிக்கு.

"உனக்குத் தெலுங்கில் கடிதம் எழுதி நீ நிஜமாகவே எப்படி இருக்கிறாய் என்று கேட்கலாமா என்று நினைப்பேன் சில சமயம்; ஆனால் கை வராது!" என்று தாய் சொல்வதைச் செவியுற்றதும் பிரமை தெளிந்தது அவளுக்கு.

"கை வரக்கூடாது அம்மா! நான் மேலுக்கு எழுதினேன் என்று நினைத்தாயா?" என்று வறட்டுச் சிரிப்பு சிரித்தாள் ராஜேசுவரி.

"பெண் என்ற கடமையை மறந்து தந்தையின் மனம் நோகடித்தேனே! அப்பாவும் சந்தோஷப்பட வேண்டும் என்ற நினைப்புடன் அடுத்த தடவை புக்ககத்தில் பழகப் போகிறேன்!" என்று சுருதி போல எண்ணம் இழைந்தது. இசைபோலத் தொடர்ந்தது கணவனின் கடிதம்!

ரகுபதி அவளை அழைத்துச் செல்வதற்காக வருகிறான்.

## 22

கணவர் வரப் போகிறார் என்று அறிந்ததும் எத்தனை குதூகலம்! கணவனின் விருப்பு வெறுப்புகளை நன்றாக அறிந்துவிட்ட பெருமையுடன் ராஜம் சமையல் திட்டங்களை வகுத்தாள். குழந்தைகளின் கூச்சல் கூப்பாடுகளுக்கு வரையறை வகுத்து, எப்படி அவர்கள் இருக்க வேண்டுமோ சொன்னாள். "இந்த விசை என் பிறந்தகத்தைப் பற்றி ஒரு குற்றங்குறை கூறக் கூடாது அவர்!" என்று ஆசையுடன் ஏற்பாடுகள் செய்தாள்.

ராஜேசுவரியின் முக விலாசத்தைப் பார்த்த நடராஜன், "இதுதான் காதல், அன்பு" என்று முடிவு செய்தார்.

"சரி, போகப் போகிறாய் மறுபடியும். இப்பொழுதாவது நிதானமாக இரு. 'எள்' என்றால் 'எள்'ளாகவே இரு; எண்ணெய்யாக இருக்கவேண்டாம். அவர்களுக்கும் வயது காலத்தில் பொல்லாப்பு வரக்கூடாது என்று பயமிருக்கும்! அம்மா எள் கேட்கிறாள், நீ எண்ணெயாய்க் கொண்டு வந்து கொடுத்தால், அம்மாவிற்கு எப்படி இருக்கும்? நீ நாட்டுப் பெண்ணாய் லட்சணமாயிருக்க வேண்டும்!" என்று சொல்லி வைத்து மகளை தயாராக்கினார்.

ரகுபதி வந்தான். "என்ன பலூன் மாதிரி ஊதியிருக்கே உடம்பு?" என்று கேட்டான். நடராஜன், "ஊதின உடம்பு வெடித்துவிடாமல் இருக்கட்டும்!" என்றார்.

"நல்ல ஊதுவத்தி வேணும்!" என்று தாயார் கட்டளை இட்டபோது ராஜேசுவரி எதற்கோ என்று எண்ணினாள். விசாலம் குத்துவிளக்கை ஏற்றி, ஊதுவத்தி பற்ற வைத்து, அறை முழுதும் சாம்பிராணிப் புகை போட்டு சம்பிரப்படுத்திய போதுதான் ராஜேசுவரி, "என்னம்மா, இதெல்லாம்!" என்று கேட்டாள். வெட்கத்தை விட திகைப்பு அதிகமிருந்தது அவளுக்கு.

" நம்மகத்தில் முதல் படுக்கையாச்சே!" என்று விசாலம் அரை குறையாகச் சிரித்துக் கொண்டு சொன்னபோது, ராஜேசுவரி வாயே திறக்கவில்லை.

ரகுபதிக்கு, ராஜேசுவரியிடம் காணப்பட்ட செழிப்பு திகைப்பை ஊட்டியது. "நீயா ராஜேசுவரி?" என்று கேட்டான், திகைப்பை வெளியிடும் பொருட்டு.

ராஜேசுவரி சளைக்காமல், "நான் ராஜாபாய் நடராஜன்" என்று பதிலளித்தாள். தந்தையின் மகளாகத் தான் விளங்குவதை வெளியிட்டுவிட்டாள். கணவனுக்கு அன்பும் பணிவிடைகளும் சலுகைகளுடன் வழங்கிக் கொண்டே, தாய்க்கும் உதவிகளைச் செய்து கொண்டே ராஜேசுவரி உற்சாகமே உருவெடுத்த பெண்ணாய் விளங்கினாள்.

ரகுபதியின் கண்கள் ராஜேசுவரியையே பார்த்தன. அலுக்காமல். மனம் அவளையே வட்டமிட்டது.

பகல் உணவுக்குப் பின் கணவனோடு பேசிக் கொண்டிருந்தாள் ராஜேசுவரி. திடுதிப்பென்று ரகுபதி, "நீ இங்கே இருப்பதற்கும் அங்கே இருப்பதற்கும் எத்தனை வித்தியாசமிருக்கிறது!" என்று சொன்னான். குரலில் வருத்தமும் இழைந்தோடியது!

"ஏன், எப்படி இருக்கிறேன்!"

"பிறந்தகம் என்றாலே சலுகை தான்!" என்றான்.

"ஓ, அதற்கா?.......அகம் எப்படியோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஊர் மட்டும் பிறந்த ஊர் என்றால் தனி விசேஷம் தான். அங்கே தெருவில் நடக்கும்போது, தலை நிமிர்ந்து நாலு பக்கமும் ஹாயாகப் பார்த்துக் கொண்டு போகப் பயமாயிருக்கும்! இங்கேயோ, "எங்கள் ஊர்!" என்று நான் எப்படி கம்பீரமாக நிமிர்ந்து நடக்கிறேன்! தெரிந்தவர்கள் எல்லோரையும் பார்க்கணும் என்று

தெருவில் நடக்கிறேன் இங்கே! அங்கே யாராவது தெரிந்தவர்கள் கண்ணில் பட்டு ஏதாவது கேட்கப் போகிறார்களே, என்று பயந்து தான் நான் போவேன்!" என்று சொன்னாள். சொல்லிவிட்டு யோசித்தாள். பவானியைப் போல பிறந்தகத்தில் அட்டகாசம் செய்கிறப் பெண் தான் ராஜேசுவரி, என்று கணவன் நினைப்பதை அவள் விரும்பவில்லை. "இரண்டு நாட்களில் கிளம்பி விடப் போகிறேனே, அம்மாவுக்கு நான் இல்லாமல் பழகட்டுமே என்று வந்துவிட்டேன் இங்கே, உங்களுடன் பேச," என்று சொன்னாள்.

வந்தன்று "இந்த இடத்தை விட்டுப் போகவேண்டுமா?" என்று வருத்தமுடன் சொன்ன ராஜேசுவரி, உற்சாகமுடன் கிளம்பிவிட்டாள். 'இப்படியே தான் வருத்தம் குறைந்து போகும்'"என்று நினைத்து நடராஜன் சிரித்தார்.

பஞ்சைத் திரி திரிக்கும்பொழுது, திரிக்கும் விரல்கள் பஞ்சுப் பந்திலிருந்து எட்டிப் போகின்றன. பஞ்சின் இழை உறுதியும் முறுக்கும் ஏறி, இறைவனின் சந்நிதியில் ஒளி வீசித் திகழ்கிறது. இதுபோலத் தானோ பெண்ணின் வாழ்க்கை!

ராஜேசுவரி புக்ககத்தைப் புக்ககமாகக் கருதாமல், ஆதரவின் உறைவிடமாகக் கருதி இரண்டாம் தடவையாக அதிலே வாழப் புகுந்தாள். பெற்றோருக்கும் மனைவிக்குமிடையே ஆண்மகன் நடுநிலைமை வகிப்பது எத்தனை அவசியமோ, அத்தனை அவசியம், பெண்ணும் நடுநிலைமை வகிக்க வேண்டியது என்று உறுதிபூண்டு வந்தாள்.

அதனால், மாமியார் மாமனார் இருவரும், "நமக்குப் பொல்லாப்பு இல்லை!" என்று மகிழ்வார்கள். "நாட்டுப் பெண்ணைக் கண்ணில் காணோமே! சமையல் அறையில் இருப்பாள் என்று நேர இங்கே வந்தால், புழக்கடைக்கே போய்விட்டாளே!" என்று ஒரு நாள் யாரோ கேட்டுக் கொண்டு வந்தார்களல்லவா முன்பு?

தந்தை சொன்னது சரி. 'எள்' என்றால், 'எள்ளாக'த்தானிருக்க வேண்டும். சுத்தம் செய்யப்பட்ட வெள்ளை எள்ளாக இருந்தால் சரி.

ராஜேசுவரி மாமியாரிடம் "பிடில் வாசிக்கிறேனம்மா!" என்று சொல்லி ஒழிந்த வேளைகளிலே பிடில் அரை மணி வாசித்தாள். "பத்திரிக்கையைக் காணோம் அம்மா, யாரோ கொண்டு போயிருக்கிறார்கள் போலிருக்கு; படிக்கலாமே என்று பார்த்தேன்" என்று உரிமையுடன் சொன்னாள்; பிறந்தகத்திற்குக் கடிதங்களைத் தாமதம் செய்யாமல் எழுதினாள். "எழுதினாயோ அம்மா?" என்று மாமனார் கேட்கும்படி வைத்துக்கொள்ளவில்லை. கணவனுக்கும், கணவனின் பெற்றோருக்கும் அவள் அளக்க விரும்பிய உயர்விலும், குந்தகம் ஏற்படவில்லை. மாமியாரின் தேவைகளை அறிந்து உதவினாள். தேவைக்கும் மேலான சிறு காரியங்களையும் செய்து மனநிறைவைப் பெற்றாள். 'பாட்டுப் பாடவில்லையே என்று நெஞ்சு ஏங்கவில்லை. 'பிடில் வாசிக்கலாமா?' என்று கை துடிக்கவில்லை. "ரேடியோவைக் கேட்டுக் கொண்டே கறி நறுக்குகிறேன்; என்று சமையலறையிலிருந்து வந்து ரேழியில் உட்கார்ந்து கொள்ளும் அளவிற்கு அவளுடைய நிலைமையில் நிதானமும் ஏற்பட்டது.

இப்படி அவள் ஏக்கமற்று, வீண் கூச்சம் விட்டு, மனநிறைவை உண்டாக்கி கொண்டதை யார் தடுத்தார்கள்? யாரும் தடுக்கவேயில்லை. "வந்த புதிதிலேதான் அடக்கமும் தயக்கமும் போலிருக்கு!" என்று வெளியாரும் சொல்லுவதற்கு இடமளிக்கவில்லை அவள். வீட்டிற்கு யார் வந்த போனாலும், "கலகலப்பான பெண்; உம்மணா மூஞ்சியில்லை" என்று அபிப்ராயங் கொண்டு சென்றார்கள். ஒரு தலைக் கடமையுணர்ச்சியுடனிருந்த போது காணாத மனச்சாந்தியை ராஜேசுவரி இப்பொழுது கொண்டாள்.

ரகுபதிக்கு ராஜேசுவரியிடம் தென்பட்ட மாறுதல் உவகையளித்தது. ஏதாவது குறும்பாகக் கேட்டால் கண்கள் கலங்கிவிடும் பேதைப் பெண்ணாக இல்லாமல், ராஜேசுவரி சந்தோஷமாக விளங்குகிறாள் என்று பூரித்தான். "யுத்த வேலைக்குப் போகிறேன்!" என்று சொன்னால், "ஐயோ, வேண்டாம்!" என்று அவள் பதறுவதை ரசிப்பான்.

"எத்தனை அட்டகாசம் செய்வான்? எப்படியெல்லாம் பேசி மடக்கிவிடுவான்! "நெய் வேண்டாம் என்று சொல்லக் கூடாதுடாப்பா, சூடு, அக்கினி . . . உடம்புக்குக் கெடுதி" என்று கெஞ்சினால்,

"அக்கினி, நெய்யினால் தணியுமா?" என்று கேட்பான்! நமக்குக் கேட்க முடியுமா எதிர்க்கேள்வி!" என்று சாரதாம்பாள் சொன்னபோது ராஜேசுவரி, "இதிலே அட்டகாசம் என்ன?" என்று நினைத்தாள். ஆனால் சாரதாம்பாள் எதற்குச் சொன்னாள் என்பதை அறியவில்லை. "திக்கன்னா, சோமன்னா, வேமன்னா தெலுங்குக் கவிகளா? இன்னும் . . . ? " என்று ரகுபதி கேட்டதற்கு ராஜேசுவரி, "அப்பர், ஒட்டக்கூத்தர், கம்பர்," என்று பேசிவிட்டதற்காகத்தான்.

"உங்கப்பா, 'கோங்கூரா' சாப்பிடமாட்டாராமே, பிடிக்காதாமே, ஆச்சரியம்!" என்னும் கேள்விக்கு ராஜேசுவரி, மாமியாரைப் பார்த்து, "இப்படிக் கேட்கிறார், அம்மா! தெலுங்கர்களை அப்பா வெறுத்தால் அதைவிட துரோகம் வேறு உண்டா? தெலுங்கு தேசந்தானே அப்பாவின் புக்ககம்?" என்று அவள் கேட்கும்போது சந்தோஷமாக ஏற்பான். ராஜேசுவரியைச் சமையலறையிலிருந்து வரவழைக்க முடியாது என்று அவனே போவான், அவளிருக்குமிடத்திற்கு.

மனதிற்குகந்த வேலை கிடைக்காததால் சோர்வுறவில்லை ரகுபதி. ராஜேசுவரிக்கு எவ்வித மனவருத்தமும் இல்லை. பெற்றோருக்கும் வருத்தமில்லை. கவலைப்படவேண்டிய அவசியமில்லை என்று அவன் தேறி ஓரிரண்டு ஏமாற்றங்களைப் பாராட்டவேயில்லை! மணவாழ்க்கையில் சத்புத்திரனாகவும், உத்தம புருஷனாகவும் விளங்குவதையே அப்போது அவன் பெரும் பேறாக ஏற்றான். ஏறுமாறு செய்யாத நல்ல மனைவியை அடைந்த பெருமிதத்தில் மூழ்கியிருந்தான்.

இந்த பரஸ்பர அன்பினாலேதான் அவர்கள் மணவாழ்க்கையில் மணம் கமழ்ந்தது. சாரதாம்பாள் மனங்குளிர்ந்தாள். "இங்கிதமறிந்த ஆனந்தத் தம்பதி!" என்ற சந்தோஷம் ஏற்பட்டது. தன் கணவரின் முயற்சிகளும், செயல்களும், ஒரு தடவை கூட பிசகுவதில்லை என்று வியந்தாள்.

பவானிக்குக் கூட அதையே எழுதினாள் சாரதாம்பாள். "நீ பிரசவத்திற்கு வந்துவிடு. பெண்ணுக்குப் பிள்ளைப் பேறு செய்ய எனக்குக் கஷ்டமா? அதுவும் உன் மதனி இருக்கும்பொழுது எனக்கு சிரமம் ஏது? அப்பா, அம்மா நாங்கள் இருக்கும்பொழுதே, பிறந்தகத்திற்கு வர நீ யோசனை செய்யலாமா? மாப்பிள்ளை சாப்பாட்டிற்குத் திண்டாடுவா_ர் என்று சொல்கிறாய். நீ வராவிட்டால் நானே வருகிறேன் - மன்னியை அழைத்துக் கொண்டு!" என்று எழுதினாள்.

## 23

பவானி அன்னையின் கடிதத்தைத் திரும்பத் திரும்ப வாசித்தாள். "அம்மா கடிதத்தை எத்தனை தடவை படிப்பாய்? பிறந்தகம் போகவில்லை என்று சொல்கிறவளா நீ?" என்று சத்யமூர்த்தி கேட்டபோது, பவானி சம்பந்தமில்லாமல், "எங்கம்மாவிடம் இருக்க எந்த நாட்டுப் பெண்ணுக்குக் கசக்கும்?" என்றாள்.

பிற்பகல் தாயாருக்குப் பதில் எழுதிவிட்டு அதைக் கணவனிடம் கொணர்ந்து காட்டினாள்.

"பிறந்தகம் கசக்குமா எனக்கு? வருகிறேன்; நான் என் புருஷரைப் பிரியக்கூடாது என்பதற்காக அண்ணா மதனியைப் பிரிப்பேனா? கடவுளே பார்த்து, அண்ணாவும் மதனியும் பிரியவேண்டாம் என்று அண்ணாவுக்கு வேலை கொடுக்க தாமதம் செய்கிறார். நான் பிரிக்கலாமா?" என்று எழுதியிருந்தாள் பவானி.

"ஏன், அண்ணாவே அழைத்து வருகிறார், அம்மாவையும், மனைவியையும்!" என்று சத்யமூர்த்தி சொன்னபோது, பவானி, "அதென்னமோ, எழுதிவிட்டேன்; நானே போகிறது தான் நல்லது! உங்களுக்குத் தான் கொஞ்ச நாளைக்கு என் தொல்லை வேண்டாமே! சித்ராவிற்கு முடியிறக்கணும் இந்த வருஷம். பெண் குழந்தைக்கு எத்தனை நாளைக்கு முடியிறக்காமலிருக்கிறதாம்! ஒன்றரை வயது ஆகிவிட்டதே!" என்று முடிவாக மொழிந்தாள். சத்யமூர்த்தி ஆமோதித்தார்.

"பெண்களுக்குப் பிறந்தகப் பாசம் அதிகம்தான்! நாங்கள் ஆண் பிள்ளைகள் இப்படிப் பாசம் வைக்கமாட்டோமம்மா!" என்று அவர் சிரிக்க, "எந்தப் பாசம்தான் ஜாஸ்தி ஆண்களுக்கு?" என்று பவானி கேட்க, "இந்தச் சித்ருவை என்னால் பிரிய முடியாது போலிருக்கே!" என்று அவர் மகளை அணை அணைத்து கொஞ்ச, சூழ்நிலையில் இனிமை சுரந்தது.

அண்ணாவிற்கும் மதனிக்கும் ஒரே பரிசாக மேஜை விளக்கு வாங்கிக் கொண்டு பிறந்தகம்

வந்தாள், பவானி.

வந்தன்று மாலையே விளக்கை எடுத்துக் கொடுத்தாள் பவானி. "மன்னி, ரூமிலே கொண்டுபோய் வைத்துக் கொள்!" என்றாள்.

சிரித்து மழுப்பியவாறே கையில் விளக்கை ஏந்தினாள் ராஜேசுவரி.

"ஏன், மன்னி, என்ன வெட்கமோ போ; நான் இப்படியெல்லாம் இருந்ததில்லையம்மா!" என்று சற்று அலுத்துக் கொண்டே சொன்னாள் பவானி.

சாரதாம்பாள் காப்பாற்றினாள் ராஜேசுவரியை. "ரகுபதி மொட்டை மாடியில் தான் படுத்துக் கொள்கிறான். நாங்கள்ளாம் கீழே தான் படுக்கை" என்றாள்.

"இதென்ன?"

"நீ வருகிறதாகக் கடிதாசி வந்ததா? பிள்ளைப்பேறு சமயத்தில், அறையை ஒழிக்கணும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். ரகுபதி, இப்பொழுதே புழுக்கமாய் இருக்கு, மாடியில் படுத்துக் கொள்றேன் என்று போனான்; இவளையும் போடி என்றேன். மாட்டேனென்று சொல்லிவிட்டாள்."

"எத்தனை நாளாய் இந்தக் கூத்து?"

"கூத்துமில்லை, சண்டையுமில்லை. ஒரு வாரமாய்த்தான்!"

ராஜேசுவரியை உற்றுப் பார்த்தாள் பவானி. "இப்படியும் ஒரு பெண் உண்டோ?" என்று நினைப்பவளாக நமுட்டு சிரிப்பு சிரித்தாள். அன்றிரவு அண்ணன் உலாவிவிட்டு வந்ததும், "அண்ணா, நான் கொண்டு வந்த மேஜை விளக்குக்கு உபயோகமில்லையா?" என்று கேட்டாள். "இல்லாமலா?" என்று கேட்டு ரகுபதி, அந்த விளக்கை வாசல் அறையில், தந்தையின் உபயோகத்திற்கு வைத்துவிட்டு வந்தான்!

பவானி அடிக்கடி அண்ணனையும், அண்ணியையும் கூர்ந்து நோக்கினாள். "சண்டையுமில்லை, பூசலுமில்லை, எங்களுக்குள்ளே!" என்று பவானிக்கு அறிவுறுத்தும் வண்ணம் ரகுபதியும், ராஜேசுவரியும் சந்தோஷமாகப் பார்த்துக் கொள்வார்கள், பேசிக் கொள்வார்கள். தாபத்தினால் வாடவில்லை என்று சொல்லும் அவர்களது முக விலாசம். உள்ள நிறைவிலேயே, இல்லற வாழ்வின் இன்பமனைத்தும் அள்ளி பருகும் உயர்ந்த பண்பினை அவர்களிடம் கண்டாள் பவானி.

"என் அம்மாவிடம் இருக்க எந்த நாட்டுப் பெண்ணுக்குக் கசக்கும்?" என்று சொன்னவளல்லவா பவானி? இப்பொழுது வேறுவிதமாக நினைக்கத் தொடங்கினாள்.

"இத்தகைய நாட்டுப் பெண்ணிடம் எந்த மாமியார் கசந்து கொள்வாள்?" என்று நினைத்தாள்.

இந்தக் கேள்வியை பவானி தானாகவே கேட்டுக் கொண்டபோது அவளுக்கு எவ்வித வருத்தமும் எழவில்லை. ஆனால் ராஜேசுவரியின் போதாத காலம், அந்தப் புகழுரை பவானியின் மாமியார் நாவிலே வந்தது!

கருவுற்று வந்திருக்கும் நாட்டுப் பெண்ணைப் பார்த்துவிட்டுப் போகணுமென்று ஜானம்மாள் சம்மந்தி வீடு வந்தாள். மரியாதைக்குரிய நாத்தனாரின் மாமியார் வந்துவிட்டதும், ராஜேசுவரி, தன் மாமியாரின் பங்கையும் சேர்த்துக் கொண்டு சம்மந்தியம்மாளை உபசரித்தாள். ஒவ்வொரு சிற அம்சமும் சிறக்க வேண்டுமென்று கருதுகிறவளாக ஓடியோடிப் பணியாற்றினாள்.

"ஒரு நிமிஷம் சும்மாயிருக்கமாட்டேனென்கிறாளே! என்ன துறுதுறுப்பு! சிறுசு இப்படியான்னா இருக்கணும்!" என்று வியப்பு மேலீட்டால் ஜானம்மாள் அசந்து போனாள். ராஜேசுவரியின் சுறுசுறுப்பு மட்டும் கண்டு மெச்சினாளா? ராஜேசுவரியின் கபடமற்ற பேச்சும் ஜானம்மாளைக் கவர்ந்தது. "கலியாணத்தில் அழுதயேடி பொண்ணே! இப்பொழுது ஒரே சிரிச்ச முகமாயிருக்கிறாயே, என்னடி மாயம்?" என்றாள்.

"சிரிச்சுக் கொண்டிருந்தவர்கள் அழக் கிளம்புகிறதுகளே புக்ககம் வந்ததும்! உம்மணாமூஞ்சியா விடுகிறதுகளே! இந்த பெண்ணைப் பாரேன்! ஜிமிக்கி இப்படி அப்படி ஆட கையை ஆட்டியாட்டிப் பேசுகிற அழகே போதுமே!" என்று கூட ஒளிவு மறைவில்லாமல் பாராட்டினாள்.

ராஜேசுவரி, ஜானம்மாளின் புகழுரைகளை அடக்கமாகவே ஏற்றாள்.

"காரியம் செய்யாமலென்ன? பிறந்த வீட்டில் இவள் தான் அம்மாவிற்கு மூத்தவள். எல்லாம் அடுத்தடுத்து நண்டும் சிண்டுமாக இருந்தால் இவளுக்குக் காரியம் வராமலென்ன? பவானி தான் ஒரே ஒரு பெண்ணாச்சு, செல்லமாகவே வளர்ந்துவிட்டாள். வளர்ந்துவிட்டாலும், கலியாணமானதும் குடித்தனம் போடும்படியாகிவிட்டது. எப்படியோ சமைத்து சமாளித்துவிட்டாளே! ரகுபதிக்கு வேலையாகி ராஜேசுவரி குடித்தனம் போடணுமென்றால், அவள் அம்மாவுக்கு என்ன சிரமம்? பவானிக்கு நான் தேங்காய்த் துருவல் முதற்கொண்டு பார்த்து வாங்கிக் கொடுக்கும்படியாச்சு. அது போலவா? கொண்டுவிட்டு விட்டு சம்மந்தியம்மாள் போனாள்; அதற்கு பிறகு நாட்டுப் பெண்ணை அனுப்பினோம், எங்கள் செலவில் தான். ஏதோ, இவள் கள்ளங்கபடமில்லாமலிருக்கிறாள், அதனால் மற்றதையெல்லாம் நான் பாராட்டுகிறதில்லை" என்று சாரதாம்பாள், இரண்டு சம்மந்தியம்மாளையும் தாக்காமல் தாக்கி, நாட்டுப் பெண்ணை மட்டும் தாக்காமலிருந்தாளே! இந்த நிலைமையில் ராஜேசுவரி எப்படி கலப்பற்ற பெருமிதமடைய முடியும்!

பவானி கல்கத்தாவிலிருந்து வந்த பிறகு சுமூகமாக வேலைகளை ஏவி உதவிகளை ஏற்றுக் கொண்டிருந்தாள்; ஜானம்மாள் வந்த பிறகு, மாமியாருக்குத் தனது பிறந்தகச் சலுகைகளைக் காட்ட விரும்பிகிறவளாக நடந்து கொள்ளத் தொடங்கினாள் கொஞ்ச நாள் தங்களுடன் வந்து தங்கும்படி மாமியார் அழைப்பாரோ என்னும் பீதியில், தன் உடம்பில் தோன்றாத அசதிகளையெல்லாம் கற்பனை செய்துவிட்டாள். சிறுசிறு காரியங்களைக் கூட உதவி ஏற்றுச் செய்தாள். "வெறும் உடம்பானால் தேவலையம்மா! வயிற்றிலிருக்கிற குழந்தைக்குத் தானே ஆபத்து!" என்று தயக்கமில்லாமல் சொன்னாள்.

பிறந்தகச் செல்வியாகக் தன்னை மாமியாரின் பார்வையிலே ஸ்தாபித்துக் கொள்ள விரும்பிய பவானி, தன் மாமியாரின் மதிப்பிலே ராஜேசுவரி, லட்சிய பெண்ணாகவும் மங்கையர் திலகமாகவும் பதிந்துவிட்டதையும், தன்பால் மாமியாரின் அலட்சியம் வளர்ந்து விட்டதையும், கண்டாள்.

"என் பேத்தி சித்ராவைப் பார்க்க வந்தேன், வேறென்ன. வந்த இடத்தில் கண்ணுக்கும் மனசுக்கும் சந்தோஷமாய் இருந்தாச்சு, போகிறேன்! ரகுபதிக்கு வாய்த்திருக்கிற அகமுடையாள் அவனுக்கு மேலே ஒரு படி நல்லவளாக இருக்கிறதையும் பார்த்தாச்சு. சேஷமமாயிருக்கட்டும், போய் வரேன்!" என்று விடை பெற்று மாமியார் வாசற்படியைத் தாண்டிடும் போதே பவானி, "கெட்டிக்கார மாமியார்!" என்று முணுமுணுத்தாள்.

அருகிலிருந்த ராஜேசுவரிக்கு, "கெட்டிக்காரத்தனத்திற்கு என்ன இருக்கிறது?" என்பது புரியவில்லை.

ஆனால் ஜானம்மாளும் சாரதாம்பாளும் ஒட்டியும் ஒட்டாதவர்களாகப் பேசிக் கொண்டதையும், தன் மாமியார் கூட ஜாடைமாடைகளாகப் பேசியதையும் நினைத்துப் பார்த்தபோது, அவளுக்கு ஒரு உண்மை புலனாயிற்று.

பவானியின் மாமியாருக்கும் பவானிக்கும் மன நெருக்கம் போதாதோ, என்ற கேள்வி எழுந்தது. ஜானம்மாள் தன்னிடம் மெல்லிய குரலில், "நீ உன் நாத்தனார் மாதிரி; ஆம்படையானை வேலைக்குப் போகச் சொல்லவில்லையா? உன் நாத்தனார் மாதிரி நீயும் குடித்தனம் போகவேண்டாமா?" என்று கேட்டாரே? எதற்காக? பவானி தன் கணவனை அவசரப்படுத்தினாள் என்று பவானியைத்தான் குறை கூறினாளோ?

ராஜேசுவரிக்கு குழம்பியது சிந்தனை. கலியாணமான நல்ல வேளையினால், பவானியின் புருஷருக்கு சீக்கிரம் வேலை கிடைத்ததாமே! பவானி எப்போது அவசரப்படுத்தியிருப்பாள்?

வேலைக்குப் போக ரகுபதி அவசரப்படவில்லை என்று தன் கணவனை குறை கூறுகிறாரோ ஜானம்மாள்? வேதனையாக இருந்தது அவளுக்கு. ஒரு வாரத்திற்கு முன் தன் தந்தை எழுதிய கடிதைப் பற்றி கணவன் முகம் சுண்ட சொன்னது நினைவிற்கு வந்தது. "இவர் ஏன் கவலைப்படுகிறார், எனக்கு வேலையாவதைப் பற்றி? நான் மாமனாரகத்தில்

உட்கார்ந்துவிடவில்லையே!" என்று ரகுபதி கையில் கடிதத்துடன் சமையலறையில் உட்கார்ந்துவிட்டானே!

ராஜேசுவரிக்கு ஜானம்மாளின் மீதும், தன் தந்தையின் மீதும் அதிருப்தி ஏற்பட்டது. 'வேலை இல்லாததனால் அவருக்கு என்ன குறைந்துவிட்டது?" என்று கருதினாள். அவ்விதம் நினைப்பதிலே தனக்கும் பெருமையிருப்பதாக நினைத்தாள்.

ஆனால் அந்த பெருமை சிதைந்தது.

பவானி தன் தாயிடம் முறையிட்டாள். "நாங்கள் வந்து விடணுமாம், ஊரோட! பிள்ளை வேலை ஏன் பார்க்கணும், கஷ்டப்படணும் என்கிறார் மாமியார்! எத்தனைதான் சொத்து கிடக்கட்டும், நிலபுலன் இருக்கட்டும், ஒரு புருஷன் உட்கார்ந்து சாப்பிட்டால் நன்றாயிருக்கிறதா? நம்ம காசு, நம்ம வேலை என்று கைப்பிடி இருந்தால் தானே மதிப்பு? கலியாணத்திற்கு முந்தியே, நல்ல வேளை, பத்து அப்ளிகேஷன்களைப் போட்டு வைக்கச் சொன்னோமோ, வேலை கிடைத்ததோ? வேலை பார்க்கிற உத்தேசம் இருந்தால் தான் முகூர்த்தம் வைக்க ஏற்பாடு ஆகும் என் அப்பாவும் சொன்னாரே, என்னுடைய நல்ல காலம் தான்! இல்லாவிட்டால், சொத்தே போதும் என்று சோம்பல் வந்திருக்க வேண்டியது தான்! பிள்ளை, தொலைதூரத்தில் இருக்கிறானே, என்று சொன்னால் ஆச்சா? நாளைக்கு இவர்களே, குந்தித் தின்றால் குன்றும் கரையுமே என்று சொல்லமாட்டார்களா என்ன? அப்பப்பா, நான் அங்கே இருந்தது சொற்ப நாள் தான். ஆனால் வருஷக் கணக்கில் இருந்தது போல் அலுத்துவிட்டது!" என்று பவானி முறையிட்டாள்.

ராஜேசுவரி, கிரகித்ததெல்லாம், "நமது காசு, நமது வேலை என்று கைப்பிடி இருந்தால் தானே மதிப்பு?" என்ற வாக்கியம் தான்.

'திரைகடலோடி திரவியம் தேடு' என்று மூதுரை இல்லையா? கல்கத்தா தொலை தூரம் என்று ஜானம்மாள் பிள்ளையைப் பிரிய மறுக்கக் கூடாது தான். அது போல .... '

"நானும் 'யுத்த சேவை' வேண்டாம்' என்று சொல்லக் கூடாதோ? கணவரை வேலைக்கு ஊக்க வேண்டியது தான் என் கடமையோ?" என்று சஞ்சலப்பட்டாள் அவள். பவானி தன்னைக் கனிவின்றியும் பொருட்டின்றியும் நடத்தத் தொடங்கிவிட்டாள் என்பதை திடீரென்று உணர்ந்தாள் ராஜேசுவரி. கைப்பிடிப் பொருள் கணவனுக்குத் தேவை, கைப்பிடி அன்பு தனக்குத் தேவை என்று அவளுடைய அந்தரங்கம் உணரத் தொடங்கியது. சிறு வீடு அது. இடவசதிகள் சொற்பம். அவளுக்கு என்று அந்த வீட்டில் ஒரு அற்ப சலுகை கூட இல்லை, தனிமை இல்லை. புத்தகம் படிக்கவோ, அல்லது சிறிது நேரம் பிறருடைய குறுக்கீடின்றி பாட்டுப் பழகவோ அவளுக்கு வசதியில்லை. இரவு துயிலும்முன் சிறிது நேரம் புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டிவிட்டு படித்ததாகப் பெருமைப்பட்டுக் கொண்டு அமைதியுடன் துயின்று கொண்டிருந்தாள் முன்பு. இப்பொழுது அதற்கும் தனிமையில்லை.

சங்கோசத்தினால், மாடியில் வானத்தின் கீழ் துயிலவும் கணவனைத் தொடர்ந்து செல்லவும் தயங்கியதற்காக சிறிதும் வருந்தாமலிந்த ராஜேசுவரி, நாளடைவில் தன்னையே நொந்து கொண்டாள். பிறரைக் குறை கூறும் நினைப்பே இல்லாமல் ஆத்ம சோதனையில் இறங்கிவிடுவாள்.

பவானி காவிரியின் கிளை நதியல்லவா? நடராஜன், "ராஜேசுவரியை, "காவிரி போல இரு!" என்று சொன்னதனால், பவானி, தன்னை ராஜேசுவரியின் கிளையாக்கிக் கொண்டு விட்டாள் போலும்!

**********